பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 26 வியாழக்கிழமை (10.02.2011)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 076



03 அரசிடம் திட்டம், கொள்கை இல்லை



06 20 கோடி கிலோ கடலுணவுகள்



07 தலைவனுக்கு மதிப்பு



11 நிவாரணத்துக்குரிய நடவடிக்கை



25 உலக விளையாட்டு வீரர்

# தோற்றுப்போனவர் சொல்ஹெய்ம் அவரது சேவை தேவை இல்லை

## அவரை ஏற்கப் போவதில்லை என்று சீறுகின்றார் பிரதமர்

கொழும்பு, பெப்ரவரி 10

விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களில் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை காட்டமாக விமர்சித்துள்ளது இலங்கை அரசு.

"சொல்ஹெய்ம் ஒரு தோற்றுப்போன அனுசரணையாளர். புலம்பெயர் தமிழருக்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பாடல் நபராக அவரை ஒருபோதும் பயன்படுத்தப் போவதில்லை. அவருடைய சேவை எமக்கு தேவையே இல்லை" - என்று சீறினார் பிரதமர் டி.எம்.ஜயரத்ன.

புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் "கலந்துரையாடல் பங்காளி"யாகத்தான் செயற்படலாம் என்று அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு சொல்ஹெய்ம் தெரிவித்த கருத்துக்கே பிரதமர் பதிலளித்துள்ளார். "சொந்த நலன்களுக்காகவே அனுசரணைப் பணிக்கு சொல்ஹெய்ம் முயல்கிறார். இனியொரு போதும் அதற்கு அனுமதிக்க மாட்டோம்" என்றார் பிரதமர்.

சொல்ஹெய்ம் விவகாரம் குறித்து பிரதமர் தெரிவித்ததாவது:-

சொல்ஹெய்மின் உதவி அரசுக்குத் தேவையில்லை. எதிர்காலத்தில் அவரை அனுசரணையாளராகப் பயன்படுத்தும் நோக்கம் எதுவும் எம்மிடம் இல்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் சாதகமான பேச்சுக்களை இலங்கை அரசு நடத்தி வருகிறது. அதில் மூன்றாம் தரப்பு ஒன்றின் தலையீடு ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சு (27 ஆம் பக்கம் பார்க்க)

### விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட

## ஸ்ரீ மகாபோதி அரச மரக்கிளை பவனியாக யாழ்.நகர் வந்தது



யாழ்ப்பாணம், பெப்.10

இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ள ஸ்ரீ மகாபோதியின் அரச மரத்தின் கிளை அனுராதபுரத்திலிருந்து நேற்று முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்டது. புத்த ஜெயந்தி வருடத்தின் 2600 ஆம் ஆண்டு நினைவாகவும், இலங்கையின் 30 வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையும் தொடர்ந்து இந்த நிகழ்வு ஏற்பாடு (27 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு நிதி வழங்க உலக நாடுகள் பின்னடிப்பு

நியூயோர்க், பெப். 10

இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்க உலக நாடுகள் பின்னடித்து வருகின்றன என்று நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உதவுமாறு ஐ.நா. உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. அதற்கு குறைந்தளவிலான பிரதிபலிப்புக்களே கிடைத்துள்ளன. இலங்கையின் வெளியுறவுக் கொள்கையால் ஏற்பட்ட அக்கறையற்ற நிலை காரணமாகவே உதவிக் கோரிக்கைக்கு அனைத்துலக நாடுகள் மற்றும் நிறுவனங்களிடம் வரவேற்புக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை (27 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைப் பிற்போட அரசு ஆலோசனை?

கொழும்பு, பெப். 10

உள்ளூராட்சித் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு அரச உயர் மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது என நம்பகமாகத் தெரியவருகிறது. ஜனநாயக சுதந்திர முன்னணித் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ஸ, ஜனசெத பெரமுன தலைவர் பத்தரமுல்ல தேரர் ஆகியோர் மழை, வெள்ளம் காரணமாக மக்கள் இடம் (27 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 10

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்யும்படி கேட்டு ஐக்கிய தேசிய கட்சி கொழும்பில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பொன்சேகா கைது செய்யப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததை ஒட்டி இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் தளபதியின் விடுதலை கோரி ஜே.வி.பி. வெலிக்கடைச் சிறையின் முன்பாக சத்தியாக்கிரகம் நடத்திய மறுநாள் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கம்பல் (27 ஆம் பக்கம் பார்க்க)



## தூத்துக்குடி துறைமுக பகுதியை பரிசோதித்தது இலங்கைக் குழு

தூத்துக்குடி, பெப். 10

அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்பு - தூத்துக்குடி இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பில் இலங்கையின் உயர் மட்டக் குழு ஒன்று தூத்துக்குடித் துறைமுக வளாகத்துக்குச் சென்று நிலைமைகளைப் பரிசோதித்தது.

இலங்கைக் குழுவுக்கு துறைமுக அமைச்சின் மேலதிக செயலாளர் அனுர (27 ஆம் பக்கம் பார்க்க)



உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களி லும் வெயிலுடன் கூடிய கால நிலை காணப்படும்.

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
மாசி 09, 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7377.44↑
மிலங்கா(MPI) 7203.95↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4413.07Mn
பங்குகளின் அளவு(No.) 103.89Mn
வியாபாரம்(No.) 25771
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
வரபோர 8500.00
ஓட்டோரோம் 754.00
ஹவுசிங் டிவலொப்மன்ற் 893.00
ஈஸ்ரேன் மேக்கன்ற் 835.02
ஈ பி கிறிபேசி 3900.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கெப்பிட்டல் டெவலப்பென்ற் 135.00
கொழும்பு பார்மசி 1600.00
எஸ் எம் பி லீசிங் 1.10
பெல்வத்தே சுகர் 43.00
டிரான்ஸ் கொரெல் 4.80
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யுத்தம் முடிவுற்று இரண்டு வருடங்களாகியும் நாட்டில் இன்னும் செல்வம் கொழிக்கவில்லையே

வளர்ந்த நாடுகளில் தமது வாகனங்களுக்கு எரிபொருள் களை நிறைத்துக்கொள்ள முடிய வில்லையே எனத் தடுமாறு கின்றனர். ஆனால் வறிய நாடு களில் தமது வயிற்றை நிரப்பிக் கொள்ள முடியவில்லையே என்று ஏங்குகின்றனர் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸ நாயக்க கூறுகின்றார். இதனை அவர் சர்வதேச பொருளாதார விற்பன்னர்களுள் ஒருவரான கலாநிதி சோமசுந்தரத்தின் அறிக் கையை மேற்கோள்காட்டி சபை யில் தெரிவித்தார்.

உலக நாடுகளின் அனைத்திலும் பொருளாதார நெருக்கடி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அமெ ரிக்கா ஒரு குபேர நாடு என்று கூறப்பட்ட போதும் அங்கு ஏற் பட்ட பொருளாதாரப் பாதிப்பி னால் பல பெரிய நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் இந்தப் பாதிப்பு ஏற்பட்டது. இந்தியாவின் நாணயத்தின் பெறுமதியும் குறைக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் நேற்று மாலை சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ தலைமையில் கூடியது. வழமையான வாய்மூல விடைக் காகப் பதின் மூன்று கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. எனினும் மூன்று கேள்விகளுக்கான விடை கள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப் பட்டன. ஏனைய அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் அளிக்க இரண்டு வாரம் முதல் இரண்டு மாதம் வரை கால அவகாசம் கேட்கப்பட்டது.

இதனால் சபையைச் சூடேற் றும் இடைக் கேள்விகளோ, சர்ச் சைகளோ நேற்று ஏற்படவில்லை. சில நிமிடங்களில் கேள்வி நேரம் முடிவடைந்து விட்டது.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்த படி ஏற்றுமதி இறக்குமதி ஒழுங்கு விதிகள் தொடர்பான இரண்டு விடயங்கள் சபையில் ஆராயப் பட்டன. இவற்றைப் பிரதமரின் சார்பில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க சபையில் முன்வைத்துப் பேசினார்.

உலக நாடுகள் பலவற்றி லும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பது போல் இங்கும் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. அதேவேளை, போர் நெருக்கடிக் கும் முகம் கொடுக்க நேரிட்டது.

### நெருக்கடிக்கு மத்தியிலும் அபிவிருத்தி

பெரும் போர், இயற்கை அழிவுகள் என்பவற்றிற்கும் மத்தியில் பெரும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளோம். துறைமுகம், விமானத்தளம் என்பவற்றை யும் அதிவேக ஓடுபாதைகளை யும் அமைத்து வருகின்றோம்.

இதன் ஒரு கட்டமாகத்தான் மின் சக்தியால் இயங்கும் வாக னங்களை இறக்குமதி செய்வ தற்கு வரிச் சலுகைகளை வழங்கி உள்ளோம். இப்படியான வாக னங்களை இறக்குமதி செய்வ தின் மூலம் எரிபொருள் விரயத் தைக் குறைக்க முடியும். சுற்றா டல் மாசடைவதைத் தடுக்க முடி யும்.

நாம் அபிவிருத்திப் பணியில் பல சவால்களை எதிர்கொண்டு பயணத்தை மேற்கொண்டுள் ளோம். இதற்கு எந்த வழியில் எதிர்ப்புக்கள் தோன்றினாலும் அதனை முறியடித்து வெற்றி கொள்வோம் என்றும் அமைச் சர் திஸநாயக்க கூறினார்.

### களை இழந்து போன சபை

அதி முக்கியமான இந்த இரண்டு விடயங்களைப் பொறுப் பான அமைச்சர் சபையில் சமர்ப்பித்த வேளையில் ஆளும் தரப்பு ஆசனங்களில் 99 சதவீத மானவை வெறிச்சோடிக் காணப் பட்டன.

அமைச்சர் அனுர பிரியதர் ஷன யாப்பா, மூத்த அமைச்சர் டி.யூ.குணசேகர ஆளும் கட்சி உறுப்பினர்களான தினும் அமு னுகம, ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகி யோர் மட்டுமே சபையில் இருந் தனர். அதேபோன்று எதிர்த்தரப் பிலும் எதிர்க்கட்சிக் கொறடா வான ஜோன் அமரதுங்க, அனுர குமார திஸநாயக்க, ஹர்ஷா டி சில்வா, தயாசிறி ஜயசேகர, அர் ஜுன ரணதுங்க ஆகியோர் மட் டுமே காணப்பட்டனர்.

இதனால் சபைகளை இழந்து காணப்பட்டது. பின்னரும் சில உறுப்பினர்கள் அவ்வப்போது வந்து வந்து போனபோதும் சபை யில் நாற்காலிகள் மட்டுமே காணப்பட்டன என்பதும் சுட் டிக்காட்டப்பட வேண்டிய ஒன் றாகும்.

### ஒரு குண்டு போட 8000 ரூபா செலவு இப்போது இல்லை தானே

நாட்டில் ஏற்பட்டுள்ள விலை வாசி உயர்வு, பொருளாதார வீழ்ச்சியும், வேலை இல்லாத் திண்டாட்டமும் வறுமை என்ப வற்றிற்கு எல்லாம் காரணம் போர்தான். ஒரு குண்டைப் போடுவதற்கு எண்ணாயிரம் ரூபா செலவாகின்றது. வருமானம் அனைத்தும் போருக்காகவே செலவிடப்பட வேண்டிய கட் டாயம் ஏற்பட்டுள்ளது. போர் முடிந்து விட்டால் நாட்டைச் செல்வம் கொழிக்கும் பூமியாக மாற்றிவிடுவோம் நாட்டு மக்க ளுக்கு எல்லாச் சலுகைகளை யும் வழங்குவோம் என்று கூறி னார்கள்.

இப்பொழுது போர் முடிந்து




இரண்டு வருடங்கள் முடி வடைந்து விட்டன. ஆனால் இன்றுவரை மக்களுக்கு எது வும் கிடைக்கவில்லை. நீங்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல் லாம் என்ன ஆகிவிட்டன. அன் றாடம் உழைத்துச் சாப்பிடும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் எனப் பல தரப்பட்ட வர்களும் ஒரு வேளை சாப் பாட்டுக்கே திண்டாடி வருகின் றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை நீக்கி மக்களுக்கு உண வளிக்க முடியாத அரசு, ஆடம் பர வாகனங்களுக்கு வரிச் சலுகை வழங்க முன்வந்துள்ளமை வேத னைக்குரியது என்று சுட்டிக் காட்டினார் எதிர்க் கட்சிக் கொற டாவான ஜோன் அமரதுங்க.

### ஏணியை உதைத்து விட்ட அரசு

இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்காளிகளாக இருந்தவர்கள் நாங்கள். மஹிந்த சிந்தனையை மக்கள் முன் கொண்டு சென்ற வர்கள் நாங்களே என்று உரிமை கொண்டாடினர் ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி. அதேவேளை மற்றும் ஒரு விடயத்தையும் அவர் சுட் டிக்காட்டினார்.

உங்களுடைய மஹிந்த சிந் தனையில் முக்கியமான ஒரு விடயத்தை எல்லோரும் ஒதுக்கி விட்டனர். அதாவது நாடா ளுமன்ற உறுப்பினர்கள், அமைச் சர்கள் மற்றும் அரச கூட்டுத் தாபன தலைவர்கள் அனை வரினதும் செயற்பாடுகள் தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்காணிப்பு குழுக்கள் அமைக் கப்படும் என்று கூறப்பட்டுள் ளது. இதை மறந்து விட்டதால் தான் இன்று ஊழல் மோசடிகள் சுரண்டல்கள் எல்லாம் மலிந்து விட்டன. ஏறிவந்த ஏணியை உதைத்துத் தள்ளி விட்டனர் என்று குற்றம் சுமத்தவும் சுனில் ஹந்துன்நெத்தி தவறவில்லை.

இங்கு மக்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்குத் திண்டாடும்நிலை. ஆனால் அமைச் சர்களோ வெளி நாடு செல்லும் போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தங்கும் தோட்டங்களில் தான் தங்குகிறார்கள் - பொது மக் களின் பணத்தை கோடிகோடியாக வீண் விரயம் செய்கின்றனர் என் றும்சுனில்ஹந்துன்நெத்திகூறினார்.

### அதி ஆடம்பரக் கார் இறக்குமதியில் ஊழல் மோசடி

இந்த விவாதத்தின் போது உரையாற்றிய எதிர்க் கட்சி உறுப்பினரான ஹர்ஷா டி.சில்வா ஒரு விடயத்தை அம்பலப் படுத் தினார். அதாவது அரசு அதி நவீன வசதிகளுடன் கூடிய ஆடம்பரக் கார்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி உள்ளது.

உதயன் சபைச் செய்தியாளர்
**இரா. புத்திரசிகாமணி**

இந்தக் கார்களில் படுக்கை உட்பட, மதுபானம் அருந்தும் அறை, குளிசாதனப் பெட்டி எனச் சகல வசதிகளும் உண்டு. இதில் 26 பேர் பயணம் செய்ய முடியும்.

ஆனால், இந்த நவீன ஆடம்பரங்களுக்குப் பயணிகள் வாகனத்துக்கான இறக்குமதித் தீர்வை மட்டுமே விதிக்கப்பட் டுள்ளது. இது ஒரு பெரும் மோச டியாகும் என்று ஹர்ஷா சுட்டிக் காட்டினார். அரச தரப்பில் இதற் கான பதில் ஏதும் இல்லை.

# நிகழ்வுகள்

### பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வது இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு.மகேந்திரன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் மருத்துவ பீடத் துக்கு தகுதி பெற்ற மாணவர்கள் உட்பட ஏனைய மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வை கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### அதிபர்கள் கூட்டம்

வடமராட்சி, பெப்.10

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர் களுக்கான அவசர கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஒ-10-236)

### அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

அச்சுவேலி, பெப்.10

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சங்க உறுப்பினர் கள், பெற்றோர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

### கலந்துரையாடல்

சங்கானை, பெப்.10

வலிகாமம் மேற்குப் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதி யர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது என வலி.மேற்கு ஓய்வூதியர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் சகல ஓய்வூதியர் களையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அறிவித் துள்ளார்.

(ற-29)

# அரசிடம் திட்டமிட்ட கொள்கை இல்லை அதனாலேயே பொருளாதாரச் சீரழிவு

## ஜே.வி.பி. உறுப்பினர் தாக்கு



கொழும்பு, பெப். 10

இன்றைய அரசிடம் உறுதியாகத் திட்டமிடப்பட்ட பொருளாதாரக் கொள்கை எதுவும் இல்லை. அதனாலேயே இன்று பெரும் பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி அரசின் மீது குற்றம் சுமத்துகின்றார்.

மின்சாரத்தால் இயங்கும் கார்களை இறக்குமதி செய்வதற்கு வரிச்சலுகை அளிப்பது தொடர்பான ஒழுங்குவிதிகளை அமுல் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இப்படி அவர் கூறினார்.

விவாதத்தை முன்வைத்துப் பேசிய உயர் கல்வி அமைச்சர் கற்பனையில் படித்த அபூர்வ நாடு ஒன்றை இங்கே காட்டினார். அவர் காட்டிய நாட்டில் பீட்ரூட்டும், கரட்டும் வீதியில் கிடக்கின்றன.

ஐயாயிரம் ரூபா அச்சிடப்பட்டுவிட்டது. இதனால் ஆயிரம் ரூபா நோட்டில் எமது சிறுவர்கள் பீடி சுருட்டிக் குடிக்கின்றார்கள். வறுமை ஒழிக்கப்பட்டுள்ளது என்பது போல் கற்பனை உலகத்தில் மிதந்து கொண்டு பேசுகின்றார். இது யாரை ஏமாற்றுவதற்கு.

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் உள்நாட்டு உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரம் அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மே மாத அளவில் பெரும் பஞ்சத்துக்கும், பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்கவேண்டிய சவால் எம்மை அச்சுறுத்துகின்றது.

வறுமையை எப்படி ஒழிப்பது, பட்டினிச் சாவில் இருந்து மக்களை எப்படிப் பாதுகாப்பது என்று அரசோ, அமைச்சர்களோ ஆலோசனை நடத்துவது இல்லை.

அமைச்சர்களும், அரச தரப்பு உறுப்பினர்களும் தமது தொகுதிகளுக்குச் செல்ல முடியாது, மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது இருக்கின்றனர்.

அன்றாட வாழ்க்கையில் மூன்றுவேளை சாப்பாடும் கேள்விக்குறியாகிவிட்டது. ஒருவேளை உணவும் கிடைக்காமல் பட்டினி சாவுகளும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், அவற்றை எதிர்கொள்வது தொடர்பாக ஆராய்வதை விட்டு இங்கே மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வரிச்சலுகை வழங்குவது பற்றி விவாதிக்கின்றோம். இது இன்று அவசியம் தானா?

பொருளாதார வீழ்ச்சிக்கு, விலைவாசி உயர்வுக்கு, பட்டினி சாவுகளுக்கு, பொருள்களின் விலை அதிகரிப்புக்கு, வெள்ள நிவாரணத்துக்கு, தினசரி இடம்பெறும் கொலை, கொள்ளைகளுக்குப் பதில் சொல்ல எவரும் இல்லை.

இதனால் நாட்டு மக்கள் இந்த அதிஉயர் நாடாளுமன்றத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்றும் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார்.

# லட்சக்கணக்கான மக்களின் அ.அட்டைகள் வெள்ளத்தில்

## புதிதாக வழங்குமாறு ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, பெப்.10

கடும் மழை, வெள்ளம் காரணமாக நாட்டில் லட்சக்கணக்கானோரின் தேசிய அடையாள அட்டைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று கூறிய ஐ.தே.க., வாக்குக் கொள்ளையைத் தடுப்பதற்காகத் தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கு முன் புதிய அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்று கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பியான பி.ஹரிஸன் கூறியவை வருமாறு:-

நாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக 17 மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. தேசிய அனர்த்த நிலையைப் பிரகடனப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று நாம் அரசிடம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தோம்.

பாதிக்கப்பட்ட மக்களை அரசு கவனிப்பது போதாது. வெள்ளம் ஏற்பட்டால் சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்படுவார்கள் என்று அரசு கவலைப்படுகிறதே தவிர பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

இந்த வெள்ள அனர்த்தத்தால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

லட்சக்கணக்கானோரின் தேசிய அடையாள அட்டைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இதனால் தேர்தலின்போது வாக்குக்கொள்ளை இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

இழக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளை வழங்க தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுப்பாரா? இது தொடர்பாக அவர் எம்மிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிவரும் - என்றார்.

# பிரிட்டனில் புதிய தடை

கொழும்பு, பெப்.10


பிரிட்டனுக்கு கல்வி கற்கச் செல்லும் ஐரோப்பிய ஒன்றியம் தவிர்ந்த ஏனைய நாட்டு மாணவர்கள், அங்கு பகுதிநேரப் பணியில் ஈடுபடுவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

அதிகளவான ஆசிய மாணவர்கள் பிரிட்டனில் பகுதிநேரப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி விசாவில் பிரிட்டனுக்கு கல்வி கற்க வரும் மாணவர்கள் இங்குள்ள வேலை வாய்ப்புகளைப் பெறுவதால் உள்ளூர் மக்களுக்கு வேலையில்லாப் பிரச்சினை ஏற்படுகிறது. இதன் காரணமாகவே இத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது - என்று பிரிட்டிஸ் குடியேற்றத்துறை அமைச்சர் டாமியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

(ஒ-சி)

## அரசியல் அனுதாபம்...



அவசர உத்தரவு: ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட ரம்பேவ பிரதேச மக்களை நேற்றுக் காலை சென்று பார்வையிட்டு, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# 14 வீதிகள் புனரமைப்பு

கோப்பாய், பெப்.10

வளவாய்- இடைக்காடு பகுதியில் புதிதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் 14 வீதிகள் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 43.55 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதற்குரிய பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வேலைகள் தொடங்கியுள்ளன.

இதற்கு மக்களின் பங்குபற்றலுடனான அபிவிருத்தி சம்பந்தமாகக் கிராமிய மதிப்பீடு பிரதேச செயலகமூடாக நடைபெற்றதைத் தொடர்ந்து இப்பணிகள் ஆரம்பமாகின.

இப்பிரதேசத்தில் கடந்த வருட முற்பகுதியிலேயே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதுடன் வீதிகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-72)

# வேட்பாளர் இலக்கங்கள் வழங்கியதும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரிப்பு

## இதுவரை 58 முறைப்பாடுகள் என்கிறது 'கபே'

கொழும்பு, பெப்.10

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் போட்டி இலக்கங்கள் வழங்கப்பட்டதுடன் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

இது குறித்து கபே இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உள்ளூராட்சித் சபைத்தேர்தலை முன்னிட்டு பாரதூரமான 14 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதென அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அரச சொத்துக்களை பயன்படுத்தியது தொடர்பில் 4 முறைப்பாடுகளும், அச்சுறுத்தல் தொடர்பில் 4 முறைப்பாடுகளும், சட்டவிரோத பிரச்சாரங்கள் குறித்து 36 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக 58 முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென கபே இயக்கம் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கஹவத்தை, அக்கரைப்பற்று மற்றும் பெந்தோட்டை ஆகிய பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மூன்று பதிவாகியுள்ளன.

இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, காலி, அம்பாறை, கம்பஹா மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வேட்பாளர் போட்டி இலக்கம் வழங்கப்பட்டதன் பின்னர் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளை வேகமாக ஆரம்பித்துள்ளதால் தேர்தல் வன்முறைகள் மற்றும் சட்டவிரோதப் பிரசாரங்கள் அதிகரித்துள்ளன.

தேர்தல் சட்டத்தை பாதுகாப்பதற்காக தேர்தல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் விரைந்து செயற்பட வேண்டும் என 'கபே' இயக்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

(ஒ)

# பஸ் கட்டணத்தை 4 வீதம் அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப்.10

தனியார் பஸ் கட்டணத்தை .4 சதவீதத்தால் அதிகரிக்கும்படி தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

லங்கா இந்தியன் ஒயில் கம்பனி எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமையாலேயே பஸ் கட்டணத்தை அதிகரிக்க நேர்ந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு 4 சதவீத பஸ் கட்டண உயர்வை அனுமதிக்கவேண்டும். பஸ் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிக்காவிடின் பஸ் உரிமையாளர்கள் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாவர்.

அத்துடன் ஏனைய எரிபொருள் கம்பனிகளும் விலைகளை அதிகரிக்கவுள்ளன. அப்படி அதிகரிக்கப்பட்டால் பஸ் கட்டண அதிகரிப்பைத் தவிர்க்க முடியாது.

இது தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்துமாறு கோரி போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம் - என்றார்.

அதேவேளை, லங்கா இந்தியன்ஒயில் கம்பனி டீசல் விலையை அண்மையில் அதிகரித்ததை அடுத்து பஸ் கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

# நோயாளியை மயக்கமுறச் செய்யாமல் வெற்றிகரமாக இருதய சத்திர சிகிச்சை

## கண்டி மருத்துவர்கள் பெரும் சாதனை

கண்டி, பெப்.10

கண்டி மத்திய மருத்துவமனையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் முதற்தடவையாக இருதய நாளங்களை மாற்றி இணைக்கும் சத்திரசிகிச்சையொன்று நோயாளியை மயக்கமுறச் செய்யாது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் இருதய சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணரான ஜீ.காந்தி தலைமையிலான மருத்துவர்கள் குழுவே இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

38 வயதான கம்பளை வாசியான மஹிந்த கல்லியத்த என்ற இருதய நோயாளிக்கே வெற்றிகரமாக இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் நல்ல நிலையில் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சத்திர சிகிச்சை முடிவுற்றுச் சில நிமிடங்களின் பின்னர் மருத்துவர்களின் பரிந்துரைகளுக்கு அமைய எந்தவொரு நீர்ப்பானத்தையும் அருந்தும் ஆற்றல் நோயாளிக்குக் கிட்டியிருந்ததாகவும் மருத்துவ நிபுணர் ஜீ.காந்தி தெரிவித்தார்.

மேலும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் வலி ஏற்படாதிருக்கும் விசேட ஊசிமருந்து நோயாளியின் உடலில் ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளமையே இச்சத்திர சிகிச்சையின் விசேட அம்சமாகும். (ஒ-22)

# வெள்ளம் பாதித்த பிரதேச மக்களுக்கு காய்ச்சல் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

கொழும்பு,பெப்.10

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள மக்களிடையே பல்வேறு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளது.

இதனால் உடனடியாக அவர்களுக்கு காய்ச்சல் தடுப்பூசியை ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்டச் செயலரின் பணிமனையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் பாலித மஹிபால இத்தகவலை வெளியிட்டார்.

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு குப்பை கூழங்கள் அகற்றுவதற்கு வழியில்லை. கழிவறை வசதிகளும் போதுமான அளவு இல்லை. பல இடங்களில் இன்னும் வெள்ளம் வடியவில்லை. இக்காரணங்களால் தொற்று நோய்கள் விரைவாகப் பரவ வாய்ப்புண்டு.

எனவே அகதிமுகாம்களில் சேரும் குப்பை கூழங்களை அகற்றவும் தற்காலிக கழிவறைகளை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென மேலதிக செயலாளர் கூறினார்.

. வெள்ளம் வடியாத பகுதிகளில் டெங்கு நோய் பரவும் அபாயமுள்ளதால் அப்பகுதிகளில் கொடிய பீ.டீ.டீ. பக்டீரியாக்களை விசிறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-5)

# உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்கு 30 கோடியை கோருகிறது பொலிஸ்

உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்காக தேர்தல்கள் செயலகத்திலிருந்து 30 கோடி ரூபாவை பொலிஸ் திணைக்களம் கோரியுள்ளது. தேர்தல் சமயத்தில் வழங்கப்படவுள்ள பாதுகாப்பு மற்றும் தேர்தல் விளம்பரங்கள், சுவரொட்டிகள், பதாதைகள் போன்றவற்றை அகற்றுதல் போன்ற பணிகளுக்காக இத்தொகை தேவைப்படுவதாகப் பொலிஸ் தலைமையகம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திசாநாயக்க விடம் கோரிக்கைவிடுத்துள்ளது. தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துடன் பொலிஸ்அதிகாரிகள்மேற்கொண்ட சந்திப்பொன்றின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. பொலிஸ் திணைக்களத்தின் சார்பாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது சுவரொட்டிகள், பதாதைகள், விளம்பரங்கள் ஆகியவற்றை எதிர்பார்த்த அளவு பொலிஸார் அகற்றவில்லையெனவும் அதன் காரணமாக இம்முறை பொலிஸ் திணைக்களம் கோரியுள்ள 30 கோடி ரூபா முற்றாக வழங்கப்படும் சாத்தியமில்லை எனவும் தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-5)

# தந்தையின் மரணச் செய்தி அறிந்த மகளும் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,பெப்.10

தந்தையின் திடீர் மரணச் செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்து மயங்கி வீழ்ந்த மகளும் சிறிது நேரத்தில் உயிரிழந்தார். இதைச் சம்பவம் கோப்பாய் தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த போ.பொன்னுத்துரை, அவரது மகளான நா.நாகேஸ்வரி ஆகியோரே சில மணிநேர இடைவெளியில் இவ்வாறு மரணமானவர்களாவர். ஏற்கனவே சுகயீனமடைந்த தந்தையான பொன்னுத்துரையின் செய்தி மகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனால் அவர் மயக்கமுற்று வீழ்ந்தார். உடனடியாக இவர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது வழியில் அவரது உயிர் பிரிந்தது.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை உண்டு பண்ணியுள்ளது.

தந்தையின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமையும், மகளின் சடலம் நேற்றுப் புதன் கிழமையும் தகனம் செய்யப்பட்டன. (த-26)

# தோட்டங்களில் இரவில் காவல்

வலி. கிழக்குப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் இரவு வேளைகளில் விவசாயிகள் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது விவசாய நிலங்களில் பயிரிடப்படும் மரக்கறி வகைகள் இரவில் இனந்தெரியாதோரால் திருடப்படுவதையடுத்தே இவர்கள் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதி நிலங்களில் இம்முறை அதிக அளவில் வெங்காயம், மிளகாய், கோவா போன்ற மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. இதனையடுத்து விவசாயிகள் இரவில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (த-26)

## மரண அறிவித்தல்

*வேலாயுதர் மயிர்வாகனம்*

இணுவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் மயிர்வாகனம் கடந்த (08.02.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்
M. ஜீவகுமார் (மருமகன்).

# வங்கி அலுவலகத்தில் அடையாள அட்டைகள்

சாவகச்சேரி மக்கள் வங்கியில் தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் கிளை அலுவலகத்தில் உள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். அடையாள அட்டைகளுக்குரியவர்கள் வருமாறு:

கி.தவமணி (கைதடி), கா.சிவராஜா (சாவகச்சேரி), பா.மங்களேஸ்வரி (பரந்தன்), யோ.மதிசுதன் (கனகாம்பிகைக்குளம்), பா.சந்திரன் (நுணாவில் மேற்கு), உ.ஜெயசுதா (சரசாலை), எம்.சுவேந்தினி (புலோப்பளை), செ.ஜெகதீசராசா (சங்கத்தானை), வே.பாலச்சந்திரன் (கல்வயல்), சி.வடிவாம்பாள் (கைதடி), செ.யோகம்மா (மந்துவில்), பீ.ஏ.காமினி பெரேரா (வெலிகந்த), கே.எஸ். சமிந்த திஸநாயக்க (குருவிட்ட). (ஒ-207)

## Hatton National Bank

### வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான அறிவித்தல்

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது மேற்தர வங்கிக் கிளையானது வாடிக்கையாளர் நலன் கருதி எதிர்வரும் 13.02.2011 முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை வங்கிச் சேவைக்காகத் திறந்திருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*"ஹற்றன் நஷனல் வங்கி உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி"*

முகாமையாளர்,
யாழ்.கிளை

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1267 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் 15 29 32 43 08-02-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 5,704,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 233,107 | 20/- | 4,662,140/- |
| 2 இலக்கங்கள் | 21,402 | 40/- | 856,080/- |
| 1 இல. + லக்கினம் | 21,265 | 60/- | 1,275,900/- |
| 2 இல. + லக்கினம் | 1,938 | 200/- | 387,600/- |
| 3 இலக்கங்கள் | 574 | 1000/- | 574,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,704,125/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,785,720/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 626 | | 811,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 278,958 | | 9,597,220/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,225,125/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 13 23 33 51

ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 623 | 500/- | 311,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 626 | | 811,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

## German swiss மொழிகள்

German swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் German Embassy யில் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு நடை பெறுகின்றது.

10, Palaly Road, Jaffna. T.P: 077 1604823

## வீடுவிற்பனைக்கு

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் கோயிலுக்கு அருகில் 2 ½ பரப்பில், 4 அறைகள், 2 கோல், கிச்சின், அற்றாச் பாத்றூம், ரொயிலட், பைப் வசதிகள், சுற்றிவர சுற்று மதில் என அனைத்து வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773273125

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 32, மூலம், செவ்வாய் தோஷமில்லாத பாவம் 27 U.K P.R மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

இளங்கோ திருமணசேவை
16, E.S. பெனான்டோ மாவத்தை,
வெள்ளவத்தை.
011 3443051

## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை

**வெற்றிடங்கள்:**
கனிஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)

**தகைமை:**
க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும். உயரம் 5'4''

**வயதெல்லை:** 26 வயதுக்கு மேற்பட்டோர்

**நேர்முகப்பரீட்சை:**
12.02.2011 அன்று முற்பகல் 10 மணிக்கு 651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

**ஆவணங்கள்:**
கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்துக்குட்பட்டது).பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரம்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதியுடனும் போட்டோப் பிரதியுடனும் வருகை தரவும்.

651/12, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (085)

பணிப்பாளர்.

உதயன்

# அமெரிக்காவின் கரிசனையும் தேசிய இணக்கப்பாடும்

நடந்து முடிந்த கொடியபோரின் இறுதிக்கட்டத்தில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்ற புள்ளி விவரங்கள் இன்னமும் அச்சொட்டாக அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு புள்ளிவிவரங்கள் ஏதும் வெளியிடப்பட்டால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனைபேர், இலங்கை அரசின் முப்படைகளையும் சேர்ந்தவர்கள் எத்தனைபேர் என்பவை ஓரளவு தெரியவந்தாலும் இந்தப்போரில் இடையில் சிக்கியவர்கள் மற்றும் வேண்டுமென்றே கொல்லப்பட்ட பொது மக்களின் புள்ளிவிவரங்கள் நிச்சயமாக அச்சொட்டாக வெளிவரும் என்று எதிர்பார்க்கமுடியாது.

இந்தப் போரில் பொதுமக்கள் எவரும் ஆயுதப்படைகளால் கொல்லப்படவில்லையென்று நாட்டின் ஜனாதிபதியே பலதடவைகளில் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

ஆனால் வன்னியில் போரின் போது குற்றுயிரோடும் குறை உயிரோடும் தப்பித்து ஓடிவந்து முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கித் தம் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டவர்கள் மத்தியில் விவர சேகரிப்பு ஏதும் நடத்தப்படுமானல் அப்படியானவர் களுடன் போரின்போது தங்கியிருந்தவர்கள் கொல்லப்பட்டவர்கள், அங்கவீனமுற்றவர்கள் போன்ற விவரங்கள் மட்டுமல்ல அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கான காரணத்தையும் விவரமாகக்கண்டு கொண்டுவிடலாம். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றி பலரும் பலவிதமாகக் கூறிவருகின்றனர்.

இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கானவர்கள் மனிதாபிமான மற்ற முறையில் குண்டுவீசிக்கொல்லப்பட்டனர் என்பது பொதுவான குற்றசாட்டாகவிருக்கின்றது. இந்த அடிப்படையிலேயே இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாகவும் உரிமைமீறல்கள் இடம்பெற்றதாகவும் சர்வதேச மட்டங்களில் இலங்கை அரசின் மீதும் அதன் போர் நடவடிக்கைகள் மீதும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. விடுதலைப்புலிகளும் இதேவித மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளனர் என்பதும் குற்றச்சாட்டாகும்.

இவைகளை வைத்தே ஐ.நா.செயலாளர்நாயகம் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆய்வுகளை நடத்தக் குழு ஒன்றை நியமித்தார். தமக்கு ஆலோசனைகள் வழங்கவும் நிபுணர்குழுவொன்றை நியமித்தார். அந்தக் குழுவினர் இலங்கைக்கு வந்து விசாரணைகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ள விரும்பினாலும் அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக விசாரணைகளை நடத்தவும் அறிக்கை தயா ரித்து பரிந்துரைகளை வழங்கவும் என ஆணைக்குழுவொன்றை அரசு நியமித்தது. அந்தக் குழு போர் இடம்பெற்ற பகுதிகள் பலவற்றுக்கும் சென்று தன் விசாரணைகளை நடத்தியிருக்கிறது. இந்த விசார ணைகள் விரைவில் முடிவுற்று ஆணைக்குழு தனது அறிக்கையை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உண்மையில் இந்தக் குழுவின் அறிக்கை தேசிய நல்லிணக்கத்துக்கான ஆலோசனைகளைக் கொண்டிருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களான தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்களப் பேரினத்துக்குமிடையில் பூசல்களும், பிரச்சினைகளும் ஏற்பட்டமைக்கான காரணங்களை மட்டுமல்ல அவைகளைத் தீர்த்து வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் அவை கள் தோல்வியுற்றதன் காரணங்களையும் கூட குழு கண்டறியும் என்று எதிர்பார்க்கவேண்டும். அத்துடன் போர் ஏற்பட்டதற்கான காரணங்களை இந்தக்குழு கோடிட்டுக் காட்டுவதோடு இனிமேலும் நாட்டு மக்கள் அனைவரும் அமைதியாகவும் ஒற்றுமையோடும் இணக்கப்பாட்டுடனும் வாழ்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கக்கூடும் என்று எதிர் பார்ப்பதில் தவறில்லை.

இது இவ்வாறிருக்க ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு இன்னமும் ஆரம்பநிலையிலேயே இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒருவேளை இலங்கை அரசு நியமித்துள்ள தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு வெளியிடப்போகும் அறிக்கையை எதிர்பார்த்து ஐ.நா.செயலாளர் நாயகம் தமது குழுவின் செயற்பாடுகளை தாமதப்படுத்தி வரக்கூடும் என்ற கருத்தும் எழுகின்றது.

எது எப்படியானாலும் இலங்கையில் உண்மையான தேசிய இணக்கப்பாடு ஏற்படுவதையே உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன என்பதை மறுக்கமுடியாது. இதைத்தான் இலங்கையில் முன்னர்அமெரிக்கத் தூதுவராக இருந்துள்ள ரெரசிட்டா ஸ்சாபர் சென்னையில் வற்புறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்ற அமெரிக்காவின் கரிசனை சாதாரண விடயமல்ல. அங்கு அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்துள்ள உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டம் மிகக் கொடூரமாக இருந்துள்ளது என்பதற்கு ஆதாரங்கள் உண்டு என்று ஸ்சாபர் அம்மையார் சென்னையில் ஒரு கலந்துரையாடலின் போது கூறியுள்ளார்.

மீள் இணக்கப்பாடு தொடர்பாக இலங்கைத் தலைவரை எவ்வாறு இணங்கச் செய்யலாம் என்பது தமக்குப் புரியவில்லையென்று கூறியுள்ள அவர் இணக்கப்பாட்டுக்கான முயற்சிகளை வரவேற்றுள்ளார். இதில் போர் விடயமாகவும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

தேசிய இணக்கப்பாடு என்பது பேரின மக்கள் தாம் விரும்பியதை சிறுபான்மையோர்மீது திணிப்பதாக இருக்க முடியாது - சகல பிரிவின ரும் இணங்கிப்போகும் தன்மையைக் கொண்ட தீர்வாகவே அது அமைதல் வேண்டும்.

# கம்பன் கழகம் நடத்தும் பேச்சு, கவிதைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 10

ஆண்டுதோறும் கம்பன் விழாவினை நடத்திவரும் கொழும்பு கம்பன்கழகம் 2011 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவை, எதிர் வரும் ஏப்ரல் மாதம் நடத்தவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டுக் கழகம் நடத்தவுள்ள பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் குறித்த விவரங்களைக் கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

35 வயதுக்குட்பட்ட போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப்பெயர், வயது, முகவரி, மாணவராயின் பாடசாலை, கலந்துகொள்ள வுள்ள போட்டி முதலிய விவரங்களைச் சுட்டி, இல.12, இராமகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 எனும் முகவரிக்கு மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும்.

பேச்சு மற்றும் கவிதைப் போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்பு கம்பன்கழகம் அறிவித்துள்ளது. மேலும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள. (த)

# கொடிகாமம் பொது சந்தையில் தரகர்கள் பெரும் அட்டகாசம்

கொடிகாமம், பெப்.10

கொடிகாமம் பொதுச்சந்தையின் தேங்காய் விற்பனைப் பிரிவில் தரகு வியாபாரிகளின் அட்டகாசம்மேலோங்கி உள்ளதுடன்தனிப்பட்ட பாவனையாளர்கள் தமது தேவைக்கு வியாபாரிகளிடமிருந்தே அவற்றைக் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரும் போதே இவர்கள் உரிய சாக்குப்பைகளைப் பறித்து தமது விருப்பில் அவற்றுக்கு விலையைப் பேசி எடுத்து விடுவதுடன் கூறிய விலைக்கும் குறை வாகவே பணத்தைக் கொடுக்கும் வியாபாரி கள் பலர் இங்கு செயற்படுகின்றனர்.

தற்சமயம் தேங்காய் விலை உச்ச நிலையில் உள்ளதால் பாவனையாளர்களும் தேங்காய் விற்கவருபவர்களும் அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இங்கிருந்தே வலிகாமம், யாழ்ப்பாணம், மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்குத் தேங்காய்கள் பெரும் எண்ணிக்கையில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

அதேசமயம் இங்கு 25 இற்கும் மேற்பட்ட நிரந்தர வியாபாரிகள் தேங்காய்களை வாங்கி அதே இடத்திலே விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் சந்தை குத்தகைதாரர்கள் ஒருங்கிணைந்து இந்த ஏகபோக வியாபாரிகளின் அடா வடித்தனத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி பாவனையாளர்கள் தெரிவித்தனர். (த-122)

# ஆதன வரி மதிப்பீட்டில் வேலணைப் பிரதேச சபை

யாழ்ப்பாணம், பெப்.10

வேலணைப் பிரதேச சபை தனது எல்லைப் பரப்பினது ஆதனவரி அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும், முதல் தடவையாக தற்சமயம் நயினாதீவு உப அலுவலகப் பகுதியில் ஆதனவரி குறித்த பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் வேலணை பிரதேச சபையின் செயலாளர் கெ. தவராஜா தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் இருந்து ஆதனவரி அறவீடுகள் குறித்த ஆவணங்கள் எதுவும் இல்லை எனவும், பிரதேச சபையில் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக பொது அமைப்புக்களைச் சார்ந்த தொண்டர்கள் இந்தப் பணிக்காக இணைக்கப்பட்டுள்ளதாகவும், வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த 30 கிராம அலுவலர் பிரிவுகளிலும் படிப்படியாக இந்த நடவடிக்கை இடம்பெறும் எனவும் செயலாளர் தவராஜா மேலும் தெரிவித்தார். (த-7)

## உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்

சத்தியத்திற்காக தங்கள் உயிரைக் கொடுத்த எத்தனையோ உத்தமர்களை உலகம் கண்டிருக்கின்றது. இன்றும் கூட மற்றவர்களின் நன்மைக்காகத் தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். தங்கள் கனவில்கூட உலக சுகங்களை விரும்பியிராதவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் இந்த உடம்பு ஏன் தரப்பட்டுள்ளது என்று அறிய முயல்பவர்கள் ஒரு சிலரே. உடம்பு தந்தது உடம்பிலுள்ள தேஹியை அறிவதற்கே. சொர்க்கம் ஒருசில கடவுளர்களின் பிரத்யேக இடங்களிலே இருப்பதல்ல. அது மனித இனத்தின் மாண்புகள் நிறைந்த மனிதர்களிடம்தான் உள்ளது. உத்தம குணத்துடன் வாழ்க்கை நடத்தி உயர்ந்தவனாக வாழ்ந்து வந்தால் சொர்க்கத்தை அவன் ஏன் தேட வேண்டும்.

உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் அறிந்து கொள்வதற்காக மனிதன் பலவித முயற்சிகளை மேற்கொள்கிறான். ஆனால் ஒருவரும் தன்னை அறிந்து கொள்வதற்கு எந்த முயற்சியும் செய்வதில்லை. மற்ற விடயங்களைப் புரிந்துகொள்வதற்கு எண்ணற்ற மணித்தியாலங்களைச் செலவிடுகிறான். ஆனால் தன்னை அறிந்து கொள்ள நேரத்தை ஒதுக்குவது அவனுக்குச் சிரமமாக இருக்கிறது. ஒருவனுடைய படிப்பு, பதவி, அறிவு எப்படி இருந்தாலும் அவன் தன்னை அறியாமல் மனதில் அமைதியையும் சந்தோஷத்தையும் பெறமுடியாது.

(நன்றி: தெய்வீகம் மலரும் பொழுது)



சாயி சிந்தனை

# 20 கோடி கிலோ கடலுணவுகள் கடந்த ஆண்டு மட்டும் பிடிபட்டன

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்டத்தின் 14 பிரதேசங்களில் கடந்த ஆண்டு 20 கோடி 7 லட்சத்து 39 ஆயிரத்து 79 கிலோகிராம் கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் ,மே மாதங்களிலேயே அதிகளவான கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த வருடம் மார்ச் மாதத்திலேயே அதிகளவான கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளன. மார்ச் மாதத்தில் 19 லட்சத்து 75 ஆயிரத்து 584 கிலோக்கிராமும் ஏப்ரல் மாதத்தில் 18 லட்சத்து 81 ஆயிரத்து 407 கிலோகிராமும் மே, ஒக்ரோபர் மற்றும் ஜனவரி மாதங்களில் 17 லட்சத்து 35 ஆயிரத்துக்கும் அதிகமாக கிலோகிராமுடைய கடலுணவுகளும் பிடிக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும்போது ஓகஸ்ட் மாதத்தில் குறைந்தளவிலான அதாவது 15 லட்சத்து 27 ஆயிரத்து 400 கிலோக்கிராம் கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு, மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு, மேற்கு, சுழிபுரம், காரைநகர், நெடுந்தீவு, வேலணை, நாவாந்துறை மற்றும் குருநகர் பகுதிகளை அண்மித்த பிரதேசங்கள் , சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் ஆழியவளை, தாளையடி ஆகிய பிரதேசங்களிலும்கடந்த வருடத்தின் இறுதி மூன்று மாதங்களும் கடலுணவுகள் அகிகமாக பிடிக்கப்பட்டன. பிரதேச ரீதியாக நோக்கும் போது நாவாந்துறையை அண்மித்த பிரதேசங்களில் அதிகளவு கடலுணவுகள் பிடிக் கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் கடந்த வருடம் 41 லட்சத்து 43 ஆயிரத்து 545 கிலோகிராம் கடலுணவுகள் பிடிபட்டுள்ளன. அடுத்து வடமராட்சி கிழக்குப் பகுதியில் 35லட்சத்து 24 ஆயிரத்து 900 கிலோகிராம் கடலுணவுகள் பிடிபட்டுள்ளன. என்றுமுள்ளது. (த-ரி)

## தீவுப் பகுதியில் மீன் விலையில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.10

வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளில் நேற்று புதன்கிழமை மீன்களின் விலை என்றுமில்லாதவாறு குறைந்திருந்தது.

இரண்டு இடங்களிலும் நேற்றையதினம் ஒரு கிலோ மீன் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. நேற்றைய தினம் இப் பகுதிகளில் மிகவும் கூடுதலாக மீன்கள் பிடிக் கப்பட்டதே இந்த விலை குறைவுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. எனினும் யாழ் நகரில் மீன்களின் விலையில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. (த-7)

## வேலணை - யாழ் பஸ் வேவையை அதிகரிக்குக

யாழ்ப்பாணம்,பெப்.10

வேலணைப் பகுதியில் இருந்து மாலை 5 மணிக்குப் பின் மாலை 6.45 மணிக்கே இ.போ.ச பஸ் சேவையில் ஈடுபடுவதால் பெரும்பாலான மக்கள் கடைசி பஸ்ஸிற்காக நீண்டநேரம் காத்திருந்தே யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 5 மணிக்கு சாட்டி வழியாகத் தனியார் பஸ்சேவை மட்டுமே இடம் பெறுகின்றது.தனியார் பஸ்ஸில் பிரயாணிகள் அதிகம் என்பதால் இந்த பஸ் சேவையில் பயணிக்க முடியாத நிலை உள்ளது.

இதனால் போக்குவரத்து வசதிகளின்றி நீண்டநேரம் தாமதித்து 6.45 மணிக்கு வரும் இ.போ.ச பஸ்ஸிலேயே தாம் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் எனவே மேலதிகமாக பஸ்சேவை ஒன்றை இடைப்பட்ட நேரத்தில் ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

(த-7)

## எதிர்காலத்துக்கான...



ஆரம்பம்:-வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் மங்கள விளக்கேற்றுகிறார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவையாளரும் கிராம அலுவலருமான சி.சிவபாலசிங்கம் அருகில் உள்ளார். (த-190)

## கீரிமலை ஆலயத்துக்கு மாலையில் பஸ் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.10

கீரிமலை முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு பிற்பகல் 1.30 மணிக்குப் பின்னர் பேருந்துச் சேவை இடம் பெறாமையால் அங்கு செல்லும் பக்தர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாலயத்தின் திருவிழா தற்போது நடைபெறுகின்றமையால் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பல இடங்களில் இருந்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக வருகின்றார்கள்.

இந்தநிலையில் பிற்பகல் 1.30 மணியுடன் இந்தப் பகுதிக்கான பேருந்துச் சேவை இடைநிறுத்தப்படுகின்றது.

இவ்விடத்தில் ஏனைய வாகனங்களும் சேவையில் ஈடுபடுவதில்லை. இதனால் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் தென்னிலங்கைப் பயணிகளின் வாகனங்களை மறித்து அதில் ஏறித் தமது வீடுகளுக்குச் செல்கின்றார்கள்.

எனவே பக்தர்களின் நன்மை கருதி மாலை நேரம் பேருந்துச் சேவையை திருவிழாக் காலத்தில் ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-313)

# நேரடியான பொருள் கொள்வனவில் பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கம்

பண்டத்தரிப்பு, பெப்.10

பண்டத்தரிப்பு பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் கொழும்பில் இருந்து சங்கத்தின்வாகனங்கள்மூலம்புடைவை, நுகர்ச்சி பொருள்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதன் மூலம் மக்கள் நன்மை அடைவதுடன் சங்கமும் இலாபத்தில் இயங்குவதாக சங்கப் பொதுமுகாமையாளர் ஆ. நாகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று இங்கு போட்டி வியாபாரம் செய்யவேண்டியுள்ளது. தனியார்துறை விலைகளுடன் ஒப்பிடும்போது சங்கத்தின் விலை குறைவாக உள்ளது. இதனால் மக்களும் சங்கமும் நன்மை அடைவதுடன் கொழும்புக் கொள்வனவும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

சங்கத்தின் கிராமிய வங்கிகளில் அங்கத்தவர்களுக்கான கடன்கள் வழங்கப்படுகின் றன. இதன்மூலம் அங்கத்தவர் கள் இலகுவாகக் கடனைப் பெற்றுக் கொள்கிறார்கள். விவசாயத் தேவைகளும் சிறுகைத் தொழில், வியாபாரத் தேவைக்கும் இந்தக் கடன்கன் வழங்கப்படுகின்றன.

சங்கத்தின் கோப்சிற்றியில் சங்கக் கிளையில் விற்கப்படும் விலைகளிலும் பார்க்கக் குறைந்த விலைகளிலே பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அங்கத்தவர்கள் மட்டுமல்லாது ஏனைய பிரதேச மக்களும் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

இந்த நடவடிக்கை மூலம் சங்கம் இலாபம் அடைவதனால் பணியாளர் சம்பளங்கள் அந்த அந்த மாதங்களில் ஒழுங்காக வழங்கப் படுகின்றன - என்றார்.

(த-130)

## செயலமர்வு

வடமராட்சி,பெப்.10

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவில் தமிழ்ப் பாடம் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது.

புலோலி மெதடிஸ்த பாடசாலை ஆசிரியர் நிலையத்தில் வடமராட்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் தலைமையில் இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

(த-236)

## யாழ். நூலக சிற்றுண்டிச்சாலையை மீளத் திறக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். பொது நூலகத்தில் சிற்றுண்டிச்சாலையை மீண்டும் இயக்குவதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டும் என்று வாசகர்களும் ஊழியர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக இந்தச் சிற்றுண்டிச்சாலை இயங்காததால் நெடுந்தூரத்தில் இருந்து வரும் வாசகர்களும், ஊழியர்களும் பெரும் சிரமம்படுகின்றனர்.

ஊழியர்களும் வாசகர்களும் மதியநேர உணவைப் பெறுவதற்கும் சிற்றுண்டி, தேனீர் அருந்தவும் முடியாமல் அவதிப் படுகின்றனர்.

இந்த நெருக்கடி நிலையைப் புரிந்துகொண்டு மீண்டும் சிற்றூண்டிச்சாலை செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ -3-11)

## மருதங்கேணிப் பாலம் நாளை திறந்துவைப்பு

வடமராட்சி,பெப்.10

புதிதாகக் கட்டப்பட்ட மருதங்கேணிப் பாலம் நாளை வெள்ளிக்கிழமை போக்குவரத்துக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கான பிரதான போக்குவரத்துப் பாதையாக பருத்தித்துறை-மருதங்கேணி வீதி, ஏ 9 வீதியிலிருந்து ஆரம்பிக்கும் புதுக்காட்டுச் சந்தி மருதங்கேணிவீதி ஆகியன இருந்து வருகின்றன.

இவ்விரு வீதிகளிலும்கண்ணி வெடிகள் இருப்பதனால் பருத்தித்துறை-மருதங்கேணி வீதி போக்குவரத்துக்காகத் திறக்கப்படவில்லை. புதுக் காட்டுச்சந்தி -மருதங்கேணி வீதியில் மருதங்கேணி எல்லைகளில் உள்ள பாலம் உடைந்ததினால் அவ்வீதியூடான போக்குவரத்துக்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகப் பாதிக்கப்பட்டிருந்தன.'

இதனால் மருதங்கேணிக்கு இயக்கச்சி , வண்ணான்குளம், புல்லாவெளி, கட்டைக்காடு ஊடாக இ.போ.ச. பஸ்சேவைகள் இடம் பெற்றுவந்தன. கடும்மழை காலத்தில் இப்பாதையின் நடுவே வெள்ளம் கடல் நீரேரிக்குச் செல்வதால் மழை காலங்களில் இப்பஸ் சேவைகள் தடைப்பட்டிருந்தன.

தனியார் பஸ்கள் மருதங்கேணிப் பாலத்தடியில் பயணிகளை இறக்கி,மருதங்கேணி எல்லையில் வைத்து மற்றொரு பஸ் வண்டி மூலம் பயணிகளை ஏற்றி இறக்கி வந்தன.

இந்நிலையில் வீதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் மருதங்கேணிப் பாலம் புதிதாகக் கட்டப்பட்டு அதன் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

(த-319)

# அத்தியாவசியப் பொருள்களுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு இல்லை

## 1 கிலோ நாட்டரிசி 65ரூபா முதல் விற்பனை

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்டத்தில் பொது மக்களுக்குத் தேவையான அளவு அரிசி நியாய விலையில் விநியோகிப்பதற்கு கையிருப்பில் இருப்பதாக யாழ். வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் தொடர்ச்சியாக ஏ-9 வீதியினூடாகப் பொருள்களை எடுத்து வருவதால் எவற்றுக்கும் தட்டுப்பாடு இல்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் இருப்பு தொடர்பான கலந்துரையாடல் வர்த்தக சங்கத்தில் இடம்பெற்றபோது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் நாட்டரிசி சில்லறை விலையாக ரூபா 65 முதல் விற்கப்படுகின்றது. அரிசியின் தரத்துக்கு ஏற்றதாக அதன் விலைகள் மாறுபடும். அதிகபட்சமாக மொட்டைக் கறுப்பன் அரிசி ரூபா 80 இற்கு விற்கப்படுகின்றது.

சம்பா அரிசி 70 ரூபா முதல் 85 ரூபா வரையில் அதன் தரத்துக்கு ஏற்றாற்போல் விற்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட விலைகளை விட அதிகமான விலைகளில் வர்த்தகர்கள் விற்றால், உடனடியாக அவை தொடர்பில் தமக்கு அறியத் தருமாறு வர்த்தக சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இதேவேளை நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரி கடந்த சில நாள்களுக்கு முன்னர் குறிப்பிட்ட விலைகளில் நாடளாவிய ரீதியில் எங்கும் அரிசி பெற்றுக்கொள்ளமுடியாது. அவ்வாறு அவர் குறிப்பிட்ட விலைகளில் எமக்கு பெற்றுத்தந்தால் நாம் அந்த விலையை விட 50 சதம் அதிகமாக வைத்து விற்கத் தயார்.

அதே சமயம் கொழும்பில் சீனி மொத்த விற்பனையில் 97.50 சதத்துக்கும் யாழ்.நகரில் 105 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

அரிசி போதியளவு யாழ்ப்பாண வர்த்தகர்களிடம் கையிருப்பில் உள்ளது. காலநிலை சீரடைந்தால் அரிசி விலையில் மாற்றம் ஏற்படலாம் என்றும் தெரிவித்தனர். (ஒ-15)

## டேவிட் வீதி சேதம்

குருநகர்,பெப்.10

யாழ்.டேவிட் வீதி மக்கள் பயணம் செய்யமுடியாதவாறு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண வீதிகள் தார்க்கலவை மூலம் தற்போது செப்பனிடப்பட்டு வருகின்ற போதிலும் இந்த வீதி புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

குருநகர்ப் பகுதியில் யாழ். மாநகர சபையின் உதவிமேயர் மற்றும் இரண்டு யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் வசித்து வருகின்ற போதிலும் குருநகர் வீதிகள் பல சேதமடைந்து திருத்துவதற்கு இவர்களால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமலுள்ளது இந்தப் பகுதி மக்களை பெரிதும் விசனமடையச் செய்துள்ளது. (த-57)

## அமரர் ஜீ.ஜீ நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.10

அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 34 ஆவது சிராத்த தின நிகழ்வு நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருநகரிலுள்ள அமரரின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் இடம் பெற்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சொலமன் சிறில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமரர் ஜீஜீ. பொன்னம்பலத்தின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. (த-14)

## தலைவனுக்கு மதிப்பு...



மறைந்த பின்பும்: அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சிராத்த தினத்தையொட்டி குருநகரில் அமைந்துள்ள அவரது சிலைக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். (த-14)

## பனங்கிழங்கை சேதமாக்கியது மினிபஸ்

சங்கானை,பெப்.10

சங்கானை பேருந்து நிலையத்தில் காரைநகரில் இருந்து மினிபஸ்ஸில் கொண்டு வந்து இறக்கப்பட்ட பனங்கிழங்குகள் மற்றொரு மினிபஸ்ஸினால் நாசமாக்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் இரண்டு சாக்குகளில் சுமார் 1200 பனங்கிழங்குகளை ஒரு இளைஞனொருவன் சங்கானைச் சந்தையில் விற்பனை செய்வதற்காகக் கொண்டு வந்துள்ளார். அவர் அவற்றை பேருந்து நிலையத்தில் இறக்கியுள்ளார். ஒரு சாக்கு பொதியை கரையோரமாக வைத்து விட்டு மற்ற சாக்குப் பொதியை எடுப்பதற்குள் பின்னால் வந்த மற்றொரு மினிபஸ் அதற்கு மேலாக ஏறி சுமார் 600 பனங்கிழங்குகளைச் சேதமாக்கியது. சேதமாக்கியதுமல்லாமல் அவ்விடத்தை விட்டு உடனடியாகவே மினிபஸ் சென்று விட்டது.

காரைநகரில் இருந்து வந்த மினிபஸ்ஸை துரத்திக் கொண்டு வந்த மாதகல் யாழ்ப்பாணம் மினிபஸ் சாரதி காரைநகர் மினிபஸ்ஸிற்கு முன் தான் செல்ல வேண்டும் என்ற அவசரத்தால் வேகமாகச் செலுத்தியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அங்கு கூடிய பொது மக்கள் மாதகல் மினிபஸ் சொந்தக்காரரை அழைத்து சம்பந்தப்பட்ட இளைஞனுக்கு பனங்கிழங்கின் பெறுமதியான 1000 ரூபாவை வாங்கிக் கொடுத்துள்ளனர்.

பொறுப்பற்ற விதத்தில் மினிபஸ் சாரதிகள் இவ்வாறு நடப்பதும் நடந்த சம்பவத்துக்கு பதிலொன்றும் அளிக்காமல் அவ்விடத்தை விட்டு நகர்வதும் தொடர்கதையாக உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-29)

## யாழ்.பொது நூலக சிறுவர் பகுதி நடமாடும் சேவை மீள ஆரம்பம்

### கைதடி விக்னேஸ்வராவில்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர் பகுதியின் நடமாடும் சேவை மீண்டும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது.

இந்த நடமாடும் நூலக சேவை கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு சென்றடைந்துள்ளது. நூலகங்கள் இல்லாத பாடசாலைகளுக்கே இந்தச் சேவை நடைபெறவுள்ளது.

கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகள் இந்தச் சேவையின் மூலம் கூடிய பயன்களைப் பெறும் அதேசமயம் மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்யவும் முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பொது நூலகத்தில் உள்ள பயன்மிக்க நூல்களை நகரிலுள்ள சிறுவர்கள் மட்டுமன்றி ஏனைய சிறுவர்களும் பெற்றுத் தங்களின் திறனை வளர்த்துக் கொள்ள இந்த நடமாடும் சேவை பெரிதும் உதவும் என்று யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்தார். (ஒ-311)

## அனைத்துப் பாடசாலைகளிலும் போதைப்பொருள் தடுப்புக் குழு

சுன்னாகம்,பெப்.10

பாடசாலை மாணவர்களைப் போதைப் பொருள் பயன்பாட்டிலிருந்து தடுக்கும் நோக்குடன் சகல பாடசாலைகளிலும் போதைப் பொருள் தடுப்புக் குழுக்களை அமைக்க வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன அறிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் பாடசாலையின் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான ஆசிரியர், மாணவர், தலைவர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி, பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதி, அதிபர், பிரதி அதிபர் அகியோரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வை ஊட்டுவதும் ஏனைய அமைப்புக்களின் துணையுடன் போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதும் இந்தக் குழுக்களின் செயற்பாடாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் 'போதைக்கு முற்றுப்புள்ளி' என்ற சிந்தனையை பாடசாலைகளில் அமுல்படுத்தும் முகமாகவே இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (த-38)

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

# ஆங்கிலப் பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சை 19 இல்

யாழ்ப்பாணம், பெப்.10

போட்டிப்பரீட்சையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறிக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிக் கடிதங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

அனுமதிக் கடிதங்களைப் பெறுவதற்காக அழைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விவரம் வருமாறு -

ரி.ஜெனனதரன் (கோண்டாவில் வடக்கு), தி.தர்மிகா (சர்வோதய வீதி ஆவரங்கால்) எஸ். சுபீத்திரன் (இமையாணன் வடக்கு), என். கேதீஸ்வரன் (சேர்ச்றோட், பருத்தித்துறை), பி.பரமசோதி (குப்பிளான்), யு.ஈ.ஜெமிகா (கோவில் வீதி, நல்லூர்), கே.ராஜேந்திரம் (சுந்தர்மடம்). கே.கெங்காதரன் (கச்சேரி கிழக்கு லேன்), ரி.சுந்தரலிங்கம் (கொக்குவில்),கிருத்திகா (தாவடி வடக்கு), எஸ்.அனிஸ்ரன் (அளவெட்டி), ஜே.பிருந்தாபன் (தாவடி), கே.பரமேஸ்வரன் (கரணவாய்), எஸ்.நிர்மலநாதன் (ஐந்து சந்தி,யாழ்.) வி.டென்சியா (மானிப்பாய்), கே.கனகரத்தினம் (நீர்வேலி), ஆர். ரவிச்சந்திரன் (இமையாணன்). பி.சோமசுந்தரம் (குடத்தனை), எம்.ஆர்.ஏ.வலீந்தினி (இளவாலை), ஜீ.சட்டநாதர் (திருநெல்வேலி), தி.கோமதி (புலோலி மத்தி), ஏ.அருள்குமரன் (மண்டைதீவு), ரி.நிவேத்தா (நயினாதீவு), ஜே. நடராஜ் (ஊரெழு) எஸ்.பத்மநாதன் (வண்ணார் பண்ணை). (ஒ-10)

# பளையில் 100 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் அமைக்க ஏற்பாடு

பளை, பெப்.10

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியில் பளைப் பிரதேச செயலர் பிரிவில் மிக வறிய 100 குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியில் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரனின் வழி நடத்தலில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி த. கிருபாகரன் இதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டோர் மாற்று வலுவுள்ளோர், அதிக பிள்ளைகளுள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன. பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி செல்வி கேதினியும் சமூக சேவை உதவியாளர்களும் இப் பயனாளிகள் தெரிவில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று வியாழக் கிழமை மு.ப. 10 மணிக்கு கைதடியில் அமைத்துள்ள வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாகவும் இந்தக் கலந்துரையாடலில் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக இயங்கும் அமைப்புக்கள், சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமே கூட்டம்....



நல்ல பயிற்சி : கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் உளவலுவூட்டலை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். (கிளிநொச்சிச் செய்தியாளர்)

# ஒட்டுசுட்டானில் இதுவரை 500 கால்நாடைகள் இறப்பு

## செய்வதறியாது மக்கள் திணறல்

முல்லைத்தீவு, பெப்.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையில் கால்வாய் நோயினால் கால்நடைகள் இறந்த வண்ணமுள்ளன.

மழை வெள்ளத்தினால் இறந்த கால்நடைகளைப் புதைக்கக்கூட வழியில்லாமல் மக்கள் திண்டாடுவதாகவும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இதுவரை 500 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல கால்நடைகள் இரை மீட்க முடியாமல் இறந்ததாகவும் பல வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல கால்நடைகளின் குடில்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் கால்வாய் நோய் ஏற்பட்டு இன்னும் பல கால்நடைகள் இறக்கக் கூடும் என்று அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (500)

# உவரடையும் வயல் நிலம்

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சி, வன்னேரிக் குளம் மற்றும் குஞ்சுக் குளம் உவரடைந்து வருவதால் அப்பகுதி மக்களால் நெற்செய்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

பூநகரியில் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த தடுப்பணைகளில் மழை காரணமாக உடைவு ஏற்பட்டு, கடல் நீர் புகுந்ததால் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே வயல் நிலங்கள் உவரடைந்து நெற்செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# கிராம சேவகர் இல்லை அக்கராயன் மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சி, அக்காரயன் குளம் கிராம சேவகர் வேறு பிரிவுக்கு மாற்றலாகிச் சென்றதினால் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பகுதி கிராம சேவகர் மகேந்திரம் மாற்றலாகிச் சென்றதோடு கடந்த 6 மாதங்களுக்கு மேலாகப் புதிய கிராம சேவகர் நியமிக்கப்படாமையால் மக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றலாகிச் சென்ற கிராம சேவகரே மீண்டும் இப் பகுதிக்கு கிராம சேவகராக வரவேண்டும் என்று மக்களிடமிருந்து கையொப்பம் வாங்கிய மனுவினை கரைச்சி உதவி அரச அதிபரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வாடகைக்கு வீடு தேவை

வெளிநாட்டவர் ஒருவர் குடியிருப்பதற்கு வீடு ஒன்று தேவைப்படுகின்றது. குறிப்பிட்டளவு தளபாடங்களுடன் குளிரூட்டப்பட்ட இரண்டு படுக்கை அறைகளைக் கொண்டதாகவும் இணைந்த சமையலறை, குளியலறை வசதி உடையதாகவும் நல்லூர் ஆலயத்திற்கு இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்குள் நல்ல சுற்றாடலைக் கொண்டதாகவும் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: 0771932353

இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### இராசகாரியர் பாலசுப்ரமணியம்

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இராசகாரியர் பாலசுப்ரமணி யம் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் இராசகாரியர் - மனோன்மணி தம்பதியரின் புத்திரனும் சம்பந்தர் சபாரத்தினம் - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும் கணேஸ் (லண்டன்), சாந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சரஸ்வதி அருளம்பலம், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி, மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66, அருளம்பலம் லேன்,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (071)

*தகவல்:*
திருமதி சரஸ்வதி அருளம்பலம்.

# இராணுவத்தினரால் உணவு விநியோகம்

முல்லைத்தீவு,பெப்.10

ஒட்டுசுட்டான்பேராறு பண்டாரவன்னி பிரதேசத்தில் இருந்து மழை வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு அப்பகுதி இராணுவத்தினரால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன.

வெள்ளம் காரணமாக இராணுவத்தினர் தமது வாகனங்கள் மூலம் தம்மை ஏற்றி வெள்ளம் இல்லாத பகுதிகளுக்குக் கொண்டு சென்று இறக்கியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு பகலாக மழை என்றும் பாராமல் தம்முடன் தமது பாதுகாப்புக்கு இராணுவத்தினர் உதவிய தாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (500)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
12 ★ 02 ★ 1940



மறைவு
12 ★ 01 ★ 2011

### அமரர் ஐயாத்துரை இரத்தினம்

கடந்த 12.01.2011 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஐயாத்துரை இரத்தினம் அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (11.02.2011) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (109113)

குடும்பத்தினர்.

## Student Visa SPOT ADMISSION

(Feb 19th, 20th) முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

மூன்று வாரத்தில் UK செல்லலாம்

**Student/ Visit & Migration**

UK/ Canada/ Australia/ Netherland/ New Zealand/ Malaysia/ Ireand Reject/ Refusal Visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்.

* புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
* 15வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
* அங்கீகாரம் பெற்ற College/ University அனுமதி.

ADMISSION INTAKE 2011 FEB/MAR
OFFER LETTER 3 WITHIN DAYS
MIN QUALITION O/L

Foundation Degree/ Language Courses (English) Second Degree Holders No Need IELTS Free IELTS Classess

**Australia Migration** Business & Skill
*Engineers * Accountants *IT Degree holders

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No.22A, Frankfort Place, Bambalapitiya, Colombo- 04, Sri Lanka.
Tel: 011 2508443/ Mob: 0777849853.
Web: www.etbclanka.com/ E-mail: etbc@etbclanka.com
Jaffna Branch- 82/12A Chetty Street, Nallur.
Tel: 0777849853/ 0774454646.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதிகளுடன் விசாலமான வீடு வாடகைக்குண்டு. உடன் கொடுக்கப்படும். மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 0726694666

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By: Mr. B.Ruban (A/L Eng. Teacher & BBA) More Details: 0779785749

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்ய 30 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.

சம்பளம் ரூபா 10,000/=

தொடர்பு: 0776388713

(070)

## மணமகள் தேவை

76 இல் பிறந்த, 12 இல் சூரியனும் செவ்வாயும் 20¾ பாவமுடைய, கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். தொ.பே: 0776070862

# வெள்ள அனர்த்தத்தினால் சிறுவர்கள் பெரும் பாதிப்பு

### உதவுமாறு சபைச் செயலர் கோரிக்கை

மன்னார்,பெப்.10

மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை பாதிக்கப்பட்ட 27 ஆயிரம் மக்கள் 22 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான மலசலகூட வசதி குடிதண்ணீர் வசதிகள் என்பன வழங்கப்படுகின்ற போதும் சிறுவர்களுக்கான பால்மா வகைகள், நுளம்பு வலை மற்றும் நுளம்புத் திரி, பெற்சீற், சோப் வகைகள் உடன் தேவையாகவுள்ளதாகவும் மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட வகையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரமின் பணிப்புரையின் பேரில் மேலதிக சுகாதாரத் தொழிலாளர்கள் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் விஸ்தரிப்பு வேலைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

அனுராதபுரம் மல்வத்து ஓயாவுக்கு அருகில் நாச்சியாதீவு குளம் ஊடாக அருவியாறு வழியாக கட்டுக்கரை குளத்தை மேவி வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு மற்றும் மன்னார் பெருநிலப்பரப்பு என்பன வெள்ளத்தால் மூழ்கியுள்ளன.

தலைமன்னார் - மதவாச்சி பிரதான வீதி தடைப்பட்டுள்ளதால் நிவாரண விநியோகம் மந்தமாகவுள்ளதாகவும் பொதுத் தொண்டு நிறுவனங்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உதவிகள் புரிவதால் இடம்பெயர்ந்த சிறுவர்கள், குழந்தைகள் போஷாக்கு உணவு இன்றிப் பாதிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

எனவே, இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு குழந்தைகளுக்கும் தேவையான உதவிகளை வழங்கி உதவுமாறு கேட்டுள்ளார். (302)

### நடமாடும் சேவை மூலம்

# அ. அட்டைக்கு விண்ணப்பித்த மக்கள் திரிசங்கு நிலையில்

முல்லைத்தீவு,பெப்.10

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையால் நடமாடும் சேவை மூலம் அப்பகுதி மக்களுக்குரிய தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட போதிலும் இதுவரையில் தேசிய அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பித்தவர்களில் சிலர் கொழும்பு சென்று ஆள் அடையாள அட்டை செயலகத்தில் தமது இலக்கங்களையும் படத்துடனான ரசீதையும் காட்டிக் கேட்டதற்கு செயலகத்துக்கு எமது விண்ணப்பப் படிவங்கள் எதுவும் வரவில்லை எனத் தெரிவித்ததாகக் கொழும்பு சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

அடையாள அட்டை மிகவும் அவசியமான இக் காலகட்டத்தில் இப்படியான செயற்பாடுகளால் மக்கள் பெரிதும் இன்னற்படுகின்றனர். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து வெகுவிரைவில் இதனை ஆராய்ந்து அடையாள அட்டைகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (500)

# நெடுங்கேணிப் பகுதி மக்கள் வெள்ளத்தினால் பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு,பெப்.10

நெடுங்கேணிப் பகுதி சேனைப்புலவு, கரடிப்புலவு மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள கடும்மழை வெள்ளத்தினால் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இப்பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்கள் பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளன.

தண்டுவான், பழம்பாசி, மாமடு போன்ற கிராமங்களும் வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளதாகவும் மாமடு, பழம்பாசியில் தற்போது மேற்கொள்ளப்பட்ட சேற்று விதைப்பு முற்றாக அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மழை வெள்ளத்தால் கோடாலிக்கல்லு இத்திமடு, களிக்காடு, பெரிய இத்திமடு போன்ற கிராம மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களது விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் வீதியில் ஒரு அடிக்குமேல் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் பெரும் வாகனங்களைத் தவிர சிறிய வாகனங்கள் எதுவும் செல்ல முடியாது தடை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (500)

## புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்

கிளிநொச்சி,பெப்.10

அக்கராயன் சந்தியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப்பணி நடைபெற்று வருகின்றது.

இந்த எரிபொருள் நிலையம் இயங்கத் தொடங்கும் போது அக்கராயன் பகுதி மக்களின் எரிபொருள் நெருக்கடி குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மருத்துவ, சந்தை வசதியில்லாத நிலையில் கொம்புவைத்த குளம் மக்கள்

முல்லைத்தீவு,பெப்.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலைப்பாணி, கொம்புவைத்த குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதியோ, சந்தை வசதியோ இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக்கிராம மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 12 கி.மீ. தூரத்தில் உள்ள மாங்குளத்துக்கு அல்லது 15 கி.மீ. தூரத்தில் உள்ள மல்லாவிக்கோ செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிக்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் துவிச்சக்கர வண்டிகளிலே பெரும் சிரமங்களின் மத்தியில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத வீதிகளினூடாகவே சென்று தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் இரவு வேளைகளில் அவசர நோயாளியை கொண்டு செல்வதாயின் பெரும் நெருக்கடிகளை சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலைப்பாணி கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை மாத்திரமே இயங்குவதாகவும் மேல்படிப்புக்காக வன்னிவிளாங்குளம், பாலிநகர் ம.வி. மற்றும் மல்லாவியில் இயங்கும் பாடசாலைகளுக்கு வசதியான மாணவர்கள் செல்வதாகவும் வசதியற்ற மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு கூலி வேலைகளுக்குச் செல்வதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## நிவாரணம் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு,பெப்.10

முல்லை மாவட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் நிறுத்தப்பட்டமையால் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் மழையினால் அறுவடைக்கான நெல்லினை அறுவடை செய்யாமையினால் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிசைகளில் வாழ்பவர்களினதும் தறப்பாளின் கீழ் வாழ்பவர்களினதும் வாழ்வாதார நிலைகள் மோசமடைந்து வருவதால் இம்மக்களுக்கு வழங்கி வந்த நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (500)

# வன்னியில் பல பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன

வவுனியா,பெப்.10

வெள்ளப்பெருக்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வன்னி மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளில் தங்கியிருப்பதாலும் மாணவர்களினது பாதுகாப்புக் கருதியும் குறிப்பிட்ட சில பாடசாலைகளை கடந்த திங்கள் முதல் காலவரையின்றி மூடிவிடுவதற்கு வடமாகாணக் கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்த கடும்மழையினால் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனக் கருதுவதால் அவர்கள் தங்குவதற்கு பாடசாலைகளை ஒதுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இடம்பெயர்ந்து தற்போது பாடசாலைகளில் தங்கியுள்ள இந்த மக்களுக்கு வவுனியா செயலகத்தினால் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் சமைத்த உணவுகளும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (ஓ-22)

# கெருடமடு, வசந்தபுரம் நீரில் மூழ்கியுள்ளன

முல்லைத்தீவு,பெப்.10

மழை வெள்ளத்தினாலும் ஆறுகள் பெருக்கெடுத்த நிலையிலும் கெருடமடு, வசந்தபுரம் மக்களின் வாழ்விடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

முத்துஐயன்கட்டு குளம் நீர் நிரம்பி கதவுகள் திறக்கப்பட்டு ஆறுகள் பெருக்கெடுத்துப் பாய்வதால் வசந்தபுரம், கெருடமடு என்னும் கிராமங்களில் உள்ள தற்காலிக வீடுகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருடர்களின் பயத்தினால் வாழ்விடங்களை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ள அப்பகுதி மக்கள் தமது வீட்டின் வாசல்களை மண்மூடைகளால் அடைத்து விட்டு வீட்டுக்குள்ளேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று முத்துஐயன்கட்டு, சமனக்குளம், இத்திமடு, தண்டுவான், பழம்பாசி, பண்டாரக்குளம் போன்ற கிராம மக்களும் தொடர்மழை வெள்ளத்தால் இன்னல்களை அடைந்து வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (500)

## ஆசிரியர்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்மைப் பாடசாலையான அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவுகிறது.

தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், விவசாயம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பணியில் இல்லாததனால் மாணவர்கள் கல்வியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

AB பாடசாலையான அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர்களின் தட்டுப்பாடு வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அம்பலம்பெருமாள் குளம், ஸ்கந்தபுரம், கோணாவில் ஆகிய பகுதி மாணவர்களின் கல்வியை பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (500)

# பிறப்பு, இறப்பு பதிவாளரை நியமிக்குக

முல்லைத்தீவு,பெப்.10

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு பதிவுகாரர் இல்லாமையால் பிறப்பு, இறப்பினை பதிவு செய்ய முடியாமல் மக்கள் உள்ளனர்.

அப்பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளராக முன்னர் இருந்த ப.நவரத்தினம் இடப்பெயர்வின் போது இறந்ததையடுத்து அந்த இடத்துக்கு இதுவரை ஒருவரையும் புதிதாக நியமிக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இப்பிரதேசத்துக்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவரை நியமித்துத் தரும்படி அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (500)

# பயிர் அழிவால் விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு,பெப்.10

முல்லை மாவட்டத்தில் பெய்த மழைவெள்ளத்தால் உழுந்து, நிலக்கடலை, பயறு போன்ற பயிர்ச்செய்கைகள் அழிந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

போர் முடிவடைந்து மீளக் குடியேறிய நிலையில் கூடுதலாக இப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட இப்பகுதி விவசாயிகள், இதன்மூலம் பெரும் இலாபத்தை ஈட்டமுடியும் என நம்பியிருந்ததாகவும் கடைசித் தறுவாயில் வெள்ளத்தினால் அழிவடைந்த நிலையைப் பார்த்து வேதனை கொள்வதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பயிர்ச் செய்கைக்கு இழப்புத் தொகை வழங்குவார்களா என எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (500)

## மண் சரிவின் பாதிப்பு...



கண்டி, ஹந்தானை பெருந்தோட்டப் பகுதியில் மண்சரிவால் லயன் அறைகள் சிலவற்றில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (204)

# பன்வில தோட்டத்தில் பெரிய நில வெடிப்பு பீதியால் 35 குடும்பங்கள் இடம்பெயர்வு

பன்வில ஹாகலை சின்னக் கந்தஹெட்டி தோட்டத்தில் ஏற்பட்டுள்ள பெரிய நிலவெடிப்புக் காரணமாக அப்பகுதியில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்திற்கு நிலத்தில் பெரிய வெடிப்பு ஏற்பட்டு நிலம் தாழிறங்கி வருவதால் இந்தப் பகுதியிலுள்ள 35 குடும்பங்களைச் சேர்ந்த 128 பேர் இடம்பெயர்ந்து ஹாகல தமிழ் வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பாடசாலையில் இடவசதி போதாமையாலும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும் மக்கள் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்தப்பகுதியில் பெரிய மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பன்வில பொலிஸார் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஹாகல தமிழ் வித்தியாலய நிர்வாகமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வசதிகளை செய்து கொடுத்துள்ளபோதும் இவர்களுக்கான உணவு வழங்குவதில் நெருக்கடி நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

பன்வில பிரதேச செயலக அதிகாரிகள் பொதுமக்களை பார்வையிட்டுச் சென்றுள்ள போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படவில்லையெனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்தப்பகுதியில் ஏற்பட்டுள்ள பெரிய நிலவெடிப்பால் கந்தஹெட்டிப் பகுதி மக்களும் நகர்ப்புற வாசிகளும் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இதனிடையே புசல்லாவை ஸ்டெலன்பேர்க் தோட்டத்தில் நிலவெடிப்பு ஏற்பட்டுள்ளதால் 10 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தோட்ட வைத்தியசாலையிலும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலும் தஞ்சமடைந்துள்ளனர்.

கட்டுக்கித்துவ வெளண்டன் பகுதியிலும் நிலவெடிப்பு ஏற்பட்டுள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். புசல்லாவை இரட்டைப்பாதை பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு வருவதால் பொதுமக்களை புசல்லாவை பொலிஸார் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.(எி)

# தரிசாகவுள்ள தோட்டக்காணிகளை இளைஞர்களுக்கு வழங்க ஏற்பாடு

நுவரெலியா, பெப்.10

தோட்டக் கம்பனிகளின் கீழ் வரும் தோட்டங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாது தரிசு நிலங்களாக உள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டு வேலையற்ற இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது - என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவென ஜூன் மாதம் வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் காணிகள் சுவீகரிக்கப்படுவதுடன் பயிரிடப்படாத காணிகள் பற்றிய விவரங்களைக் கண்டறிய குழுவொன்று அமைக்கப்பட்டு தோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கிணங்க இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தேயிலைச் சபையின் கணக்கீட்டின் படி கடந்த 2010ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு வரலாற்று ரீதியாக 12,500 கோடி வருமானமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டை விட இது 100 இற்கு 14 சதவீதம் அதிக மாகும். கடந்த 2010ஆம் ஆண்டில் 33 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள அதேவேளை கடந்த 2009 இல் 29 கோடி கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

100 இற்கு 76 சதவீதம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் சுமார் 4 லட்சம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது.

கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் 2008 ஆண்டு காலப்பகுதிகளில் பச்சைக் கொழுந்து தேயிலை ஒரு கிலோ 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது ஒரு கிலோ பச்சைக் கொழுந்துத் தேயிலை 65 ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

இறப்பர் உற்பத்தியிலும் அதிக மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் 40 கோடி கிலோ வரையில் அதிகரித்துள்ளது. கடந்த 2009 ஆம்ஆண்டில் 20 கோடி இறப்பர் உற்பத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அரசின் சரியான பொருளாதாரக் கொள்கையே இவ்வுயர்ச்சிக்கான காரணமாகும்.

களுத்துறை மாவட்டத்தில் பல தோட்டங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்ட பல ஏக்கர் காணிகள் காணப்படுகின்றன. பற்றைக் காடுகளான சில் தோட்டக்காணிகளை வெளியார் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். தோட்ட நிர்வாகங்கள் இதனைக் கண்டும் காணாதது போல் மௌனமாக இருந்து வருகின்றன எனத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்- இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். (எி)

## மரண அறிவித்தல்கள்

### சாம் செல்வதுரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.63, றக்கா லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சாம் செல்வதுரை நேற்று (09.02.2011) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும் ஏஞ்சலினா, கிருஷாந்தினி (M.Sc. பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (10.02.2011) வியாழக்கிழமை பி.ப.4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.63, றக்கா லேன்,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(077)

*தகவல்:*
ஏஞ்சலினா
*(மகள்).*

### திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது தாவடியில் வசிப்பவருமான ஆறுமுகம் பரமேஸ்வரி 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கந்தையா - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவரான கந்தையா ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரியும் கணேசமூர்த்தி, ஈஸ்வரி (லண்டன்), மகேந்திரம் (கனடா), வசந்தாதேவி, தனலட்சுமி (லண்டன்), கமலாதேவி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும் சதானந்தம் (லண்டன்), சாந்தி (கனடா), கிருஷ்ணமூர்த்தி (S.K. Agency, Jaffna), ஆனந்த நடராஜா (இந்தியா), வடிவேல்நாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் காயத்திரி, கௌதமி, ஜனார்த்தனி, தமயா, பிரேமி, பிரசாந், கபில்ராஜ், அஜந்தா, சாரா ஆகியோரின் பேர்த்தியும் மகாலட்சுமியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சரஸ்வதி வாசா',*
*அரசடி லேன், தாவடி.*

(083)

*தகவல்:*
கி.வசந்தி *(மகள்).*

# ஹொரணை பிரதேச சபையில் தமிழ்க் குரல் ஒலிக்க வேண்டும்

கடந்த காலத்தில் ஹொரணை பிரதேச சபையில் இருந்த தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமலேயே போய்விட்டது. அந்தநிலை இந்தமுறையும் ஏற்படக் கூடாது. மீண்டும் இங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தி பிரதேச சபையில் தமிழரின் குரலை ஒலிக்கச் செய்ய வேண்டும் - இ.தே.தோ.தொ. சங்கத்தின் களுத்துறை, ஹொரணை மாவட்டப் பிரதிநிதி எஸ்.வைத்தியலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஹொரணை பிரதேச சபைக்கு இந்த முறை ஐ.தே.க.சார்பில் போட்டியிடும் இளம் தமிழ் வேட்பாளரான இங்கிரிய, எதுராகல தோட்டத்தைச் சேர்ந்த சாமுவேல் அன்ரன் ஜோன் என்பவருக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

கடந்த காலங்களில் களுத்துறை மாவட்டப் பிரதேசசபைகளில் ஐ.ம.சு. கூட்டமைப்பில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட பல தமிழ் உறுப்பினர்கள் மக்களுக்குச் சேவை செய்வதை மறந்து தமது தேவைகளையே கவனித்துக் கொண்டனர். அதனால் அவர்கள் இன்று ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க.வில் போட்டியிடும் வேட்பாளர்கள் திறமையும் முயற்சியும் சமூகப் பற்றும் உள்ளவர்களாவர். எனவே இவரையும் ஐ.தே.க.வின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் ஹொரணை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான தேசபந்து ரஜ்ஜித் தாபரேயையும் வெற்றிபெறச் செய்யவேண்டும் - என அவர் மேலும் வைத்தியலிங்கம்தெரிவித்துள்ளார். (எி)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
நா.நாவேந்தன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
நா.நாகேஸ்வரியின்
மறைவுக்காக கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக செலுத்துவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

(087)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டு சபிண்டீகரணக் கிரியைகளும்

அமரர்
ஆறுமுகம் சபாரத்தினம்
(அங்கிளப்பா)





தோற்றம்
13.12.1932

மறைவு
11.01.2011

கடந்த 11.01.2011 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் ஆறுமுகம் சபாரத்தினத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.01.2011 கீரிமலையில் நடைபெற்றது. இன்று (10.02.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

மனைவியும்
உறவினர்களும்.

கிறீன் பேள்
(பிறவுன் றோட் சந்தியருகில் நாவலர் றோட்)

A/L இரசாயனவியல் By:J.J. கொலின்ஸ்
அடிப்படை இரசாயனத்தை தொடர்ந்து குறுகியகால இலகு முறை மீட்டலும் பகுதி II பொது இரசாயனம் கடந்த கால வினா விடை வகுப்பு.
ஆரம்பம்: 09.02.2011 (புதன் 4pm, சனி6.30am)
பகுதி I செவ்வாய் 4.00- 5.00
இருபிரிவுகள் வியாழன் 4.00- 5.00

# நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

திருகோணமலை, பெப். 10

திருகோணமலை உட்பட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களையும் சேர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளையும் நிவாரணங்களையும் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் -இப்படி நிதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளை செப்பனிடுவதற்கும் முழுமையாக இடிந்து போன வீடுகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும் பயிர்ச்செய்கை இழப்பை ஈடுசெய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மூதூர் கிராமத்திற்கு நேரில் சென்று மழை, வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களையும், மக்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்களையும் இழப்புகளையும் கண்டறிந்த பின்னர் அங்குள்ள மக்கள் மத்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அன்று காலையில் சீனன்குடா விமான நிலையத்தில் வந்திறங்கிய அமைச்சர் ஹக்கீம் திருகோணமலை செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டார். கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவையும் சந்தித்து உரையாடினார்.

பின்னர் கடற்படையினரின் படகில் மூதூர் இறங்குதுறையை வந்தடைந்த அமைச்சர் ஹக்கீம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கும் சென்றிருந்தார்.

மூதூர் அல் - மனார் வித்தியாலயம், அல்ஹிலால் வித்தியாலயம், அல் ஹிதாயா வித்தியாலயம், மத்திய கல்லூரி, புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவற்றுக்குச் சென்று இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்களைச் சந்தித்து உரையாடியதோடு அவர்களின் குறைகளையும் கேட்டறிந்ததோடு மூதூர் நீதிமன்றத்தையும் அவர் சென்று பார்வையிட்டார்.

# திருமலை- மூதூரில் மக்கள் தவிப்பு கடல் வழியே உணவு விநியோகம்

திருகோணமலை, பெப். 10

திருகோணமலை மாவட்டத்தில் பெய்யும் அடைமழை காரணமாக வெள்ளத்தின் அளவு அதிகரிப்பதனால், மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களை நோக்கிச் செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

மூதூருக்கான தரைவழிப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்ட நிலையிலிருப்பதால், அங்குள்ள மக்களுக்கான உணவு விநியோகம் சிரமத்துக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மூதூருக்கு வருகின்ற அல்லையூடான வீதி, கிண்ணியா ஊடான வீதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் அவை அதிக சேதத்துக்கும் உள்ளாகியுள்ளன.

இதனால் கடல் போக்குவரத்து மட்டும் தற்போது நடைபெறுகின்றது. எனவே மூதூர் மக்களுக்கான உணவு விநியோகம் கடல் மார்க்க மாக மட்டுமே இடம்பெற்றுவருகின்றது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மூதூர், மூதூர் கிழக்கு, கிளிவெட்டி, வெருகல், ஈச்சிலம்பற்று, இறால்குழி, சங்குவேலி, பெரியபாலம், சாபுநகர், சேருவில, திருகோணமலை, புல்மோட்டை, தம்பலகாமம், கிண்ணியா உட்படப் பல பகுதிகள் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன. மாவட்டத்தின் பல இடங்களில் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டிருப்பதனால் கிராமங்களில் உணவுப் பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. வீடுகளும், வளவுகளும் வெள்ள நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. மலசல கூடக் குழிகள் நிரம்பி வழிகின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (204)

# கல்முனை நோக்கிச் சென்ற பஸ் குடைசாய்ந்தது

மட்டக்களப்பு,பெப்.10

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் ஒன்று மட்டக்களப்பு புதுக்குடியிருப்புப் பகுதியில் குடைசாய்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பஸ் மட்டக்களப்பு கல்முனை அதிவேக நெடுஞ்சாலையில் வேகமாகச் சென்றபோது, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கம்பவேலியில் மோதுண்டு குடைசாய்ந்துள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென இலங்கைப் போக்குவரத்துச்சபையின் மட்டக்களப்பு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கடும்மழை பெய்து வருவதன் காரணமாக இவ்வாறான விபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

இந்த விபத்துத் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (204)

## மக்களுக்குச் சேவை...



மூதூர்ப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கான வைத்திய சேவைகள் இடம்பெறுகின்றன. (204)

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

வெள்ள அனர்த்தம் காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்ட அனைத்துப் பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள் இன்று வியாழக் கிழமை ஆரம்பிக்கப்படும் என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.நிஸாம் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தினால் வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள், பாடசாலைகளில் தங்கியிருந்தமையும் பல பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியமையுமே விடுமுறை வழங்குவதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார். பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்ட நாள்களுக்குப் பதிலாக சனிக்கிழமைகளில் பாடசாலை இடம்பெறும் என எம்.ரி.நிஸாம் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசுக்கு இணங்கவே பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.தெஹியத்தகண்டிய மற்றும் மகாஓயா ஆகிய கல்வி வலயங்கள் தவிர்ந்த ஏனைய 14 கல்வி வலயப் பாடசாலைகளுக்குக் கடந்த மூன்று தினங்கள் விடுமுறை வழங்கப்பட்டன. (204)

# முகாம்களில் உள்ளவர்களை அதிகாரிகள் வீடுகளுக்கு அனுப்புவதாகக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,பெப்.10

கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் காரணமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய குடும்பங்களில் அனேகமான குடும்பங்கள் தற்போது தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளன.

வெள்ளம் வடிந்து வரும் நிலையிலேயே இந்தக் குடும்பங்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்ற போதிலும் விருப்பத்திற்கு மாறாக எவ்வித நிவாரண உதவிகளுமின்றி வீடு திரும்பத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாகச் சிலர் தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள, கண்ணன் கிராமம், கண்ணகிபுரம் மற்றும் யூனியன் கொலனி ஆகிய கிராம மக்கள் பாடசாலை கட்டடமொன்றில் தஞ்சம் பெற்றிருந்த போது அதற்குப் பொறுப்பான அதிகாரிகளினால் வீடு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

தங்கள் வீடுகளிலும் காணிகளிலும் இன்னமும் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அங்கு தங்கியிருக்க முடியாத நிலையே காணப்படுவதாகவும் வாழைச்சேனை மற்றும் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளுக்குத் திரும்ப முடியாதவர்கள் தொடர்ந்தும் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்க முடியும் எனத் தெரிவித்துள்ள அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், குறித்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழைச்சேனை பிரதேச செயலாளருடன் கலந்துரையாடியதையடுத்து வெள்ளம் வற்றாத மக்கள் மீண்டும் நலன்புரி முகாமிற்கு சென்று தங்கியிருக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்களுக்குத் தேவையான சமைத்த உணவு நேற்று முன்தினம் இரவு முதல் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது.

உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கான உலர் உணவு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலாளர் தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை வெள்ளம் முற்றாக வற்றாத நிலையில் மக்களை வீடுகளுக்குச் செல்லுமாறு நலன்புரி முகாமிற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தரினால் பணிக்கப்பட்டதைக் கண்டித்து அவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நேற்று முன்தினம் காலை பாதிக்கப்பட்ட மக்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் தலையீட்டையடுத்து குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறாது தடுக்கப்பட்டதுடன் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (204)

# ஆலைகளுக்கு நெல் விற்பனை

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் லட்சக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் சேதமடைந்துள்ளன. இதனால் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியிருந்த ஒரு தொகுதி நெல்லினைத் தனியார் அரிசி ஆலைகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கையில் அரசு ஈடுபட ஆரம்பித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான களஞ்சியசாலையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த 12 லட்சத்து 50 ஆயிரம் கிலோ கிராம் நெல்லினை தனியார் அரிசி ஆலைகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கை ஆரம்பமாகியது. (204)

# பிரிட்டிஷ் சட்டம் மீண்டும் அமுலாவதை எம்மால் ஒருபோதும் ஏற்க முடியாது

## சபையில் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப்.10

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தச் சட்டத்தின் கீழ் வந்த இராணுவச் சட்டத்தின் பிரகாரமே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தண்டிக்கப்பட்டுள்ளார். அந்தச் சட்டங்கள் மீண்டும் அமுலுக்கு வருவதை ஒருபோதும் எம்மால் இடமளிக்க முடியாது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இருந்தும், தேர்தல்களை ஏன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடத்தவேண்டும்? பெப்ரவரி 4ஆம் திகதி அமைதியான ஊர்வலம் நடத்தப்பட்ட போது குண்டர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிஸார் நிறுத்தியபோது குண்டர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அரசு தனக்குள்ள அதிகாரங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தவா பயன்படுத்துகின்றது.

லங்கா ஈ நியூஸ் இணையத்தள ஊடக நிறுவனத்தின் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்ட விடயம் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்படுவதாக இல்லை.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஏன் மேற்கொள்ளாமல் உள்ளார்கள் என்பது குறித்து எனக்கு நன்றாகத் தெரியும். எமது பேச்சு உரிமை, அடிப்படை உரிமை என்பன மீறப்பட்டுள்ளன. இதற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும். அடிப்படை உரிமைகளை மட்டுமல்ல, மக்களின் இறைமையையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்றில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

எட்மன் ஹேவா விதாரணவை சிறையில் அடைத்து கொலை செய்த சட்டத்தின்கீழ் இருந்து கொண்டு இறைமை குறித்து நாடாளுமன்றில் பேச முடியாது. வெள்ளைக்காரர்களைத் தூற்றுகிறீர்கள். ஆனால், அவர்களின் சட்டங்களை ஏன் நாம் நடைமுறைப்படுத்துகிறோம்?

இராணுவ நீதிமன்றம் சட்ட பூர்வமானது என்று அறிவிக்கப்பட்டது. இது ஏகாதிபத்தியத்தின் சட்டமாகும். கே.பிக்கு சுகபோக வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அரசு, சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்துள்ளது. இதனை உயர் நீதிமன்றம் அறிந்திராவிட்டால், அதனை விளக்குவதற்கு எமக்குக் கடப்பாடுள்ளது.

ஏகாதிபத்திய சட்டங்களை நீங்கள் ஏற்றுக்கொள்வதாயின், சர்வ தேசத்தை உங்களால் விமர்சிக்க முடியாது - என்றார். (சி)

# ஆளும் கட்சி ஆதரவாளர் மோதல்; துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயம்

கொழும்பு, பெப். 10

காலியில் ஆளுங்கட்சியின் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது வேட்பாளர் உட்பட மூவர் காயமடைந்தனர் என்று பெந்தோட்டப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெந்தோட்டை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜெக்சன் கொட்டஹச்சி, இன்னொரு வேட்பாளரான கயான் சிறிமான ஆகிய இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்களே மோதிக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் அதன்போது வேட்பாளர் கயான் சிறிமான மற்றும் அவரது ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெந்தோட்ட பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜெக்சன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள ஜெக்சனுக்கும் பொல்லடி காரணமாகக் காயங்கள் ஏற்பட்டதால் அவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரிய வருகிறது. (சி)

## புதிய அங்கத்துவம்...



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மத்தி முன்னாள் அமைப்பாளர் எம்.சஹாப்டீன், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஐ.தே.க. அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்கின்றார். (204)

# பாக். இலங்கை ஜனாதிபதிகள் பேச்சு

கொழும்பு, பெப். 10

மோசமான காலநிலையால் பாதிப்படைந்த மக்கள் தொடர்பில், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அவர் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது கவலையை வெளியிட்டார் என பாகிஸ்தான் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் இவ்வாறான காலநிலை ஏற்பட்டபோது, தமது மக்களும் இதேபோல் பாதிக்கப்பட்டமையை அவர் இந்த உரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

எந்தத் தருணத்திலும் வெள்ளத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவிகளை வழங்க பாகிஸ்தான் தயாராக இருக்கிறது எனவும் சர்தாரி தெரிவித்துள்ளார்.

# சதோச விற்பனை நிலையத்தில் கோழி முட்டை, பெரிய வெங்காயம்

இறக்குமதி செய்யப்பட்ட கோழி முட்டைகள் மற்றும் பெரிய வெங்காயம் என்பன சதோச விற்பனை நிலையங்களில் விநியோகிக்கப்படும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் வர்த்தகர்கள் முட்டை மற்றும் பெரிய வெங்காயத்தை மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சின் வசம் 40 லட்சம் கோழி முட்டைகளும் 2 லட்சம் கிலோ பெரிய வெங்காயமும் இருப்பில் உள்ளன.

இதன் அடிப்படையில் முட்டையொன்றின் மொத்த கொள்வனவு விலை ரூபா 11 எனவும் சாதாரண விற்பனை விலை ரூபா 12. அதேபோன்று, பெரிய வெங்காயத்தின் சாதாரண விற்பனை விலை 129 ரூபா எனவும், மொத்த விற்பனை விலை 105 ரூபா வாகும். அத்துடன், எதிர்காலத் தேவை கருதி பாகிஸ்தானில் இருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கிறது

## அமைச்சர் மைத்திரிபால தாக்கு

கொழும்பு, பெப்.10

நாட்டில் மூன்றில் ஒரு பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கி மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கையில், ஐ.தே.கட்சி நாட்டில் ஜனநாயகம் இல்லை எனக் கூறி மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சிக்கின்றது

-இவ்வாறு ஸ்ரீ.ல.சு.கட்சி செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐ.ம.சு.முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இயற்கையின் சீற்றத்தால் நாட்டின் மூன்றிலொரு பிரதேசம் வெள்ளக் காடாகி, மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்களுக்கு உதவாமல், நாட்டில் ஜனநாயகம் இல்லை எனக் காரணம் காட்டி, ஐ.தே.கட்சி மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகத் தெரிவிக்கின்றது.

ஐ.தே.கட்சி ஆட்சி செய்த 1977 ஆம் ஆண்டு முதல் 1994 வரையான 17 ஆண்டுகளில் நாட்டில் ஜனநாயகம் இருந்ததா? ஆறு ஆண்டு ஆட்சிக்காலம் 12 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு சுமார் 40 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். இவற்றை மக்கள் மறந்து விடவில்லை.

இன்று ஐ.தே.கட்சிக்குள் தலைமைத்துவம் இல்லை. அக்கட்சியில் ஜனநாயகமும் இல்லை. சுதந்திரதினமான கடந்த 4ஆம் திகதி ஐ.தே.கட்சி 'சுதந்திரத்தின் ஓலம்' என்ற ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. அந்தக் கட்சியிலுள்ள ஒரு சிலரே இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதலை நடத்தினர்.

இந்த உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களிலும் ஐ.தே. கட்சி படு தோல்வியடையும்.

உள்ளூராட்சித் தேர்தல்களைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. இருந்தும், நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளர் தேர்தலை பிற்போடலாம். அந்த அதிகாரம் அவருக்கு உண்டு- என்றார் (ஓ-சி)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஐ.நா.சபை மீண்டும் உதவ முடிவு

இரண்டாவது தடவையாகவும் வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்குத் தொடர்ந்தும் ஐ.நா. உதவிகளை வழங்கவுள்ளது என ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே தெரிவித்துள்ளார்.

தற்போது இரண்டாம் கட்டமாகவும் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ள நிலையில், அவர்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முதல் முறை ஏற்பட்ட வெள்ள நிலையை விடத் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை அதிக அனர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் பூனே தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் கொழும்பு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ஏற்கனவே இலங்கைக்கு வழங்கக் கோரப்பட்டிருந்த 5 கோடி 10 லட்சம் டொலர்கள் நிவாரண நிதித் திரட்டலை, இந்த மாத இறுதியில் மீண்டும் விடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத் தேவைக்காக 5 கோடி 10 லட்சம் டொலர்களை இலங்கை கோரியிருந்தது. (சி)

# வைத்தியர்கள் சுழற்சி முறையில் போராட்டம்

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் சுழற்சி முறையிலான பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

அவசியமான மருத்துவ சேவைகளை மாத்திரம் வழங்கி வருகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர். பிமந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் பணிப்பாளருடைய செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறிப்பிட்ட பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சுகாதார செயலாளருடன் கலந்துரையாடப்படும். இந்தக் கலந் துரையாடலில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழிற் சங்க நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கப்பம் பெற்றவர் கைது

வர்த்தகர்களை அச்சுறுத்தி கப்பம் வசூலித்து வந்தார் என்ற சந்தேகத்தில் தனியார் பஸ் நடத்துநர் ஒருவர் தென் மாகாண விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ரொட்டும்ப பிரதேச வாசியான 36 வயது டைய இந்த நபர் கம்புறுபிட்டிய தெய்யந்தர, ஊறுபொக்க, பஸ்கொட, ஹக்மன, ரதவெல, ஹெரபாவிட்ட ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்களை தொலைபேசி மூலம் மிரட்டிக் கப்பம் பெற்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)



கரவெட்டி பிரதேச வைத்தியசாலை டாக்டர் ம.யோகீஸ்வரதேவருக்கு வைத்தியசாலை அபிவருத்திக் குழுவால் அண்மையில் பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா ஆகியோர் விழா நாயகனுடன் காணப்படுகின்றனர். (319)

# அறநிலைப்பட்ட சமூக மேம்பாட்டுக்கு உதவ தர்ம சிந்தனையாளர்கள் முன்வரவேண்டும்

சுன்னாகம்,ஜன.10

கல்வியியலாளர்களதும், சிந்தனையாளர்களதும் கருத்துக்களை உள்வாங்கி அற நிலைப்பட்ட சமூக மேம்பாட்டுக்கு உதவ இங்குள்ள தரும சிந்தனையாளர்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற 'நேசா பவுண்டேசன்' நிறுவனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

பாடசாலைப் பிள்ளைகளுக்கு அரசு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. அதேவேளை அரசு சாரா அமைப்புக்களும் உதவுகின்றன. இந்த உதவிகளைப் பெறும் மாணவர்கள் அவற்றைத் தமது முன்னேற்றத்துக்கான படிக்கற்களாகக் கொண்டு தம்மை வளப்படுத்த முயல வேண்டும்.

இன்று உலகப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது இலங்கைக்குக் கிடைக்கவுள்ள வெளிநாட்டு உதவிகளில் பெரிதும் தாக்கத்தைச் செலுத்தும். எனவே, எதிர்காலத்தில் எமது பிள்ளைகளின் கல்விக்காகக் கிடைக்கும் உதவிகள் குறைவாகவே இருக்கும். இந்த நிலையில் எமக்கான பொருளாதாரத்தை நாமே கட்டியெழுப்ப வேண்டும். இன்று கவர்ச்சிகரமான பொருள்பாவனையாலும், தீர்க்க தரிசனமற்ற செயற்பாடுகளாலுமே மனிதர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மனிதரை அழிக்க இனி ஆயுதங்கள் தேவையில்லை. நாம் உண்ணும் உணவும் பயன் படுத்தும் பொருள்களும், சாதனங்களுமே நம்மை அழித்து விடும். நாம் மேற்கத்தைய கலாசாரத்துள் அமிழ்ந்து விடாமல் எமது கலாசார விழுமியங்களைப் பேணி நடந்து கொள்வது இன்றியமையாததாகும் என்றார். இந்நிகழ்வில் தெல்லிப்பழைகோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன், இளைப்பாறிய ஆசிரியர் சுசுப்பிரமணியம், கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் ஆகியோரும் உரையாற்றினர். (ம-38)

# மாணவர் கல்விக்கு உதவுவதே நோக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.10

நல்லூர் பிரதேசத்தில் உள்ள மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதரத் துக்கும் குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களின் கல்விக்காகவும் உதவுவதே நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றித்தின் நோக்கமாகும். நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கல்விக்காக ஒன்றியத்தால் வழங்கப்படும் பணத்தை திங்கட்கிழமை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:

வறுமை, வசதியின்மை என்ற நிலையில் இளம் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அரசின் உதவிகளை மட்டும் எதிர்பார்க்காது வசதி படைத்த மக்களும் அமைப்புக்களும் இதற்காக உதவ வேண்டும். இந்த சமூகப் பொறுப்பை கருத்தில் கொண்டு பிரதேச செயலக செயற்பாடுகளுக்கு அப்பால் நல்லூர் இந்து ஆலயங்களின் ஒன்றியம் இது போன்ற உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தலைமைப்பீட கிராம அலுவலர், எமது கலாசார உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்டுள்ளனர். உதவி பிரதேச செயலர் சோதிநாதனின் முயற்சியுடன் இந்த ஒன்றியம் எமது பிரதேச மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. உதவிகளைப் பெறும் மக்கள் அதை உரிய முறையில் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் பிள்ளைகளின் கல்வி தடைப்படாதவாறு பெற்றோர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்தில் எமக்கு வழிகட்டிகளாகக் கூடிய வகையில் உங்கள்கல்வியில் அக்கறையுடன் இருத்தால் அவசியம்.- என்றார்.

உதவி பிரதேச செயலர் எஸ்.சோதிநாதனும் உரையாற்றினார். (ம-7)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.10

வடமாராட்சி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் 2011ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் கே.யோகநாதன், பிரதித் தலைவர்கள் எஸ்.சுப்பிரமணியசர்மா, எம் பாலச்சந்திரன், செயலாளர் பி.சசீந்திரன், பிரதிச்செயலாளர் எம். விக்னேஸ்வரமூர்த்தி, பொருளாளர் ஆர்.ஜெக தீசன், இணைப்பதிகாரி ஆர். வரதீஸ்வரன்

நிர்வாகசபை உறுப்பினர்கள்

எஸ்.சரோஜா, எம்.சசிகரன், பரராசசிங்கம், சுப்பிரமணியம், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் ரி.குமுதரஞ்சன், எம்.நடராஜசுந்தரம், எஸ்.கதிரவேற்பிள்ளை, கணக்காய்வாளர் கே.யோகேந்திரன். (253-319)

* * *

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாச நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- க.கஜீதன் (சாவகச்சேரி வடக்கு, செல்வவிநாயகர் ச.ச.நி), உப தலைவர்-மா. குகதாசன் (மீசாலை மலைமகள்), செயலாளர்- செ. சுப்பிரமணியம்(சங்கத்தானை சாரதா), உதவிச் செயலாளர்- க. திருமணிவண்ணன் (மீசாலை ஸ்ரீகணேசா), பொருளாளர் க.சாந்தகுமார் (சாவகச்சேரி வடக்கு செல்வவிநாயகர்) நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.கேசவன் (கல்வயல் ச.ச.நி), செ. மார்க்கண்டு (மீசாலை வீனஸ்), இ.சுப்பிரமணியம் (சாவகச்சேரி உதயசூரியன்), சி.பூமிசேகரம் (சாவகச்சேரி திருவள்ளுவர்), சி.ஜெயகாந்தன் (கல்வயல் பாரதி), செ.மகேஸ்வரன் (மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர்), ச.மார்கண்டு (சப்பச்சி மாவடி சித்திவிநாய கர்), ச.தினேஸ் (மீசாலை மலைமகள்). (ம-207)

# ஒழுக்கம் சிறந்த பிரஜைகளை உருவாக்கும்

தென்மராட்சி,பெப்.10

ஒழுக்கம் என்பது மாணவர் பருவத்தில் பாடசாலைக்கு மட்டும் தேவையானது அல்ல. அவர்களை எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக மாற்ற வல்லது. ஒழுக்கமான மாணவர்களால் பாடசாலைக்கு மட்டுமல்ல அவர்களது பெற் றோருக்கும் சமூகத்துக்கும் பெருமை கிடைக்கிறது.

ஒழுக்கம் நிறைந்த மாணவர்கள் கிராமப்புறங்களிலேயே அதிகம் உள்ளதைக் காண்கிறோம்.

அதற்குக் காரணம் இன்றைய காலத்திலும் கூட்டுக் குடும்ப வாழ்கை கிராமப் புறங்களிலேயே காணப்படுகிறது.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிறுவுனர்தினநிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றினார்.

கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில்:

மாணவர்களின் ஒழுக்க நெறிகளுக்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்களின் பங்களிப்பும் அவசியமாகிறது. ஒழுக்கம் நிறைந்த மாணவர்களால் பாடசாலை மட்டுமல்ல கல்விச் சமூகமே பெருமை பெறுகிறது.

மாணவர்களின் கல்வியில் பெற்றோர், ஆசிரியர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தற்போது சகல வளங்கள் கொண்டவையாக பாடசாலைகள் செயற்படுகின்றன. கணினிகள், நூலகம், ஆய்வுகூடம், விளையாட்டு உபகரணங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு சாதனங்கள் என்பன மாணவர்களுக்கென அரசினால் வழங்கப்படுகின்றன. ஆனால் இவற்றைப் பயன்படுத்த மாணவர்கள் தவறி விடுகின்றனர்.

நூலகங்களுக்கு மாணவர்கள் செல்வது பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருவதாக அறியப்படுகிறது. படிக்கின்ற வயதில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்த மாணவர் தவறுகின்றனர். அவர்களது ஒரே இலக்கு பல்கலைக்கழகம் செல்வது என்பதே. பல்கலைக் கழகக் கல்வியுடனேயே அவர்கள் காலத்தைக் கழித்து விடுகின்றனர். தொழில் வாய்ப்பைப் பெறக் கூடிய வகையிலான பிற கற்கை நெறிகளை மேற்கொள்ள மாணவர்கள் முன்வருவதில்லை.

பல்கலைக் கழக கல்வியால் கிடைக்கும் பட்டத்தினை வைத்துக்கொண்டு வேலைவாய்ப்புத் தேடி அலைவதில் கூடுதல் காலம் முடிகிறது.

பல மாணவர்கள் உரத்து வாசிப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. இதன் விளைவு பட்டம் பெற்ற ஒருவரால் மேடையில் பேச முடிவதில்லை. இது அவரின் எதிர்காலத்தையே மழுங்கடித்து விடுகிறது. இந்த யதார்த்த நிலை எமது மாணவர்கள் மத்தியில் உள்ள இன்றைய நிலைப்பாடாகும்.

இதைப் பெற்றோர்கள் அனைவரும் உணரவேண்டும். ஒரு துறையினைப் பயில்வது பல்வேறு தேவைகளுக்கும் கைகொடுக்கத் தவறி விடுகிறது. இதனை மாணவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாணவர்களின் செயற்பாடுகளால் இலங்கையில் உள்ள எந்தவொரு பல்கலைக் கழகமாக இருந்தாலும் சரி கல்லூரியாக இருந்தாலும் சரி, பாடசாலையாக இருந்தாலும் சரி சர்வதேச தரத்துக்கு இணையாக இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

எமது முன்னோர்கள் கல்வியை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டுள்ளார்கள் என்பது எமக்குத் தெரியாத விடயம். ஒவ் வொரு பாடசாலையையும் உருவாக்கியவர்களை எத்தனை தலைமுறையினர் அங்கு கல்வி கற்கின்றனரோ அவர்களின் கல்விக்கு வித்திடும் முதன்மையானவர் என்பதை மாணவர்கள் மறக்கக் கூடாது.

அந்த வகையில் இந்தக் கல்லூரிக்கு வித்திட்ட நிறுவுனர் தாமோதரம்பிள்ளை நினை வாக பெப்ரவரி ஐந்தாம் திகதி அவரை நினைவு கூரும் வகையில் விழா எடுத்து கொண்டாடுவதுடன் நூறு வருடங்களுக்கு மேலாக வருடா வருடம் அன்னாரின் நினைவாக அவரின் பெயரில் சஞ்சிகையும் வெளியிடுவது இக் கல்லூரிக்கு வித்திட்ட சிந்த னையாளனுக்கு வழங்கும் கௌர மாக கருதலாம்- என்றார். (ம-207)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடர்:**
சில வேலைகளைக் காலதாமதமாகத் தொடங்கினாலும் சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். சக ஊழியர் அல்லது குடும்ப உறுப்பினரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம்.



**இடபர்:**
வேண்டா வெறுப்பாக மற்றவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில், சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். பக்தி நாட்டம் கூடும்



**மிதுனர்:**
ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நண்பர் ஒருவர் உங்களிடம் அவசர உதவி கேட்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். நினைத்த காரியம் ஒன்று நடப்பதன் மூலம் மனதில் சந்தோஷம் குடிகொள்ளும்.



**கடகர்:**
குழப்பங்கள் தீர பெரிய மனிதர்கள் சிலரிடம் ஆலோசனை கேட்பீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்காலம் பற்றி அறிந்து கொள்வதில் நாட்டம் செல்லும். தொழிலில் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள்.



**சிங்கர்:**
நண்பர்கள் அல்லது சக ஊழியர்கள் சிலரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லிப் புலம்புவீர்கள். உறவினர் ஒருவருக்காக மற்றொரு உறவினரிடம் உதவி கேட்கலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும்.இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு.



**கன்னி:**
திட்டமிட்டபடி வேலைகளைச் செய்ய முடியாமல் தடை ஏற்படலாம். குடும்பப் பெரியவர்கள் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் அவர்களின் வேலையையும் சேர்த்துச் செய்யலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகள் நேரும். தடுமாற்றம் உண்டாகும்.



**துலாமர்:**
சுபச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். உறவினர்களை உபசரிக்கக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் ஹோட்டல்களுக்குச் சென்று சாப்பிடலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஆனந்தமான நாள்.



**விருச்சிகர்:**
நீங்கள் எதிர்பாராத நண்பர் ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். பல நாள் முயற்சி ஒன்றுக்குப் பலன் கிடைக்கும். மற்றையவர்களைக் குழப்பும் வகையில் பேசும் சிலரையும் பக்குவமாகப் பேசிச் சமாளிப்பீர்கள். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.



**தனுசு:**
பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களைப் வெறுப்பேற்றும் வகையில் சிலர் நடந்து கொள்ளலாம். ஒவ்வாத உணவுகளைச் சாப்பிட்டு வயிறு உபாதைகளுக்கு ஆளாகலாம். சில தவறுகளை நினைத்துப் பயப்படுவீர்கள்.



**மகரர்:**
நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் சிலர் கையை விரிக்கலாம். சில தப்பான காரியங்களைச் செய்ய முற்பட்டு அதனால் பதட்டம் அடைவீர்கள். குறுகிய தூரப் பயணங்கள் செல்லலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள்.



**கும்பர்:**
புதிய அனுபவப் பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வீர்கள். மற்றவர்கள் சிக்கலாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று வரலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.



**மீனர்:**
நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். உங்களின் அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளலாம். குழந்தைகளைத் திருப்திபடுத்த அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சுபச் செலவுகள் கூடும்.

# வைத்தியசாலையில் நோயாளர்களின் நிலை...?

**அரச வைத்தியசாலைகள் பலவற்றிலும் தான்தோன்றித் தனமாகச் செயற்படும் மக்களால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி பார்வையாளர்களாகச் செல்லும் மக்களால் வைத்தியசாலைகளில் இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் உளரீதியான பாதிப்புக்களையும் எதிர்கொள்கின்றனர்.**

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது யாவரும் அறிந்துகொண்ட உண்மையாகும். வருமுன் காத்துக்கொள்பவன்தான் அறிவாளி. நோய் வந்தபின் வைத்தியசாலைதான் தஞ்சம்.

உலகில் சுகாதாரசேவை இலவசமாக நடைபெறும் இடங்களில் இலங்கையும் ஒன்றாகும். இங்கு மிகக்குறைந்த செலவில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு வைத்தியர்களின் கண்ணியமான சேவைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டிய கடமைப்பாடு வைத்தியசாலைக்குச் செல்பவர்களுக்கு உண்டு. பொதுமக்கள் பொது இடங்களைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. மீறி நடப்பவர்கள் கண்டிக்க, தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

### பாஸ் நடைமுறை தேவை

யாழ். போதனா வைத்தியசாலையை சரியான முறையில் சுத்தமாக வைத்திருப்பதில் பொதுமக்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். குப்பைகளை உரிய இடத்தில் இடுதல், மலசல கூடங்களைச் சுகாதாரமாகப் பயன்படுத்தல் என்பவை இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். வைத்தியசாலை நிர்வாகம் ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பது ஒருபக்கம். மறுபக்கம் பயன்படுத்துபவர்கள் பொதுச்சொத்து என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

நோயாளிகளைப் பார்வையிடுவோர் தொகை மிக அதிகமாகவுள்ளது. இந்தவிடயத்தில் வெளிநாடுகளில் கடைப்பிடிக்கப்படும் (முன்னர் இங்கு நடைமுறையிலிருந்த) பாஸ் முறை கொண்டுவரப்பட வேண்டும். இதன்மூலம் பார்வையாளர் தொகை கட்டுப்படும் . வைத்தியசாலையில் ஏற்படும் நெருக்கடி தவிர்க்கப்படும்.

### ஓய்வு அவசியம்

நோயாளிக்கு ஓய்வு அவசியம். ஓய்வு எடுக்க முடியாத பலர் வைத்தியசாலை வாட்டில் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுதல் கூட உண்டு. நோயாளிக்கு ஓய்வு முக்கியமாவது போல் மன அமைதியும் அவசியம். பார்வையாளர்கள் நோயாளியின் மனநிலையைப் பாதிக்கக் கூடிய முறையில் உரையாடுவதை வைத்தியசாலையில் தினமும் காணமுடிகிறது. ஒருவர் நோயாளியிடம் ''உன்ர வருத்தம் உங்கட குடும்பத்தில் பலருக்கு உண்டா? கவனம்'' எனும் வகையில் பேசுவார்கள். இதனால் நோயாளிக்கு ஏற்படும் துன்பத்தை நினைத்துப் பார்க்கமாட்டார்கள். வெளிநாடுகளில் ஒரு நோயாளி குணமடைய வேண்டும் என்று பூச்செண்டு வழங்குவார்கள். பிரார்த்தனை செய்வார்கள். 2 நிமிடத்தில் நோயாளியிடம் விடைபெற்றுக்கொள்வார்கள்.

இதில் கூட நமது நாட்டில் சங்கடம் உள்ளது. ''அவர் வந்தார் ஒரு நிமிடம் கூட நிற்காமல் வந்த வேகத்தில் போய்விட்டார். இதுக்கு ஏன் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும்.'' என்றுகுறை கூறுபவர்கள் வேறு உண்டு. இத்தகைய சுபாவங்களை மாற்றிக்கொண்டு பொது வைத்தியசாலையில் நோயாளி அமைதியாக இருக்க மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். நோயாளர் எண்ணிக்கை நாளும் பொழுதும் அதிகரித்து வரும் நிலையில் சில கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது வைத்தியசாலை நிர்வாகத்துக்குத் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் உடம்பில் ஏற்ற அளவுக்கு இல்லாமல் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் வரும் என மருத்துவ அறிஞர்கள் கூறுவர்.

தமிழர்களின் வாழ்க்கை முறையானது உடல், உள ஆரோக்கியத்துடன் தொடர்புபட்டதாகும். இன்று நாகரிகம் என்ற பெயரில் ஏற்பட்டுவரும் மாற்றம், (உணவுப்பழக்கம் உட்பட) நோய்களுக்குக் காரணமாக அமைந்துவிட்டன. அண்மையில் போதனா வைத்தியசாலையில் சிறப்பாகக் கடமையாற்றும் வைத்திய நிபுணர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் குறிப்பிட்ட விடயம் ஒன்று என்னைச் சிந்திக்கவைத்தது. ''பிள்ளைகள் இறப்பின் பின்னர் ஈமக்கடன் செய்வார்கள் என்று பெற்றோர்கள் நினைப்பார்கள். ஆனால் இன்று மகனுக்குத் தந்தை ஈமக்கடன் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது'' எனக் குறிப்பிட்டார். உண்மை தான், மகனுக்கு வயது 45, மாரடைப்பால் மரணம். தந்தைக்கு வயது 75. மகனுக்குக் கொள்ளியிடும் கொடூரம் நடைபெற்றுவருகிறது.

### வைத்தியசாலைகளில் வீணடிக்கப்படும் உணவு

தவறான பழக்கங்கள், இறைவன் கொடுத்த மானிடப் பிறப்பை விரைந்து முடிவுக்கு கொண்டு வருகிறது. முன்பு உண்ட உணவு நன்றாக செரித்ததை அறிந்து மீண்டும் உண்டால், உடலுக்கு மருந்து என்ற ஒரு பொருளே வேண்டுவதில்லை. உணவுப் பழக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடும்.

சூழல்-குளிர் நிலை காரணமாக மேல் நாட்டவரின் உணவில் கொழுப்புச் சத்து அதிகமாக இருக்கும். நமது சீதோஷ்ண நிலைக்கு இத்தகைய உணவு ஏற்புடையதல்ல. கொழுப்பு உணவைத் தவிர்த்தால் பெரும்பாலும் ஆரோக்கியம் வந்துவிடும்.

வைத்தியசாலையில் உள்ள நோயாளிக்கு மணக்க மணக்க புரியாணி உணவைக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். வைத்தியசாலையில் நோயாளிக்குப் பெரும் செலவில் இலவசமாக வழங்கப்படும் உணவு வீணடிக்கப்படுவதையும் பார்க்க முடிகிறது.

உடம்புக்கு ஒத்துக்கொள்ளும் உணவையும் அளவாகவே உண்ணவேண்டும். அப்பொழுது தான் எத்தகைய நோயும் வராது. இதை விடுத்து 'பெருந்தீனி' தின்பவரிடம் நோய் நீங்காமல் நிற்கும். பசியின் அளவும், உண்டது செரிக்கும் திறமும் தெரிந்து உட்கொண்டால் நீடித்த ஆயுள் நிச்சயம்.

வைத்தியசாலையின் தேவைகள் அதிகரித்து வரும் இக்காலத்தில் பொதுமக்கள் வைத்தியசாலை நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். வைத்தியசேவை கிராமம், பட்டணம், நகரம் என்ற முறையில் ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும். இத்தகைய அமைப்பு முறை நம் நாட்டில் சிறப்பாக அமையவில்லை. ஆதார வைத்தியசாலைகளுக்கு உரிய வைத்தியர்கள் நியமிக்கப்படுவதும், கிராமங்களில் உள்ள வைத்தியசாலைகள் அடிப்படை வசதி கொண்டவையாகவும் இருக்கவேண்டும். போதனா வைத்தியசாலை என்பது உயர் வைத்திய வசதி கொண்ட சேவை நிலையமாகச் செயற்பட வேண்டும். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' ஆகும் . ✱

தேசபந்து
இரா.செல்வவடிவேல்

# முரண் தீர் கல்வியில் ஆசிரியர்களின் பங்கு

**முரண் தீர் கல்வி என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. ஆசிரியர்களின் செயற்பாடுகளே மாணவர்களின் கற்றல் வளர்ச்சிக்கு வழிகோலுவனவாக அமையும்.**

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக, ப்பாக மேலைத்தேய நாடுகளில் வெற்றிகரமாக முறைப்படுத்தப்பட்டு வரும் ஒரு செயல் றையாக முரண்தீர் கல்வி வளர்ச்சியடைந் ளது.

ஆரம்பத்தில் மருத்துவம் சார் கற்கைகளிலும் போது சகல துறைகளிலும் இந்தச் செயல் ற இலகுவாகப் பயன்படுத்தப்பட்டு வரு றது. குறிப்பாக உயர் கல்வியிலும் ஆராய்ச்சி லும் முரண்தீர் கற்கையின் பாகுபாடு சிறந்த பலன்களைத் தந்துள்ளது.

### முரண் தீர் கற்கை என்றால் என்ன?

மாணவர்களை மையப்படுத்தியதான கற்கை துகுமுறை என இதனை வரையறுக்க முடியும். வியின் இலக்குகளை மாணவர்களே புரிந்து ண்டு அதனை அடைவதற்காக அவர்களைப் காளிகளாக்கும் ஒரு செயல் முறையைக் ண்டது.

மாணவர்களுக்காக ஆசிரியர்கள் தீர்மானங்கள் க்கின்ற நிலைகளைத் தவிர்த்து மாணவர் ன் கற்றல் தொடர்பாடல் செயற்பாடுகளுக்கு ர்களே பகுதியான பொறுப்பாளிகளா கவும் கொள்ளலாம்.

கல்வி செயற்படுவதற்கு ஒத்ததான செயற் களையும் ஒப்படைகளையும் முன்னிறுத்து க இது அமைகின்றது.

### சவால்களை எதிர்கொள்ளத் தூண்டுதல்

முரண் தீர் கற்கையானது எப்போதும் வினைத் ன் மிக்கதாக கலந்துரையாடல் கொண்ட பற்பாடாக இருத்தல் வேண்டும். இதில் சிரியர் மிக அரிதாக மாணவர்களின் கற்றல் பற்பாட்டை அவதானிப்பவராக இருப்பார்.

இந்தக் கற்கை குறிப்பாக பாடவிதானம் சார்ந் கவே அமைந்திருக்கும். இதில் பாடத்திட்ட ளடக்கங்களைக் கற்பிப்பதோடு உண்மை உலக யதார்த்தத்தில் எதிர் நோக்கக் கூடிய ல்களை ஒப்பிட்டு ஆய்வு செய்யத் தூண்ட வேண்டும்.

முரண் தீர் கற்கையில் சரி பிழை என்பதற்கு லாக பிரச்சினைகளை வெளிப்படுத்து ற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுகளைப் வேறு வழிகளில் தீர்ப்பதற்கான ஆற்றல் ளயும் அறிவையும் பற்றிச் சிந்திப்பதாக மயும். இங்கு தீர்வு என்பது தரவுகளைச் ப்பித்து அதனைத் தர்க்க ரீதியான சிந்தனை றலோடு தொடர்புபடுத்துவதாகும்.

இங்கு தர்க்க ரீதியான சிந்தனை என்றால் ன? எனச் சிந்திப்பது முக்கியமானது.

ஒரு விடயம் தொடர்பாகத் தகவல்களை வுக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்வதை இது க்கும். இதனால் தர்க்க ரீதியான சிந்தனை சிந்தனையைத் தூண்டி எந்தத் தகவல் க் கொள்ளக்கூடியது, எது ஏற்றுக் கொள்ள பாதது என்ற ஒப்பீட்டை ஏற்படுத்தி புதிதான அறிவுசார் கட்டமைப்பைக் கொடுகின்றது.

### மாணவர்கள் வெற்றுத்தாள்கள் அல்லர்

நாம் கற்கும் அல்லது தெரிவு செய்யும் த்தில் அனுபவமோ முன்னறிவோ இல்லா மாணவர்களிடம் இவ்வாறான கற்கைமுறை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையாது. இவ்வாறான கற்கையின் பொதுவான விமர்சனமாக இது கொள்ளப்படுகிறது.

ஆனால், ஆராய்ச்சியாளர்களின் கூற்றின்படி எந்தவொரு ஆரம்பக் கற்கையானாலும் கற்பதற்கு வரும்போது மாணவர்கள் எந்த அறிவோ ஆற்றலோ இல்லாது வெற்றுத்தாள்களாக வருவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

சில சந்தர்ப்பங்களில் குறித்த பாடம் தொடர்பாக ஆசிரியர் எதிர்பார்ப்பதற்கு மேலான அறிவோடும் ஆற்றலோடும் மாணவர்கள் இருப்பதற்கு வாய்ப்புக்களும் உண்டு. குறித்த பாடம் தொடர்பாகவுள்ள அறிவு சரியா பிழையா என்ற விவாதத்துக்கு மேலாக மாணவன் ஒரு குறித்த பாடத்தைக் கற்பதற்கு முயற்சிக்கிறான் அல்லது அணுகுகிறான் என்பதே முக்கியமாகின்றது.

இவ்வாறான நிலைப்பாட்டில் ஆசிரியர்களிடம், மாணவர்களிடமுள்ள புலமைத்துவ அறிவை அல்லது உணர்வை இனங்காணும் அல்லது உய்த்தறியும் ஆற்றல் இருக்கவேண்டும். இதனைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களும் எவ்வாறு தமக்குமுன்னுள்ள சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை நோக்குதல் வேண்டும்.

### புதிதாகக் கண்டுபிடிக்க ஊக்கப்படுத்த வேண்டும்

இதில் ஆசிரியர்- மாணவரிடம் புதிதாக அறிவை உருவாக்குமாறு கேட்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், ஆசிரியர்கள் மாணவர்களிடம் அவர்களுக்குப் புதிதாகவுள்ள ஏதோவொன்றைக் கண்டுபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். மாணவர்களுக்குக் கற்றலில் உள்ள பிரச்சினைகளை அறிவார்ந்த நிலையில் ஊக்கப் படுத்துபவராக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் தனித்தனியே வெவ்வேறான முரண்தீர் தந்திரோபாயங்களைக் கொண்டிருப்பார்கள். ஆசிரியரின் பொதுவான பணியாக அறிவுசார்ந்த கேள்விகளைக் கேட்பதாக இருக்கும். ஆசிரியர் மாணவர்களின் சாதனைகளைத் தூண்டக்கூடியதான கேள்விகளைக் கேட்டல் வேண்டும். கற்பதனால் வரும் விளைவுகளில் அதிக கவனம் செலுத்துவதைவிட கற்கைச் செயல்முறையில் அதிகம் கவனம் செலுத்தக் கூடியதாக ஆசிரியர் மாணவர்களை வழிநடத்த வேண்டும்.

முரண்தீர் கற்கையில் ஆசிரியரின் செயற்பாடு மாணவர்களின் ஞானக்கண்ணைத் திறப்பதாக அமையும். இவ்வாறான கற்கைச் செயற்பாடுகள் இன்று பெரும்பாலும் உயர்கல்வியில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை போன்ற உயர்கல்வியில் மாற்றங்களைக் கொண்டுவர எத்தனிக்கும் நாடுகள் இந்தக் கல்விச் செயற்றிட்டத்தை உள்வாங்குவதன் மூலம் நாட்டைக் கல்வி அபிவிருத்தியில் விரைவாக இட்டுச் செல்ல முடியும்.

*

**தே.ஜனனி,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்.**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## கவிதையில் தெரியும் காட்சி



நாம் யார்? நமது தகுதி என்ன? என்கிற நினைப்பு எப்பவும் நமக்கு இருக்கவேண்டும். தகுதிக்கு மீறிய நினைப்புதான் பல சமயங்களில் நம்மை சிக்கலில் கொண்டு போய் விடுகிறது. இந்த நினைப்பு பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்திலே ஒரு கவிதையாக உருவெடுத்து வந்துள்ளது.

"இரண்டு பக்கமும் வாலா'?' என்றது பூனை. "எதிரிலே தும்பிக்கை" என்றது யானை. "உருண்ட துதிக்கை ஏனோ?" என்றது பூனை. "ஊற்று நீரை உறிஞ்ச" என்றது யானை. "திரண்டு நீண்ட பல் ஏன்?" என்றது பூனை. "சீறும் புலியைத் தாக்க என்றது" யானை. இருண்ட மலை பாயாதென்றது பூனை. எடுத்தெறிந்தது பூனையைப் போய் யானை.

ஒரு பூனை இருந்தது. அது தன்னை ஒரு புலி என்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப் பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்போடு அந்தப் பூனை நடந்து போய்க் கொண்டிருந்தது.

அப்போது வழியில் ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது. அந்த யானை பொறுமையாக நின்றதால் இந்தப் பூனைக்கு அதனிடம் போய் வாலாட்டிப் பார்க்க ஆசை வந்தது. உலக இயல்பும் அதுதானே;

இந்தப் பூனை மிகவும் நல்ல பிள்ளை மாதிரி அந்த யானை இருக்கிற பக்கமா போய் அதைச் சுற்றிச் சுற்றி வந்தது. உற்று உற்றுப் பார்த்து "எல்லோருக்கும் ஒரு பக்கம் தான் வால் இருக்கு ஆனால் உனக்கு என்ன இப்படி இரண்டு பக்கமும் வாலா?" அப்படியென்றது பூனை. பொறுமையாகப் பதில் சொன்னது யானை. "அப்படியில்லை பின்னாடி இருக்கிறது வால் முன்னாடி இருக்கிறது தும்பிக்கை!" என்றது.

அதோடு விட்டுவிட வேண்டியது தானே விடவில்லை இந்தப் பூனை.

"அது சரி தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கு. அது என்னத்துக்கு அப்படி என்றது. இதுக்கும் அந்த யானை பொறுமையாகவே பதில் சொன்னது. "ஓ அதைக் கேக்கிறியா! ஊற்றுலே இருக்கும் தண்ணீரை உறிஞ்சிக் குடிப்பதற்காகத் தான்" அப்படி இருக்கிறது என்றது.

"சரி எல்லோருக்கும் பல்லு வாய்க்குள்ளே தான் இருக்கும் உனக்கு என்ன வெளியே இருக்கு அதுவுமில்லாமல் இவ்வளவு பெரிசா இவ்வளவு நீளமாக இருக்கு" என்று கேட்டது பூனை. "அதுவா ஒரு புலி என்னிடம் வந்து வாலாட்டினால் அதைத் தாக்குவதற்குத் தான் இது" என்றது.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தது விட்டது. "மலை எங்கேயாவது பாய்வது உண்டா? நீயோ கறுப்பா பெரிசா இருக்கிற மலை; உன்னாலே எப்படி பாய முடியும்? அது முடியாத காரியம் என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தது.

"என் உடம்பைப் பார்த்து விட்டுத்தானே மலை என்று சொல்கிறாய் நான் பாய வேண்டிய அவசியம் இல்லை; இப்ப உன்னைப் பாயவைக்கிறேன் பார் " என்று சொல்லிவிட்டு அந்தப் பூனையை தும்பிக்கையினால் அலட்சியமாகத் தூக்கி எறிந்தது யானை.

எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை அப்பாடா என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுந்த நின்று பார்த்தது. தூரத்திலே அந்த யானை இன்னமும் பொறுமையாகக் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இப்பதான் அந்தப் பூனைக்கு ஞானோதயம் பிறந்தது. "யானை பாய வேண்டிய அவசியமில்லை அதுக்கு நீளமான தும்பிக்கை இருக்கு" என்று புரிந்து கொண்டது. "வலியாரிடம் வாயாடக் கூடாது" என்கிற பாடத்தைப் பூனை கற்றுக்கொண்டது.

இந்தக் காட்சியையே பாவேந்தர் கவிதையாக வடித்துள்ளார். இந்தக் கவிதையிலே ஒரு பாடமும் இருக்கு, படமும் இருக்கு. வலியாரிடம் வாயாடக் கூடாது என்பதை சின்னப் பிள்ளைகள் மட்டுமல்லாமல் இந்தக் காலத்துப் பெரியவர்களும் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஒருத்தன் அப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக உட்கார்ந்த இன்னொருத்தன் தலையிலே குட்டினான். ஆற்றங்கரையில் இருந்தவன் உடனே ஒரு ரூபாவை எடுத்து இவன் கையிலே கொடுத்தான். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்கு அவன் சொன்னான், "இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம், யாரைக் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபா வீதம் கொடுத்துவிடுவார்கள்" என்று பொறுமையாகச் சொன்னான்.

இவனுக்குப் பேராசை உண்டாகிவிட்டது. உடனே ஊருக்குள்ளே ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து திரும்பி ஓடி வந்தான். அந்த முதல் ஆசாமியைப் பார்த்து "உங்கள் பேச்சைக் கேட்டு ஊருக்குள்ளே போய் ஒரு பெரிய ஆசாமியைப் பார்த்து அவன் தலையிலே பத்துக்குட்டு குட்டினேன். ஆனால் அவன் உடனே என்னிடம் இருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்து விட்டான் என்றான். என்ன பணமா?" என்றான் மற்றவன். "இல்லை பல்லு!" என்றான் இவன்.

**கோ.சுவாமிநாதன்.**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**காதலர் தினம் கொண்டாடப்படுவது எமது கலாசாரத்துக்கு**

ஏற்றது ☐ ஏற்றதன்று ☐

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
அடையாள அட்டை இல. ..................................................

உங்கள் தீர்ப்புக்களை 24.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.




## காதலர் தினம் கொண்டாடப்படுவது

**ஏற்றது**

தமிழர்களாகிய எமது சமூக வாழ்க்கையில் காதல் என்பது இன்றுமட்டுமல்ல சங்ககாலம் தொட்டே இருந்துள்ளது என்பதற்கு சங்கஇலக்கியங்களே ஆதாரமாகும்.

உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை உயிர்மூச்சுப்போல மணவாழ்க்கைக்கு அடிப்படை காதலே.

இவ்வாறான சிறப்புமிக்க காதலை மேலும் சிறப்பிப்பதற்காக வருடத்தில் ஒருமுறை காதலர்கள் தமது அன்பைக் காதல் மடல்கள், அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றைப் பரிமாறி வெளிப்படையாகக் கொண்டாடுகிறார்கள். இத்தினம் மணம் முடித்த காதலர்களாலும் கொண்டாடப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

காதலர்கள் தமக்குள் இருக்கும் அன்பை வெளிப்படையாக எமது பண்பாட்டிற்கு ஏற்றவகையில் கொண்டாடுகின்றபோது அது சமூகத்தில் மேலும் அன்பையும் பாசத்தையும் வளர்க்க உதவுமே தவிர மாறாகக் கலாசாரத்தைச் சீரழிக்காது.

எனவே காதலர்தினம் கொண்டாடுவது எமது கலாசாரத்திற்கு ஏற்றதே ஆகும்.

சி.அஞ்சலி,
கொழும்புத்துறை.

**ஏற்றதன்று**

எத்தனையோபேர் தம்முடைய வாழ்க்கையை பலவழிகளில் சீர்குலைப்பது அதிகரித்த வண்ணமுள்ளது. அதற்கான காரணிகளில் காதலும் ஒன்று. அந்தவகையில் நமது நாடும் தமிழ் மண்வாசனையுடன் இனம், மதம், மொழி, உடை, உணவு என்பவற்றில் சிறந்து விளங்கும் இனிய இயற்கைத் தேசம்.

காதல் என்பது பல இடங்களில் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி. அதுபோல்தான் இலங்கை மானிடர்களுக்கும். பல காதல் ஜோடிகளினால் எமது நாடு கெடுகின்றது.

அவர்களைப் பார்த்து அடுத்துவரும் இளம் சந்ததியினரும் தவறான பாதைக்குச் செல்கின்றனர்.

காதலினால் பலபேர் பலவகையான மரணத்தைச் சந்திக்கின்றனர். சிலபேருடைய வாழ்க்கை கேள்விக்குறியாய் மாறிவிடுகின்றது. காதல் செய்யலாம்; ஆனால் காதலர் தினம் கொண்டாடுவது எமது கலாசாரத்திற்கு கேடு விளைவிக்கும்.

இத்தினத்தன்று பலபேர் மது அருந்துதல், கெட்ட செயலில் ஈடுபடல் என்பவற்றைச் செய்கின்றனர்.

தேவையில்லாமல் பணத்தை வீணடிக்கின்றனர்.

இப்பணத்தை நல்ல விடயத்திற்குச் செலவழித்தால் ஆயிரம் நன்மைகள் காதல் ஜோடிகளுக்கே. எனவே காதலர்தினம் எம் கலாசாரத்திற்கு ஏற்றதன்று.

சி.அனோஜனா,
கோயில் வீதி, நல்லூர்.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**காதலர் தினம் கொண்டாடப்படுவது எமது கலாசாரத்துக்கு ஏற்றது, ஏற்றதன்று**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :- ..................................................
முகவரி :- ..................................................
..................................................
.................... ....................
திகதி கையொப்பம்

## உணர்ந்து செயற்படு



சிங்கார நடை நடந்து
சிறகுச் சின்ன ஆடை அணிந்து
கூச்சம் என்பது சிறிதுமின்றி
கூச்சலுடன் செல்கின்றனர்
இவர்களா! தமிழ் பெண்கள்
இதுவா கலாசாரம்!

திருமணம் முடித்த பெண்ணே! - உன்
திருமேனிதனை
சித்திரம் போல் சேலைகட்டி
சிலைபோல நடந்து பார் - உன்னை
கையெடுத்து வணங்கும் உலகம்

திருமணம் ஆகாத பெண்ணே! - உன்
முன்னழகு டீ சேட்டிலும்
பின்னழகு இறுக்கிக்கட்டிய பாவாடையிலும்
ஆகா சுப்பரோ.... சுப்பர்....
இத்தனையும் உன் கணவன் காண்பனை
உணர்ந்து செயற்படு
உத்தமியாய் வாழ்.

சி. மயூரினி,
புத்தூர்.

## இது உங்களுக்கு....

**வாழுங்கள்:** சமூகத்திற்கு பிரயோசனம் உள்ளவராக
**இருங்கள்:** அடுத்தவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல்
**உண்ணுங்கள்:** உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்காக
**குடியுங்கள்:** உங்களுக்குக் கேடு விளைவிக்காததை
**செய்யுங்கள்:** எல்லோருக்கும் பிரயோசனமுள்ளவைகளை
**எழுதுங்கள்:** பிறருக்கு அறிவும், ஆற்றலும் தரக்கூடியவைகளை
**பாருங்கள்:** கண்களுக்கும் மனதுக்கும் பிரயோசனமுள்ளவைகளை
**கற்றுக்கொள்ளுங்கள்:** எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உதவக்கூடியவைகளை
**கழுவுங்கள்:** அடுத்தவர்களினதும் உங்களதும் இதயத்தை
**ஏற்றுக்கொள்ளுங்கள்:** எல்லோருக்கும் மரியாதை செய்யவேண்டும் என்பதை
**சேமியுங்கள்:** ஒவ்வொரு ரூபாவிலிருந்தும்
**அணியுங்கள்:** சுத்தமானதும் உங்களுக்கு பொருத்தமானவைகளையும்
**செல்லுங்கள்:** செல்ல வேண்டிய பயணத்தை அச்சமின்றி
**உறங்குங்கள்:** நிம்மதியை எதிர்பார்த்த வண்ணம்
**எழும்புங்கள்:** நிறைவேற்றுவதற்கு இன்னும் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன
**உருவாக்குங்கள்:** சமூகத்திற்குப் பிரயோசனம் உள்ளவர்களை.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்

## இன்றைய இளைய சமுதாயம்

''இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்'' இன்றைய சிறுவர்கள் முன்னோரிலும் பார்க்க அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குபவர்கள். இவர்கள் நடைமுறை வாழ்க்கையோடு அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள். எத்துறைசார்ந்த கல்வியைக் கற்றாலும் சமய, சமுதாய பண்புகளைப் பேணிப்பாதுகாத்து நடக்கவேண்டியவர்கள்.

பாடசாலைக்குச் செல்வதற்கு முன் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக விளங்குபவர்கள் பெற்றோர்கள். பாடசாலை சென்றாலும் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் விளங்குகிறார்கள். இக்காலப்பகுதியில் பிள்ளைகளின் நடத்தைகளும் பழக்கவழக்கங்களும் பெற்றோரையும் ஆசிரியர்களையும் பின்பற்றியதாகவே அமைகின்றன.

இவர்கள் கட்டிளமைப் பருவத்தை அடையும்போது சகபாடிகளின் தொடர்பு அதிகரிக்கும். அத்துடன் தொலைக்காட்சி, சினிமா என்பனவும் இவர்களின் நடத்தைக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன. இப்பருவத்தில் உள்ளோரிடம் சரியான நடத்தைக் கோலத்தை இனம்காண்பது கடினம்.

இவர்களுக்கு சரியான கண்காணிப்பும் சரியான வழிகாட்டலும் அவசியமாகின்றன. எமக்குமுன் ஒருவன் நீரில் சென்று வழுக்கிவிழுகின்றான். இதை நாம் காண்கின்றோம். இது எமக்குப் பார்த்த அனுபவமாக அமைகின்றது. இதனால் நாம் அவ்விடத்திற்குச் செல்லும்போது அவதானத்துடன் செல்கின்றோம்.


மூத்தோர் பலவகையான அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள். அனுபவங்கள் அவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்திருக்கும்.

இந்த அனுபவங்களில் ஏற்பட்ட தவறுகள் இளைய சமுதாயத்தினருக்கு ஏற்படக்கூடாது என எண்ணுவார்கள்.

சமய, சமுதாயப் பண்புகளைச் சிறு வயதிலிருந்தே பேணி நடப்பவர்கள் மூத்தோருக்குக் கீழ்படிவாக நடப்பார்கள். ஆனால் தீய சகபாடிகளின் தொடர்பால், தொடர்பாடல் சாதனங்களின் தீய பழக்கங்களின் ஆதிக்கத்தில் இருப்போர் நெறிபிறழ்வான நடத்தையில் ஈடுபடுவார்கள். (வளரும்)

சி.டிக்கா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி




**வலி.** கிழக்கில் முதன்நிலைக் கல்லூரியாகவும் யாழ். மாவட்டத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகவும் விளங்கி வரும் கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள வண்.ஏ.பி பாடசாலையில் ஒன்றாகும். 159 வருட கல்விச் சேவையால் வலி.கிழக்குக் கல்விக்கு வளம் சேர்த்து உயர்ந்து நிற்கின்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியில் 8 ஆவது கிலோ மீற்றரில் பிரதான வீதிக்கு மேற்குப்புறமாகக் காணப்படும் கிறிஸ்தவ தேவாலயத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ளது. 1852ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரிமாரினால் சி.எம்.எஸ் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப் பட்டது.

மரபு ரீதியிலான கல்விப் பாரம்பரியங்களினால் கல்வியில் கட்டுப்பாடுகள், சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறைகள் நிலவிய காலப்பகுதியில் சமயக் கல்வியோடு சகலருக்கும் கல்வி வாய்ப்பை வழங்கியது. 1945ஆம் ஆண்டு அதே வளாகத்தில் செயற்பட்டு வந்த பெண்கள் விடுதிப் பாடசாலையையும் ஒன்று சேர்த்து ''கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி'' எனப் பெயர் மாற்றப்பட்டு செயற்பட்டு வருகின்றது.



யாழ்.மாவட்டத்தில் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய கல்லூரியில் விடுதி வசதியும் இருந்தமையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் வருகை தந்து விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்றனர். கல்லூரியின் பெயர் நாடளாவிய ரீதியில் உச்சரிக்கப் பட்டதுண்டு. 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வு வரை கல்லூரி தனக்கே உரிய தனித்துவத்தோடு தனது கல்விச் சேவையைத் தொடர்ந்து வந்த போதிலும் இராணுவ நடவடிக்கைகள், 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு என்பன கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை ஏற்படுத்தியதோடு கல்லூரியின் வளவசதிகளும் சேதப்படுத்தப்பட்டன.

கல்லூரியின் அமைவிடம் கல்லூரியின் வயதை உறுதி செய்யும் வகையில் ஓங்கி உயர்ந்து நிழல்பரப்பும் மரங்கள் மற்றும் அமைப்புக்கள் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு உரமூட்டி உற்சாகமளிப்பனவாக அமைந்துள்ளன. 96 பரப்பு வளாகத்தில் அமைந்துள்ள கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்கள் செயற்படுகின்றன. ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம் என நான்கு பாடத்துறைக்கான கற்றல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. கல்லூரி வளாகத்தில் பொருத்தமான மத்திய இடத்தில் விளையாட்டு மைதானம், 125 ஆவது ஆண்டு நினைவு மண்டபம், கலை அரங்கம் போன்ற முக்கியமான வளவசதிகளைக் கொண்ட கல்லூரியாகும். கல்லூரியின் சமகால வளவசதியும் அமைப்பும் கல்விப் பெறுபேறுகளும் வலி. கிழக்கில் முன்னணியில் உள்ளன.

இந்தவகையில் வலிகாமம் கிழக்குப் பிரிவில் இருந்து மட்டுமல்ல வலிகாமம் பெரும் பிரிவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் விருப்பத்தோடு அனுமதிபெற்று கல்வி கற்கும் நிலையை தோற்றுவித்துள்ளது. நகரப் பாடசாலை நோக்கி மாணவர்கள் நகரும் சமகாலச் சூழலில் கணிசமான அளவு மாணவர்கள் கல்லூரியை நோக்கி வருகின்ற சூழல் கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

கல்லூரியில் தற்பொழுது 56 ஆசிரியர்கள் கடமைபுரிகின்றனர். கல்லூரியின் அதிபராக கே.ஆர்.இராசகேரன் கடமையாற்றுகின்றார்.

(தொடரும்)

# வலிகாமம் கிழக்கின் வாழ்வாதாரத்தில் கூட்டுறவு அமைப்புக்களின் பங்களிப்பு



தொகுப்பு:ஞான ஆதவன்

கூட்டுறவு ''ஐக்கியம்'', ''ஒன்று கூடி வாழ்தல்'', ''ஒன்று பட்டு உழைத்தல்'' எனப்பொருள்படும். ஒருவரால் ஆற்றுவதற்குக் கடினமான செயலைப் பலர் ஒன்றுகூடி மிக இலகுவாகவும் சிக்கனமாகவும் செய்து முடித்தல் என்பதே அதன் உட்பொருள். ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் உழைப்பதென்பதே கூட்டுறவின் அதியுன்னத இலட்சியமாகும். உயிரிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் கூட்டுறவுப் பண்புகள் இரண்டறக் கலந்துள்ளன. அந்தவகையில் மனிதன் தோன்றிய காலம் முதல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இன்றைய உயர்நிலைக்கு மனித இனத்தை மேல் நிலைப்படுத்தி நிற்கின்றது எனக் கொள்ளப்படுகின்றது.

1844 ஆம் ஆண்டு கூட்டுறவுக் கொள்கையை ''றொச்டேல்'' முன்னோடிகள் ஒழுங்கமைத்து, வடிவமைத்து உலகுக்கு பிரகடனப்படுத்தினர். தடையற்ற அங்கத்துவம், ஜனநாயக நிர்வாகம், ஆண் பெண் இருபாலாருக்கும் சமவுரிமை, தரமான கலப்படம் அற்ற பொருள்களை விநியோகித்தல், சங்க விடயங்களில் இரகசியம் பேணாத பகிரங்கத் தன்மை உள்ளிட்ட 13 கொள்கை விதிகளைக்கொண்ட பிரகடனத்தின் ஊடாகக் கூட்டுறவு உலகின் பல்வேறு துறைகளிலும் பரந்து விரிந்துள்ளது.

இலங்கையில் 1906 ஆண்டு கூட்டுறவு அம்சம் பொருந்திய கடன் கொடுக்கும் கூட்டுறவு அமைப்பு தெல்தெனியாவில் உள்ள தும்பறை கிராமத்தில் முதன்முதல் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டது. 1911 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க முதலாவது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முதலாவது ஐக்கிய நாணய சங்கம் 1912 ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் உள்ள வெல்லப்படபத்த கிராமத்தில் உருவாக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 1916ஆம் ஆண்டு முதலாவது ஐக்கிய நாணய சங்கம் கரவெட்டியில் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது. யாழ் மாவட்டக் கூட்டுறவு சங்கத்தின் செயற்பாடுகள் ''ஐக்கிய நாணய சங்கங்கள்'' என்ற வகையில் கிராமிய மட்டத்தில் பலம் பொருந்திய அமைப்புக்களாகச் செயற்பட்டுவந்தன.

1916 ஆம் ஆண்டில் இருந்து 1940 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி ஐக்கிய நாணயச் சங்கங்களின் காலப்பகுதி எனக் கூறும் வகையில் ஐக்கிய நாணய சங்கத்தின் செயற்பாடுகள் விரவிக் காணப்பட்டன. யாழ்.மாவட்டக் கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப்போற்றப்படும் பெரியார் வீ.வீரசிங்கம் அவர்களின் அயராத முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் உள்ள புகையிலைச் செய்கையாளர்களையும் ஒன்று சேர்த்து யாழ் மாவட்ட மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் சங்கம் 1933 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அனைவரும் உறுப்புரிமை பெற்றிருந்ததோடு, பிரதேச ரீதியாகவும் சங்கத்தின் கிளைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டன. இதன் செயற்பாடுகள் 1945 வரை உறுதியான நிலையில் இருந்தன. 1945 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவின் கேரளத்துப் புகையிலை ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டதை அடுத்து சங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. யாழ்ப்பாணத்தின் முதலாவது பணப்பயிர் புகையிலையே.

மலையாளப்புகையிலை செய்கை ஸ்தம்பிதம் அடைந்ததைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் சிகரெட் புகையிலைச் செய்கை, பீடிப் புகையிலைச் செய்கை முன்னெடுக்கப்பட்டன. மலையாளப் புகையிலைச் செய்கை மேல் நிலை பெற்றிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரதான கைத்தொழிலாக சுருட்டுக் கைத்தொழில் விளங்கியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டனர். நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில் சுருட்டுத் தொழிற்சாலைகள் செயற்பட்டன. தனியார் துறையினர் இதில் ஆதிக்கம் செலுத்தினர்.

சுருட்டுத் தயாரிக்கும் தொழிலில் தனியார் செலுத்திய ஆதிக்கம் தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருந்தமையினால் சுருட்டுத் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 1940ஆம் ஆண்டு கோப்பாயில் 'சுருட்டுத் தொழிலாளர்களுக்கான ஐக்கிய சங்கம்' நிறுவப்பட்டது. இது தொழிலாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டது. கோப்பாய் சுருட்டுத் தொழிற்சாலையில் 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டு சுற்றும் பணியில் ஈடுபட்டனர். சுருட்டுத் தொழிற்சாலையாக இயங்கிய பழைய கட்டடம் கோப்பாய் நாற்சந்தியில் வடமேற்கு மூலையில் தற்பொழுதும் உள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தை அடுத்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் மொத்த வியாபாரிகள் மூலமும் தனியார் வியாபாரிகள் மூலமும் பொதுமக்களுக்குக் கூப்பன் முறை மூலம் விநியோகிக்கப்பட்டன. 1942-1943 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த நடைமுறை எதிர்பார்த்தளவுக்கு வெற்றியளிக்கத் தவறியதோடு, அந்த நடைமுறை பொதுமக்களுக்கு பாதிப்பானவையாகவும் காணப்பட்டதையடுத்து 1944 ஆம் ஆண்டு பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகத்துக்குக் கிராமிய மட்டத்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவப்பட்டன. இந்தவகையில் வலி.கிழக்கில் 60 இற்கும் மேற்பட்ட பண்டகசாலைகள் பங்கீட்டு உணவு விநியோகத்தில் ஈடுபட்டன.

(தொடரும்)

## சாரதிதேவை

ஐஸ் கிறீம் வான் ஓடுவதற்கு சாரதிதேவை.

**ராஜீன் ஐஸ்கிறீம்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

## வீடு விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் பரமேஸ்வரா வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விலைபேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0776229277


# ஏ-9 வீதியில் வாகன விபத்து

யாழ்ப்பாணம், பெப்.10

கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த கனரக வாகனம் ஒன்று ஏ-9 வீதியில், வீதியை விட்டு விலகிக் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மதவாச்சிக்கும் நொச்சியாகமத்துக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் தேங்கி நின்ற வெள்ளத்தை விலகிச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனத்தில் பயணித்த வாகனச் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக் கொண்டனர். இதன் பின்னர் அந்த வாகனத்தில் இருந்த பொருள்கள் வேறு வாகனம் ஒன்றுக்கு மாற்றப்பட்டு அவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-14)

# மதகால் ஆபத்து

யாழ். மானிப்பாய் வீதயில் ஆனைக்கோட்டைப் பகுதியில் மதகு ஒன்று பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த மதகின் வீதியோரமாக ஏற்பட்ட உடைவு தற்போது விசாலித்துக் காணப்படுகிறது.

இதனால் பெரும் ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஒ-160)


## கோழி இறைச்சி நேரடி விற்பனையாளர்கள் தேவை

பிரீதிக் அவர்களை பெப். 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்க இப்போதே அழையுங்கள்

**0777755500**

**நியூ அந்தோனீஸ் ஃபாம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
இல.13, யட்டோவிற்ற, தித்தபத்தர, ஹங்வெல்ல, இலங்கை.
தொலைபேசி: +94-11-2406006, +94-11-2406337
ஃபெக்ஸ்: +94-11-2406558
விற்பனை ஹொட்லைன்: +94-11-2406559
மொபைல்: +94-777-717683
ஈ-மெயில்: hrnaf@sltnet.lk




077-3475970
077-3930370
**NPS Equipment (Pvt) Ltd**
370, Nawala Road, Rajagiriya. Sri Lanka.
Tel : 4542896 Fax : 2508647 E-mail : npseq@sltnet.lk
FLEX Graphic

## புத்தகம் கட்டும் பயிலுநர் தேவை

புத்தகம் கட்டுநராகப் (Book Binders) பழக விரும்பும் பெண்கள் மட்டும் 11,12-02-2011 திகதிகளில் (வெள்ளி, சனிக் கிழமைகள்) முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை நேரில் வரவும். அண்மைய நற்சான்றிதழுடன் வருகை தருவது விரும்பத்தக்கது.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## UNIVERSITY OF JAFFNA
### FACULTY OF GRADUATE STUDIES
### *Postgraduate Programmes -2011/12*

The Faculty of Graduate Studies, University of Jaffna calls applications from eligible candidates for the following. Postgraduate Programmes.

***1.PostgraduateDiploma in Library and Information Science.***

**Admission Requirements:**
a) A Bachelor's degree awarded from a recognized University or Higher Educational Institution.
b) A satisfactory working knowledge of English.
c) A fair knowledge in Computer applications (preferred). Preference will be given to applicants presently associate with work in the Libraries.

*Cours Fee : Rs.38,700/-*
*Duration : One year*
*Medium : Tamil*
*Selection : By interview*

***2. Master of Science in Environmental Management***

**Admission Requirements:**
a) Graduates from Science, Agriculture, and Social Sciences based disciplines from recognized universities.
*OR*
b) Any other graduates with related to the environmental science background may be considered.

*Course Fee : Rs.65,000/-*
*Duration : One year*
*Medium : English*
*Selection : Aptitude Test &interview*


**Closing date for Application: 11th March 2011.**

**Application Procedure:** Application forms and other details for the above Postgraduate Programmes may be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs. 200/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed stamped Rs 5/- envelope 23 x 10 cm in size.

*Registrar,*
*University of Jaffna, 08/02/2011.*


# போயிட்டி புனித லூர்து அன்னையின் நூற்றாண்டு திருவிழா அழைப்பு

## 11.02.2011



எமது ஆலயம் புனித லூர்து அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு நூறு (100) ஆண்டுகள் கடந்த நிலையில் புனித லூர்து அன்னையின் பரிந்துரையால் இறைவனின் பராமரிப்பையும் வழிநடத்தலையும் அனுபவித்த நாங்கள் இறைவனுக்கு நன்றிப்பலி ஒப்புக்கொடுக்க விழைகின்றோம் இந்த நன்றிப் பலியில் இணைந்து இறை புகழ்பாட அன்னையின் பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

10.02.2011 பி.ப. 1 மணிக்கு புனித லூர்து அன்னையின் திருச்சொரூப பவனியும் நற்கருணை ஆராதனையும் 11.02.2011 காலை 7 மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையும் இணைந்து திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

புனித லூர்து அன்னை ஆலயம்,
போயிட்டி, இளவாலை.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

'ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும் மேன்மையாய் விளங்குகின்றது. (தி.பா.8:3-8)

### மன்னார் ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களின் ஆசிச்செய்தி



இளவாலை போயிட்டி புனித லூர்தன்னை ஆலயம் நிகழும் 2011 ஆம் ஆண்டு மாசித் திங்களில் தனது நூற்றாண்டு நிறைவைக் காணும் செய்தி அறிந்து மகிழ்கின்றேன். 1970 ஆம், 1971 ஆம் ஆண்டுகளில் நான் இளவாலை மறைப்பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியபோது இவ்வாலய மக்களுக்கும் ஆன்மீகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். ஆலயம் நூற்றாண்டு நிறைவைக் காண்கின்றபோதும் ஆலயத்தைச் சேர்ந்த மக்களோ அதற்கு முன் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கத்தோலிக்க கிறிஸ்தவ நெறியில் தொடரும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருந்தவர்கள் என்பதையும் நான் அறிவேன்.

மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்

### லூர்து அன்னையின் அருட்காவலைப் பெற்று வாழ்ந்த மக்கள்



தங்கள் பாதுகாவலியாம் லூர்து அன்னையின்பாதுகாவலில் கருவாகி உருவாகி பெரும் விருட்சமாகி இன்று நூற்றாண்டு நிறைவில் இறைவனுக்கு நன்றி கூறியும் மரியன்னைக்கு புகழ் மாலையும் சாற்றி நிற்கும் இளவாலை போயிட்டி ஆலயத் திருச்சபையினருடன் சேர்ந்து நானும் இறைவனுக்கு நன்றி கூறி லூர்து அன்னையை வாழ்த்தி நிற்கின்றேன்.

'இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக'

அன்புடன்
பேரருட் திரு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர், ஆயர் இல்லம்.
யாழ்ப்பாணம்.

# சேவை நலன் பாராட்டு



## செல்வி கமலாதேவி நமசிவாயம்*


**(சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியை)**

| | |
|---|---|
| ★ யா/ வேலணை மத்திய மகா வித்தியாலம் | 1971.10.20- 1972.10.20 |
| ★ யா/அரச பயிற்சிக் கல்லூரி வயாவிளான், யாழ்ப்பாணம் | 1972.01.21- 1973.12.31 |
| ★ க/ஜாம்புல் அக்ஷார் முஸ்லீம் மகா வித்தியாலயம் கட்டுக்கஸ் தோட்ட | 1974.01.01- 1979.05.31 |
| ★ க/இரஜவெல தமிழ் மகா வித்தியாலயம் செங்கல்ல | 1979.06.01- 1981.12.31 |
| ★ யா/ வேலணை மத்திய மகா வித்தியாலயம் | 1982.01.01- 1998.08.26 |
| ★ யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி | 1998.08.27- இன்றுவரை. |

கலைமகள் அருளினாலே
நற்கலைகள் பல பயின்று
நற்றமிழை நன்றாய் மிக நயந்து
வித்தைகள் பல நிறைந்த
விஞ்ஞானத் துறையைச் சிறப்பாகப் பயின்ற நற்றவத்தால்
நல் மாணாக்கர் சமூகத்தை மேன்மை பெற வைத்து- இன்று
அகவை அறுபதில் இளைப்பாறும்
நங்கை நல்லாள் நலம் பல பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்லூரிசாரா ஊழியர்கள்,
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.

# இருளின் கதவுகளைத் திறந்தவன் 23



2010 ஏப்ரல் 01. உலக முட்டாள்கள் தினம்.

எல்லா விடயங்களிலும் தன்னைவிட இந்த உலகில் எந்தக் கொம்பனும் இல்லை என்கிற கணக்காகப் பீற்றிக் கொள்கிற அமெரிக்காவை முட்டாளாக்கி விட்டு , ஐஸ்லாந்து விமானநிலையத்தில் யூலியன் வந்திறங்கினான்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரும் யூலியனிடன் கூடவே வந்திருந்தார். அமெரிக்காவை விட்டு யூலியன் ஐஸ்லாந்துக்குப் போனதால் ஐஸ்லாந்தைப் பற்றிய ஏதோ ஒரு இரகசியத்தையே யூலியன் அவிழ்க்கப்போகிறான் என அமெரிக்கா நினைத்திருந்தது.

எனினும் 'எதற்கும் இருக்கட்டும்' என்னும் நினைப்பில் யூலியன் மீதான சி.ஐ. ஏயின் கண்காணிப்பை அது விலக்கவில்லை. ஐஸ்லாந்தில் இறங்கிய கையோடு 'ட்விட்டர்' இணையத்தளத்தின் மூலம் தன் நண்பர்களுடன் உரையாடிய யூலியன் ''எங்களைப் பற்றி எவரும் கவலைப்படாதீர்கள். நாங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பில் இருக்கிறோம்'' எனக் கிண்டலாகச் சொன்னான். இந்த இணைய அரட்டைக்குப் பிறகு யூலியனுக்கு நேரமே இருக்கவில்லை. கடமை அவனை அவசரமாக அழைத்தது.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

விமானநிலையத்தில் இருந்து யூலியன் வாடகைக்காரொன்றின் மூலம் ஐஸ்லாந்தின் ஒதுக்குப் புறமான ஊரொன்றுக்குச் சென்றான்.வழியில் மேலும் ஐந்து பேர் அந்தக் காருக்குள் நுழைந்து கொண்டனர். அவர்கள் ஐவரும் விக்கிலீக்ஸின் ஐஸ்லாந்துக் கிளைக்குப் பொறுப்பானவர்கள். யூலியனின் வளர்ப்பில் உருவான குஞ்சுகள். ஏழுபேரையும் சுமந்தபடி விரைந்த கார், வீடுகளை வாடகைக்குக் கொடுக்கும் நிறுவனம் ஒன்றின் முன்னால் நின்றது.

முகத்தில் எவ்வித சலனமுமின்றி யூலியன் நிறுவனத்துக்குள் நுழைந்தான்.

''உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா?'' முகத்தைப் போலவே குரலிலும் இனிமையைச் சேர்த்தவாறு வரவேற்பாளினி ஒருத்தி யூலியனை வினவினாள்.

''நிச்சயமாக. ஒரு வீடு வாடகைக்குத் தேவை.'' அழுத்தம் திருத்தமான குரலில் யூலியன் பதிலுறுத்தான்.

''எத்தனை நாளைக்கு?''

''ஐந்து நாள்களுக்கு!''

''என்ன நோக்கத்துக்காக?''

''எரிமலைகள் பற்றிய ஆய்வுக்காக'' தன்னுடைய கேள்விகளையும் யூலியனின் பதில்களையும் பதிவு செய்து கொண்டபின், முகமலர்வுடன் அந்தப் பெண் சொன்னாள்-

''மிஸ்டர் யூலியன்! இதே வீதியில் உள்ள 62 ஆம் இலக்க வீட்டினை நீங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்'' அனுமதி கிடைத்துவிட்டது. யூலியனின் கையில் வீட்டின் திறப்பும் வரவேற்பாளினியின் கைகளில் முற்பணமும் தஞ்சமடைந்தன.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ''யூலியன் அன்ட் கோ'' அந்த வீட்டில் குடிபுகுந்தது. காரில் இருந்து யூலியன் கொண்டு வந்திருந்த மடிக்கணினிகள் இறக்கப்பட்டு, வீட்டினுள் உள்ளக இணைப்புக் கொண்டவையாக அவை பொருத்தப்பட்டன. நாலைந்து தரம் கடைகளுக்குச் சென்று வந்த கார் ஏராளமான உணவுப் பொருள்களைச் சுமக்கவேண்டியிருந்தது. அந்த உணவுப் பொருள்கள் எல்லாமே குளிர்சாதனப் பெட்டிக்குள் அடுக்கி வைக்கப்பட்டன. ஒவ்வொருவருக்குமுரிய வேலைகள் பற்றிய விவரம் அட்டவணைப்படுத்தப்பட்டது.

வீட்டிலிருந்த தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டது. ஜன்னலோரமாக திரைச்சேலைகள் தொங்கவிடப்பட்டன. இதனால் உள்ளே என்ன நடக்கிறது என்பதை எவராலும் ஓரளவுக்குத்தானும் யூகிக்க முடியாது. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்குப் பின் அந்த இடம் ஒரு போர்க்கட்டுப்பாட்டு அறை போல் மாறியிருந்தது.அதன் பின் யூலியன் 'சிக்னல் கொடுக்க' வேலை தொடங்கியது. அந்த வேலை முடியும் வரை- நான்கு நாள்களாக- அவர்கள் அனைவரும் உரையாடிக் கொண்ட சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு.

உள்ளே இருந்தவர்கள் உலகைத்தையே மறந்தவர்கள் போல கடமையே கண்ணென மூழ்கியிருக்க,

**ஒளண்யன்**

அந்த வீட்டைச் சுற்றி வளைய வந்த சி.ஐ. ஏ. உளவாளிகள் வீட்டினுள் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் குட்டி போட்ட பூனை மாதிரி குறுக்கும் மறுக்குமாக நடந்து திரிந்ததுதான் மிச்சம். ஐஸ்லாந்தில் எரிமலைகள் அதிகம். அண்மையில் கூட ஐஸ்லாந்தில் எரிமலை ஒன்று குமுறியதால் ஐரோப்பாவுக்கான விமானப் போக்குவரத்தே துண்டிக்குமளவுக்கு வான்வெளியைத் தூசுமண்டலம் ஆக்கிரமித்திருந்தது. ஆனாலும் எரிமலைகளை ஏன் யூலியன் ஆய்வு செய்யவேண்டும் என்பதுதான் சி.ஐ. ஏயின் கேள்வி. அந்தக் கேள்விக்கு நான்கு நாள்களில் விடை கிடைத்தது. மூடப்பட்டிருந்த வீட்டிலிருந்து எரிமலை வெடித்தது. அதன் தகிப்பில் அமெரிக்காவே வெந்து போனது. சொல்லாமல் வெடித்த எரிமலையின் பெயர் சமகாலக் கொலைகள். *(திரைகள் இன்னும் திறக்கும்)*

# இந்த இரசாயனவியல் ஆண்டிலாவது எமக்கு விடிவு கிடைக்குமா?

எங்களூர் வளமான பனை மரத்தை நம்பியிருக்கும் நாங்கள் சுயவேலை வாய்ப்பு மூலம் எங்களது வாழ்க்கையை வாழ்ந்து காட்டியிருக்கும் அவ்வேளையில், இந்த வளத்தின் பயன்பாடுகளை உலகமறிய, உணர வைத்திருக்கிறோம். இதில் எமக்குப் பெருமையும் கூட. 2011 ஆம் ஆண்டு இரசாயனவியல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதையறிந்து எங்களூரவர் சார்பில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஆண்டில் எங்களுக்கு விடிவு கிடைக்குமா? எனவும் அங்கலாய்க்கின்றோம்.

சமூக மட்டத்தில் தீய பழக்கமாக குடிப்பழக்கம் இருப்பதுவும் பனையிலிருந்து பெறப்படும் கள் குடிபோதையை ஏற்படுத்துவதுமே இங்கு ஆழ்ந்து அவதானிக்க வேண்டிய விடயமாகியிருக்கிறது. எங்களது சமூகம் முன்னேற வேண்டும் என்பதில் எங்களுக்கும் அக்கறை இருக்காதா? குடிப்பதனால் பல குடும்பப் பிரச்சினைகள் இருப்பதையும் அது சமூக பிரச்சினையாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாமறிவோம். ஆனால் சீவல் தொழில் மூலம் கள் பெறப்படுவதை முழுவதுமாக எம்மால் தவிர்க்க முடியாதிருக்கின்றது.நோய் நொடியென்று இருப்பினும் வயது வேறுபாடின்றி முதுமையிலும் நெடிய பனை மரத்திலேறி சீவல் தொழிலில் ஈடுபடுவது சுலபமான காரியமல்ல. மீன் பிடிக்க கடலுக்குள் செல்வோர் உடல் உபாதை கண்டு மீண்டும் கரை சேராதிருப்பது போல நெடிய பனையில் உடல் வலிமையால் ஏறி இறங்கும் போது எமது உடலிலும் உபாதை கண்டால் அங்கிருந்து தவறி வீழ்ந்த நிகழ்வுகள் நிறையவே உண்டு. மீனவ நண்பனுக்கு துடுப்புப் போல எங்களுக்குக் கால் பாதமிரண்டையும் கவ்விப்பிடிக்கும் தடைநாரே தஞ்சம். இவ்வளவு ஆபத்துக்களையும் துயரங்களையும் சுமந்து செய்யும் சீவல் தொழிலில் இருக்கும் பிரச்சினைகளைத் தங்களது ஆய்வுக்குட்படுத்தித் தீர்வாக எமக்கு, எமது விடியலுக்குத் தருவீர்களா?

**பூந்துணர்சாறு நொதிக்காமலிருக்க வழியுண்டா?**

ஆண், பெண் என இரு பனைகளினதும் பூந்துணர் எனப்படும் பாளையைச் சீவியே அதிலிருந்து சொட்டுச் சொட்டாக வடியும் சாற்றினை முட்டியில் சேகரித்து விற்பனை செய்கிறோம். முதல் நாள் மாலை பாளையைச் சீவி முட்டியைக் கட்டி விட்டு மறுநாள் காலை முட்டியை மாற்றும் வரை இருக்கும் நேரத்தில் சேர்ந்த பாளைச் சாறு வளியிலுள்ள மதுவத்தினால் நொதித்துக் கள் ஆக மாறிவிடுகின்றது. சேர்ந்த கள்ளை விரைந்து விற்பனை செய்யாவிட்டால் மேலும் நொதித்துக் கெட்டுவிடுகின்றது.

இவ்வாறு நொதிப்பதைத் தடுப்பதற்காக முட்டியின் உட்புறத்தில் அடர்த்தியாகச் சுண்ணாம்பைத் தடவி விடுகிறோம். இதனால் அச்சாறு நொதிக்காது பதநீராக பெறமுடிகிறது. சுண்ணாம்பை அதிகமாகப் பயன்படுத்துவதால் பதநீரில் சுண்ணாம்பின் சுவையும் மண்டியாகப் பதநீரும் விரயமாவதால் சுண்ணாம்புக்கு மாற்றீடான பொருளைத் தேடவேண்டியுள்ளது. பதநீரைப் பானமாக அருந்தும் போது சுண்ணாம்பும் எமது உடலுள் செல்வதால் ஏற்படும் தீங்குகளையும் தவிர்க்க வேண்டியுள்ளது. எனவேதான் பாளைச் சாறு நொதிக்காதிருக்க சுண்ணாம்புக்குப் பதிலாக மாற்றீடான பொருளைத் தங்களது ஆய்வுக்குட்படுத்தித் தாருங்களேன்.

இங்கே ஏற்படும் இராசயன மாற்றமே பூந்துணர்சாறு நொதிப்பதற்கும் சுண்ணாம்பு பூசுவதால் நொதிக்காதிருக்கிறது என்பதற்கும் காரணம் என்பது எமது சிற்றறிவுக்குத் தெரிந்திருந்தாலும் தங்களைப் போல இது விடயத்தில் ஆய்வு செய்யக்கூடிய அறிவு எம்மிடமில்லை. எங்களூருக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தங்களது ஆய்வுப் புலமையைப் பரீட்சிக்கும் தங்களைப் போன்ற இரசாயன விஞ்ஞானிகளிடமிருந்தே இதற்குரிய தீர்வினை வேண்டி நிற்கிறோம். உலகத்தரத்திற்கு உயரவிருக் கும் எங்களூர் பல்கலைக்கழகம் எங்களுடைய பிரச்சினையையும் ஆய்வுக்குட்படுத்தி எங்களுக்கும் வாழ்வளிக்கும் என நம்புகிறோம்.

பதநீரைக் கெடாது வைத்திருப்பதற்கான இலகு முறைகளும் இனங்காணப்படவேண்டும். அதனைப் பக்குவமாகக் கெடாது கொள்கலனில் அடைப்பதற்கும் எளிய முறைகளைக் கண்டுபிடித்து எமக்காகப் பரிந்துரை செய்யுங்கள்.

பதநீரைக் காய்ச்சி பெறப்படும் பனை வெல்லத்தைத் தொடர்ந்து சேமித்து வைக்க முடியவில்லை. உருகும் தன்மை கொண்டதாக, இன்னும் கசியுந் தன்மையுடையதாக இருப்பது இதற்கொரு காரணம். தூயதாகப் பதநீர் வெல்லம் இல்லாதிருப்பதே இதற்கான காரணமென உயிரிரசாயனவியல் வல்லாசான் குறிப்பிட்டார். அவ்வாறாயின் இதனைத் தூயதாக்க செய்யவேண்டிய வழிமுறைகளை இனங்காண உதவுவீர்களா?

பனை மரத்திலிருந்து பெறப்படும் நுங்கு, பதநீர், பூரான், கிழங்கு, பனங்களி என பலவகைப் பொருள்களை மதிப்பேற்றஞ்செய்து சிறந்த புதுமையான உணவுப் பொருள்களாக மாற்ற இரசாயனவியல் ஆண்டு எங்களுக்கு உதவிடுமா?

கள்ளிலிருந்து சாராயம் வடித்தெடுத்த பின்னர் கழிவாக வரும் நீரை நெல் வயலுக்குப் பாய்ச்சி சிறந்த அறுவடையைப் பெறுகின்றார்கள். இக்கழிவு மண்ணினை வளமாக்கவும் மண்ணிலுள்ள நல்ல நுண்ணங்கிகளுக்கு அவற்றை விருத்தி செய்யும் ஊக்கியாகத் தொழிற்படுவதாகவும் விஞ்ஞானங்கற்கும் எனது மகள் குறிப்பிட்டார். இதனைப் பசளையாக மாற்றிடவும் இக்கழிவு நீரை ( spent wash) மண்ணில் விடும்போது மண்ணில் வளப்படுத்தல் பற்றியும் விரிவாக ஆராயவேண்டும்.

பனங்களியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய வேண்டிய பொருள்கள் பல. இது பற்றிய ஆய்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் நன்று. சுயவேலை வாய்ப்பின் உதாரணமாகத் திகழும் எங்களூரின் சொத்தான பனை வளத்தை அபிவிருத்தி செய்து சிறந்த, சுவாத்தியமான, சுகாதாரமான உணவைப் பெற வழிசெய்வோமா? எங்கும் எதிலும் இரசாயன மாற்றங்களே நடக்கின்றன. என் சிற்றறிவுக்கு எட்டியவரை காலநிலையிலும், பூமியிலும் இரசாயன மாற்றங்களே நடந்து கொண்டி ருக்கின்றன. இதனால் இவ்வாண்டை இரசாயனவியல் ஆண்டாகக் கொண்டாடும் எங்களூர் விஞ்ஞானிகளுக்கு என் போன்றோரின் வாழ்த்துக்கள்.

பனைமரத்தை, அதன் வளத்தையும் நம்பி வாழும் என்போன்றவர்களுக்கு இரசாயனவியல் ஆண்டு வரம் பல தருமா?

**ஆர்வலர்**



கிரீஸ் நாட்டிற்கு வந்திருந்த லக்ஸம்பர்க் அதிபர் ஜீன்க் ளவுட் ஜூன்கரை (வலது),அந்நாட்டு பிரதமர் ஜியார்ஜ் பாப்பான்ட்ரியோ, தலைநகர் ஏதென்ஸ் பிரதமர் மாளிகையில் வரவேற்கிறார்

# ஆயுதங்களைத் தூதரகங்களே வருவிப்பதாகச் சாடுகிறது எகிப்து

எகிப்து, பெப்.10

எகிப்தில் நடைபெறும் உள்நாட்டுக் கலவரத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வெளிநாட்டு தூதரகங்கள் ஆயுதங்கள், தொலைத் தொடர்பு சாதனங்களைக் கொண்டு வருவதாக எகிப்து வெளியுறவு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராடி வருகின்றனர். அதிபர் ஹோஸ்னி முபாரக்கை பதவி விலகக் கோரி நடைபெறும் ஆர்ப்பாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பல இடங்களில் அலுவலகங்கள், கடைகள் சூறையாடப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வழங்கவென வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் இந்த சந்தர்ப்பத்தில் ஆயுதங்களையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் எடுத்து வருகின்றனர். தூதர்களுக்கான பைகளில் இவற்றை எடுத்து வருவதாக எகிப்து வெளியுறவு அமைச்சகம் ஞாயிற்றுக் கிழமை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு தூதர்கள் எகிப்திற்குள் நுழைவதற்கு முன் ஆயுதங்கள், தொலைத் தொடர்பு கருவிகளைக் கொண்டு வருவதற்கு அனுமதி பெற்றாக வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதம் ஆயுதங்கள், தொலைத் தொடர்பு சாதனங்களை எகிப்திற்குள் கொண்டு வந்தது எந்த நாட்டு தூதரக அதிகாரிகள் என்பதை வெளியுறவு அமைச்சகம் வெளியிடவில்லை.

(ம)

# குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறு என்கிறார் அசாஞ்சே

லண்டன், பெப்.10

என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் சுவீடனுக்கு நாடு கடத்தும் விடயங்கள் அனைத்தும் தவறானவை என்று ஜூலியன் அசாஞ்சே தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள பெல் மார்ஷ் நீதிவான் நீதிமன்றில், அசாஞ்ச் மீதான சுவீடனுக்கு நாடு கடத்தும் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக நடந்தது. முதல் நாள் விசாரணையில், அசாஞ்சின் வக்கீல்கள் கூறியதாவது:

அவர் சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டால் சுவீடன் அவரை அமெரிக்காவுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்றனர். அமெரிக்கா அவரை குவான்டனமோ சிறைக்கு அனுப்பும் அல்லது மரண தண்டனை அளிக்கும் என்று வாதிட்டனர். அவர்களின் வாதத்தை மறுத்த சுவீடன் தரப்பு சட்டத்தரணி அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தமாட்டோம். அப்படியே ஒரு முயற்சி நடந்தாலும் அதில், பிரிட்டன் தலையிட்டு தடுக்க வாய்ப்புள்ளது என்று கூறினார்.

இதற்கிடையில் முதல் நாள் விசாரணை முடிந்தவுடன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அசாஞ்சே,கடந்த ஐந்து மாதங்களாக என் வாழ்க்கை ஒரு கறுப்புப் பெட்டிக்குள் திணிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டியின் மீது கற்பழிப்பு என்ற குற்றச்சாட்டு ஒட்டப்பட்டிருந்தது. இப்போது, அந்தப் பெட்டி நீதிமன்றத்தில் திறக்கப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் என் மீதான குற்றச்சாட்டு பொய்யானது என்பது நிரூபிக்கப்படும்'' -என்றார். (ம)

# சிகிச்சைக்காக முபாரக் ஜேர்மனிக்கு செல்கிறார்

ஹெய்ரோ, பெப்.10

மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிற எகிப்தின் அதிபர் முபாரக் ஜேர்மனிக்கு வரவுள்ளதாக ஊர்ஜித மற்ற தகவல் அமெரிக்காவில் வெளியாகி இருந்தது. அந்த செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் ''டெர் ஸ்பைகல்'' என்ற இணையதளம் எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஜேர்மனியின் தென் பிராந்தியமான பாடென் வுட்டம் பெர்க்கில் உள்ள மேக்ஸ் கிரண்டிங் மருத்துவமனைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையானது அதிநவீன சொகுசு ஹோட்டல்களுக்கு இணையான வசதிகளை கொண்டதாகும். முபாரக் இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவது எகிப்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கான சமிஞ்ஞைகளாக உள்ளது.

முபாரக் கடந்த காலத்தில் இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துள்ளார். அவரது வருகை குறித்து தங்களுக்கு ஏதும் தகவல் இல்லை என ஜேர்மனி அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ம)

# எகிப்தில் ஆர்ப்பாட்டம்

எகிப்திய துணை ஜனாதிபதி ஓமர் சுலைமான், எதிர்க்கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சுகள் நடத்தினார். எனினும் திருப்தியடையாத மக்கள் 15ஆவது நாளாக தாரிர் சதுக்கத்தில் இலட்சக்கணக்கில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமர் செவ்வாய்க் கிழமை அரசு தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில், ''அரசியல் சாசனத்தின் திருத்தங்களை மேற்கொள்ள ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் உத்தரவில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார்.ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்களை தொந்தரவு செய்ய கூடாது என்று உத்தரவிட்டுள்ளார்'' என்று தெரிவித்தார்.



# பாகிஸ்தானுடன் உயர்மட்டத் தொடர்பை துண்டித்துக் கொண்டது அமெரிக்க அரசு

வாஷிங்ரன், பெப். 10

2 பாகிஸ்தானியர்களைச் சுட்டுக்கொன்றதால், அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

தூதரக அதிகாரி என்ற முறையில் அவரை விடுவிக்க பாகிஸ்தான் மறுத்துவிட்டது. இதனால் கோபம் அடைந்த அமெரிக்கா அந்த நாட்டுடன் உயர்மட்ட தொடர்பை துண்டித்துக் கொண்டது.

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் குரேஷியை அமெரிக்க அமைச்சர் ஹிலாரி சந்திக்க மறுத்துவிட்டார்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் லாகூர் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த ரேமண்ட் டேவிஸ் காரில் சென்றபோது அவரது காரை மறித்த 2 பாகிஸ்தானியர்களை சுட்டுக் கொன்றார்.

இதைத்தொடர்ந்து அவரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட அவரை காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் மீது வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் அவரை விடுதலை செய்யவேண்டும் என்றும் அவர் தூதரக அதிகாரி என்பதால் அவர் மீது பாகிஸ்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்க விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்றும் பாகிஸ்தான் அரசை அமெரிக்கா கேட்டுக்கொண்டது.

இதற்கு பாகிஸ்தான் அரசு சம்மதிக்கவில்லை. பிரச்சினை நீதிமன்றத்தில் உள்ளது. நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கிறதோ அதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பாகிஸ்தான் கூறிவந்தது.

இந்தப் பதிலால் அதிருப்தி அடைந்த அமெரிக்கா, நாடாளுமன்றக் குழுவை அனுப்பி பாகிஸ்தான் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்தது. அந்தக் குழுவினர் ரேமண்ட் டேவிசை விடுவிக்காவிட்டால் இராணுவ உதவி கிடைப்பது தாமதம் ஆகும் என்றும் எச்சரித்தனர்.

இதற்கிடையில் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஹக்கானியும் ரேமண்ட்ஸ் டேவிஸை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அமெரிக்க உறவு பாதிக்கப்படும் என்றும் எச்சரித்தார். இதனால் டேவிஸ் விடுதலை செய்யப்படுவார் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

ஆனால் பாகிஸ்தான் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடுவதில்லை என்ற முடிவை எடுத்தது.

இதைத்தொடர்ந்து பாகிஸ்தானுடனான உயர்மட்ட தொடர்பை அமெரிக்கா துண்டித்தது.

அத்தோடு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி அமெரிக்காவில் அடுத்தமாதம் சுற்றுப்பயணம் செய்ய இருந்தார். இந்தப் பயணத்தை அமெரிக்கா தள்ளி வைத்து உள்ளது.

ஜேர்மனியில் முனீச் நகரில் நடந்த பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை சந்திக்க பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஷா முகமது குரேஷி விரும்பினார். ஆனால் அவரை சந்திக்க ஹிலாரி மறுத்துவிட்டார்.

இதனால் இருநாடுகளுக்கும் இடையேயான உறவு பாதிக்கப்பட்டு உள்ளது. (த)



இரண்டாக பிரியவுள்ள சூடானில் தெற்கு சூடான் தனி நாடு உதயமாகவுள்ளது. இதன் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள சல்வாகிரர்மையாடிரிட்டை, தலைநகர் ஜூபா விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள் உற்சாகத்துடன் வரவேற்கின்றனர்.

## மனைவிக்கு அளித்த வாக்குறுதி புகைப்பதை நிறுத்தினார் ஒபாமா

வாஷிங்டன், பெப். 10

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த ஒரு ஆண்டுகளாகச் சிகரெட் பிடிப்பதை நிறுத்திவிட்டார் என்றும் இதன்மூலம் தன்னிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறார் என்றும் அவரது மனைவி மிட்செல் ஒபாமா கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமாவுக்கு சிறுவயதிலிருந்தே சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்து வந்தது எனக் கூறப்படுகிறது. பின்னர் இவரது மனைவி மிட்செலிடம், தான் அமெரிக்க ஜனாதிபதியானால் சிகரெட் பழக்கத்தை அடியோடு நிறுத்திவிடுவதாக வாக்குறுதி அளித்திருந்தார். எனினும் அதை காப்பாற்ற முடியவில்லை.

இவரது உடல்நிலையைச் சோதித்த குடும்ப டாக்டர் ஜெப்ரி கூல்மேன், ஒபாமா சிகரெட் பிடிப்பதை கட்டாயம் நிறுத்த வேண்டும் என்று கூறி இருந்தார். அதன்படி ஒரு வருடத்துக்கு முன்னர் சிகரெட்பழக்கத்தை நிறுத்தி இன்றுவரை செயல்படுத்தி வருகிறார்'' என்றார் மிட்செல்.

இது குறித்து ஒபாமா செய்தியாளர்களிடம் கூறுகையில், ''நான் எப்பொழுதும் சிகரெட் பிடிக்காமல் இருந்ததில்லை. ஆனாலும் எனது குழந்தைகள், குடும்பத்தினர் முன்பு புகைப்பதில்லை.

தற்போது எனது குழந்தைகள் மலியா (வயது - 12), ஷாஸ்ஹா (வயது - 9) வளர்ந்து விட்டனர். டாக்டரும் புகைப்பதை நிறுத்தச் சொல்லிவிட்டார்.

இதனால் கடந்த 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் புகைப்பதை அடியோடு நிறுத்தி விட்டேன். தற்போது 95 சதவீதம் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்.''

இவ்வாறு ஒபாமா கூறினார்.

அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளரான ரொபர்ட் ஸ்கிப்ஸ் கூறுகையில், ''கடந்த 9 மாதங்களாக நான் ஜனாதிபதி ஒபாமாவை கண்காணித்து வந்தேன். அவர் புகைப்பதை நிறுத்தியுள்ளார் என்பது தெரியவந் தது'' என்றார்.

## ஆணுறைக்குள் போதைப் பொருள்

நியூயோர்க், பெப்.10

அமெரிக்காவின் பூஸ்டன் விமான நிலையத்துக்கு ஜெட்புளு எனும் விமானம் லோகான் விமான நிலையத்தில் வந்திறங்கியது. வழக்கம்போல் பயணிகளின் உடைமைகள் சோதிக்கப்பட்டன. அப்போது 21 வயது நிரம்பிய ஓர் இளைஞரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்படவே அவரைப் பிடித்து சோதனையிட்டனர்.

அந்த இளைஞரை ஸ்கேன் செய்தபோது வயிற்றுக்குள் சந்தேகமான பொருள்கள் இருந்தமை தெரியவந்தது. அவரை டாக்டர்கள் சோதித்துப் பார்த்தபோது அவரது வயிற்றினுள் 50ஆணுறைகளில் ஒவ்வொன்றிலும் 50 மி.கி. போதைப் பொருள்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அவரிடம் சுங்கத்துறையினர் நடத்திய விசாரணையில் அந்த இளைஞர் நியூஜெர்ஸிமாகாணத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது என்றும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உடனடியாகவயிற்றிலிருந்து போதைப் பொருள்கள் அகற்றப்பட்டன. இவற்றின் மதிப்பு சர்வதேச சந்தையில் 50 ஆயிரம் டொலர்கள் ஆகும்.

## ஈராக் மீதான போர் தொடர்பாக புஷ் என்னிடம் எதுவும் கேட்கவில்லை

### முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் கூறுகிறார்

வாஷிங்டன், பெப். 10

ஈராக் மீது போர் தொடுப்பது பற்றி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் என்னிடம் கருத்துக் கேட்கவேயில்லை என்று அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளார்.

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி அந்நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. அப்போதை யஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ரம்ஸ்பீல்டு ஆகியோரின் உத்தரவின் பேரிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் குறித்து தற்போது வெளியாகியிருக்கும் தனது சுயசரிதையில் ரம்ஸ்பீல்ட் நினைவுகூர்ந்திருக்கிறார். தெரிந்ததும் தெரியாததும் என்று பெயரிடப்பட்டிருக்கும் அந்தப் புத்தகத்தில் ஜனாதிபதி நிக்சன் காலத்திலிருந்து புஷ் காலம் வரை தனது வெவ்வேறு வகையான அனுபவங்களை ரம்ஸ்பீல்ட் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

ஈராக் போருக்கான ஆயத்தப் பணிகள் தொடர்பான பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களில் புஷ்ஷுடன் நானும் பங்கேற்றிருக்கிறேன். எனினும் ஈராக் மீது போர் தொடுப்பது சரியான முடிவுதானா என்று அவர் என்னிடம் ஒருபோதும் கேட்டதாக நினைவில்லை என்று ரம்ஸ்பீல்ட்தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

2003ஆம் ஆண்டில் ஈராக் போர் முடிந்ததும், துருப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்று புஷ் கூறிய கருத்துக்களை ரம்ஸ்பீல்ட் ஏற்க மறுத்தார். இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் அவர் ஈராக் போரிலேயே இதுதான் மிகவும் மோசமான தோல்வி என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்தப் புத்தகம் பற்றி ஏபிசி செய்திச் சேவைக்கு அவர் அளித்த பேட்டியில், ''நாம் தேர்ந்தெடுக்காத பாதை மிகவும் எளிதாக இருந்திருக்கும் என்று கூற முடியாது. அதைத் தெரிந்துகொள்வதும் கடினம்'' என்று கூறினார்.

## அமெரிக்கா, பாகிஸ்தான் ஆப்கான் பேச்சுகள் 23 இல்

வாஷிங்டன், பெப். 10

அமெரிக்கா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையேயான முத்தரப்பு பேச்சுகள் இம்மாதம் 23ஆம் திகதி வாஷிங்டனில் ஆரம்பமாகின்றன.

ஆப்-பாக் எனப்படும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் பிராந்தியத்தின் அமைதி, பாதுகாப்பு ஆகியவை பற்றி இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷாமஹ்மூத் குரேஷி, ஆப்கன் வெளியுறவு அமைச்சர் ஜல்மை ரசூல், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளில் முத்தரப்புக் கூட்டம் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். பெப்ரவரி 25ஆம் திகதி வரை நடக்கும் இந்தக் கூட்டத்தில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது, இருதரப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்த தொடர் விவாதங்கள் நடைபெறும்.

அமெரிக்காவிலுள்ள ஆப்கன் தூதரக செய்தித் தொடர்பாளர் அப்துல் ஜலீல் கஃபூரி, ''பாதுகாப்பான, ஸ்திரமான, வளமான நாடுகளாக பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் உருவெடுப்பதில் இந்த முத்தரப்புப் பேச்சுக்கள் பயனளிக்கும்'' என்றார்.

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

## VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA

## FACULTY OF APPLIED SCIENCE

### *DEPARTMENT OF BIO SCIENCE*

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Bio Science

***Note:***

1. Preference will be given to those who have B.Sc. Special in Chemistry with Botany as optional subject and a Masters degree/ Doctoral Degree related to Environmental Chemistry/Analytical Chemistry or those who have B.Sc. Special degree in Environmental Science and a Masters degree/ Doctoral Degree related to Waste Management/Marine Biology and Management/Wild life Conservation for the Post of Senior Lecturer Grade I /II

2. Preference will be given to those who have B.Sc. Special degree in Chemistry with Botany as optional subject or those who have B.Sc. Special degree in Environmental Science for the Post of Lecturer (Probationary).

### *DEPARTMENT OF PHYSICAL SCIENCE*

Senior Professor/Professor in Information & Communication Technology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Physical Science / Information & Communication Technology

Instructor in Computer Technology Grade II

***Note:***

1. Preference will be given to those who have competency in Mathematics and Computing/Statistics for the Post of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Physical Science.

2. Instructors in Computer Technology in the University system may also apply for the Post of Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in accordance with the UGC Establishments circular Letter No. 10/2009 of 13.11.2009.

### SALARY AND OTHER BENEFITS

| *Post* | *Salary scale* |
|---|---|
| Senior Professor | Rs.57,755 – 11x900 – 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 – 13x850 – 61,955/- p.m. |
| Senior Lecturer Grade I | Rs.42,650 – 7x800 – 48,250/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.37,650 – 11x700 – 45,350/-p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 – 10x585 – 32,750/-p.m |
| Instructor in Computer Technology Grade II | Rs.25, 145-3x585-26,900(EB) 28,655-13x585 -36,260/- p.m |

***Note:***

In addition to the above salary, other allowances approved by University Grants Commission such as academic allowance, special allowance and cost of living allowance will also be paid.

***Statutory benefits:***

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

***Closing date:***

| | |
|---|---|
| Post of Senior Professor/Professor | - 09.05.2011 |
| Other posts | - 09.03.2011 |

Applications for the above posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the downloaded application forms from the University website should be attached a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
09.02.2011

## வைத்தியசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். நாச்சிமார் கோயிலடியில் இயங்கி வந்த யாழ்.மாநகர சபையின் சித்த வைத்திய சாலை இன்று வியாழக்கிழமை முதல் நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்துக்கு பாடசாலையின் பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் அறிவித்துள்ளார். (ற)

***

சங்கானை, பெப்.10

வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சமாசத் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ற-29-313)

## CEYLINCO LIFE

Ceylinco Insurance PLC
Ceylinco Life Tower, 106, Havelock Road, Colombo 05, Sri Lanka. Co. Reg.No. PQ24
Tel: (+94) 11 2461000, 2461481 Fax: (+94) 11 2555959. Website: www.ceylincolife.com E-mail: service@ceylife.lk

## பதவி வெற்றிடம்

ஆசியாவில் முதல் இடம் பிடித்த செலிங்கோ லைஃப் நெல்லியடி, மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் அச்சுவேலி ஆகிய கிளைகளுக்கு விற்பனை நிறைவேற்று அதிகாரிகள் (Sales Excutive) தேவை.

* **வயது:-** 20- 45 ஆண், பெண் இருபாலாரும்
* **கல்வித்தகைமை:-** Advance Level (A/L)

**மேலதிக தகைமைகள்:-**
* ஓர் அணியை நடத்தும் ஆளுமை
* வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி துறையில் வேலை புரிந்திருந்தால் விரும்பத்தக்கது.
* ஓர் ஆலோசகராக மற்றும் மேற்பார்வையாளராக வேறு நிறுவனங்களில் பணிபுரிந்தோர் விரும்பத்தக்கது.

**அடிப்படைச் சம்பளம்:-** 20, 000 + தரகு
கம்பனி மூலம் கார் மற்றும் வீட்டுக்கடன் பெறும் வசதி.
வெளிநாட்டு சுற்றுலா செல்லும் வசதி

**குறிப்பு:-** *தகைமையுடையவர்கள் 20.02.2011இற்கு முன்னர் உதவி அபிவிருத்தி விற்பனை முகாமையாளர், கனகசபை கட்டடம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி எனும் முகவரிக்கு சுயவிவரக்கோவையை அனுப்பி வைக்கவும்.*

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணமுத்து அன்னப்பிள்ளை

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அன்னப்பிள்ளை நேற்று (09.02.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், இராமநாதன் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர், கண்டாவளை), அன்னலஷ்சுமி, காலஞ் சென்ற கிருஸ்ணநாதன் (தபால் ஊழியர், செம்பியன்பற்று) மற்றும் சந்திரநாதன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும் பரிமலாதேவி (கண்டாவளை), காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் வதனநிர்மலா (செம்பியன்பற்று), சோபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்ற சிவஞானம் மற்றும் கார்த்திகேசு, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், பிரபாகரன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), நிருஜன் (லண்டன்), கிரிகரன் (கனடா), கிருபாகரன் (நியூஸிலாந்து), கீர்த்திகரன் (பிரான்ஸ்), கீர்த்திகா (பிரான்ஸ்), கிசோகரன் (பிரான்ஸ்), பிரசாத், திஸ்யந்தன், நித்தியா, திவ்வியா (ஜேர்மனி), பிரியங்கா (ஜேர்மனி), கிருசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கருனி (லண்டன்), தீபிகா (லண்டன்), ஐஸ்விகா (லண்டன்), லோஜிகன் (நியூஸிலாந்து), கபின் (நியூஸ்லாந்து), லக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை வடக்கு.
0774048092, 0213209310.

தகவல்:
குடும்பத்தினர்.

## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

08.02.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2355

வெற்றி எழுத்து: P
வெற்றி எண்கள்: 1 4 6 6 8 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 1 | 4 | 6 | 6 | 8 | 5 | ரூபா.11,407,129/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 1 | 4 | 6 | 6 | 8 | 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 6 | 6 | 8 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 6 | 6 | 8 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 129 |
| 4 பரிசுகள் | | | | | 6 | 8 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1247 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் 12582 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 124211 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 1 | 4 | 6 | 6 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | | 1 | 4 | 6 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 121 |
| 9 பரிசுகள் | | 1 | 4 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1244 |
| 10 பரிசுகள் | | 1 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12465 |
| 11 பரிசுகள் | P | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 49626 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,490,590.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு
**Rs. 12,496,011.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2412 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## அரசாங்க அறிவித்தல்

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் மாகாசபைப் பொதுக்கூட்ட அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றின் கௌரவ நீதிபதியவர்களினால் 2011.02.08 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைக்கமைவாக,

மேற்படி ஆலய வழிபடுநர் சபையின் மகாசபை பொதுக்கூட்டமானது எதிர்வரும் 2011.02.26 ஆந் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் எனது தலைமையில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுதல், வழிபடுநர்சபை உறுப்புரிமைக்குப் போட்டியிடல், உறுப்புரிமைக்கு தேர்வு செய்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

01. வழிபடுநர் சபையில் 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுக் காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் அங்கத்தவராக உள்ள வழிபடுநர்கள் வாக்களிக்கத் தகுதியானவர்கள் ஆகக் கருதப்படுவார்கள்.
02. வழிபடுநர் சபையில் 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுக் காலப்பகுதியான 3 வருடங்களும் தொடர்ச்சியாக அங்கத்தவராக உள்ள வழிபடுநர்கள் அறங்காவலர்சபை உறுப்புரிமைக்குப் போட்டியிட முடியும், அத்துடன், இக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக அங்கத்தவராக உள்ளவர்களே அறங்காவலர்கள் தெரிவில் முன்மொழியவோ, வழிமொழியவோ முடியும்.
03. அறங்காவலர்கள் சபையின் உறுப்புரிமைக்கு 9 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
04. வேட்புமனுத் தொடர்பான படிவங்களை 2011.02.10 ஆந் திகதியிலிருந்து பிரதேச செயலகம், வேலணையில் பெற்றுக் கொள்ளலாம்.
05. இந்த உறுப்புரிமைக்கான வேட்புமனுக்களை 2011.02.18 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. இந்த உறுப்புரிமைக்கு விண்ணப்பித்த பின்னர் தேர்தலில் இருந்து விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2011.02.22 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக அனைத்து வழிபடுநர் சபையின் அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

முத்துலிங்கம் நந்தகோபாலன்,
*பிரதேச செயலர்,*
*தீவுகள் தெற்கு.* (஖/575338)

பிரதேச செயலகம்,
வேலணை.
*2011.02.10*

## உயர்தரப் பரீட்சை விண்ணப்பத் திகதி நீடிப்பு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்த விண்ணப்பத்துக்கான இறுதித் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதியென அறிவிக்கப்பட்டிருந்த போதும் நாட்டின் பல பாகங்களிலும் நிலவும் சீரற்ற கால நிலையைக் கருத்தில் கொண்டு இந்த நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (ஓ-5)

## வளலாயில் புதிய பொதுச் சந்தை

கோப்பாய், பெப்.10

வளலாய் பிரதேசத்தில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 5 மில்லியன் ரூபா செலவில் பொதுச் சந்தை அமைக்கப் பட்டுவருகிறது.

இந்தச் சந்தையின் மூலம் இப் பகுதிவிவசாயநிலங்களில் விளைவிக்கப்படும் பல்வேறு மரக்கறிப் பயிர்களுக்கான சந்தை வசதி கிடைக்கவுள்ளது.

இப்பகுதிவிளை நிலங்கள் மரக்கறிப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததென்பது குறிப்பிடத்தக்கதுடன் பெருமளவு விளைச்சலையும் தருபவை ஆகும். (ஓ-72)




**உயர்தர வகுப்புக்கு ஒரு புதிய உதயம்!**

# கம்பன் கல்லூரி

சங்கத்தானை — சாவகச்சேரி

**2013 A/L வகுப்புக்கள்**


**தமிழ் ஆசிரியர்: அ.வாசுதேவா**

ஆரம்பம்: இன்று (10.02.2011)
வியாழக்கிழமை காலை 8.00மணி

**குறிப்பு :-** ஏனைய பாடங்கள் ஒழுங்கமைத்துத் தரப்படும்.


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

*அன்னை மடியில்:* *07.07.1986* — *அன்னை மடியில்:* *29.04.1980*



*ஆண்டவன் அடியில்:* *10.02.2009* — *ஆண்டவன் அடியில்:* *10.05.2009*

**உலகநாதன் உமாரமணன்** — **உலகநாதன் உதயராஜன்**

அன்னைக்கு பெண்குழந்தை வேண்டும் என்று
நயினாதீவாளிடம் நேர்த்தி வைத்துப் பிறந்தாய்
எம்மடியில் றமணியாய்
மின்னி மறையவே அப்படி ஒரு வதனம்
அண்ணனை அழைத்துவர நின்ற உன்னை
அள்ளி எடுத்தவன் யார்?
அண்ணனையும் உன்னுடன் அழைத்துச்சென்றாயே
அண்ணன் எழுதிய குறிப்புக்கள் ஊமையாய் உறங்க
மீளமுடியவில்லை உங்கள் பிரிவு
வாழ்வு உள்ளவரை.

இல.81,
D10- உருத்திரபுரம்.

குடும்பத்தினர்.




# கொக்குவில் இந்துக் கல்லூரி 9 விக்கெட்டுகளால் வென்றது

வலி.வடக்கு,பெப்.10
இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவினருக்கான யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 9விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 37:1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

துவாரகன் 32 ஓட்டங்களையும் றொபேட், கில்சன், சஞ்சயன் தலா 17 ஓட்டங்களையும் புருசோத்தமன் 14 ஓட்டங்களையும் லக்சன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சாம்பவன் 13ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கார்த்திக் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் உத்தமன் 2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் ஒரு ஓட்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் சிலோசன் 4 ஓட்டங் களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 37 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. சங்கீத் 79ஓட்டங்களையும் சிலோஜன் 46 ஓட்டங்களையும் இராகுலன் 42ஓட்டங்களையும் உத்தமன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த புருசோத்தமன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் லக்சன் 2ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சஞ்சயன், துவாரகன் முறையே 32, 49 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 45.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. சாருகன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் புருசோத்தமன் 33 ஓட்டங்களையும் சிந்துகன் 17 ஓட்டங்களையும் றொபேட்சன் 13 ஓட்டங்களையும் துவாரகன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சாம்பவன் 14.4 ஓவர்களில் 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் சுஜீதரன் 3 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் உத்தமன் 7ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஜனதாஸ், திவாகர் முறையே 3,12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு துப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 5.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த லக்சன் 2 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக் கைப்பற்றினார். (த-86)

## வலைப்பந்தாட்டப் போட்டிகள் 13ஆம் திகதி

வலி.வடக்கு,பெப்.10
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான வலைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஆர்.டி.எஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள கழகங்களின் விவரம் வருமாறு:

✱தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழகம்.

✱இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக்கழகம்.

✱மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் எதிர் மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழகம்.

✱வசாவிளான் மீன் விளையாட்டுக்கழகம் எதிர் தெல்லிப்பழை கலைஒளி விளையாட்டுக் கழகம். (த-86)

# மாவட்ட மட்ட மேசைப் பந்தாட்டத்துக்கு யூனியன், ஸ்கந்தா அணிகள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.10
வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையேயான மேசைப் பந்தாட்டப் போட்டியில் முதலிரு இடங்களையும் பெற்ற யூனியன் கல்லூரி அணியும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மாவட்ட மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 6ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தரோதயக் கல்லூரியில் நடைபெற்ற வலய மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டிக ளிலேயே இந்த அணிகள் வெற்றி பெற்றுள்ளன. ஸ்கந்தா அணி அரையிறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அராலி சரஸ்வதி வித்தியாலய அணியையும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

ஸ்கந்தா யூனியன் அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற யூனியன் கல்லூரி வலய மட்டத்தில் முதலிடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(த-55-86)





அச்சுவேலி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக நிதி முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாரதாதேவி அனந்தசயனன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார்.

## அணி ஒழுங்கு தயாரிப்பு நாளை

வலி.வடக்கு, பெப்.10
வடமராட்சி கல்வி வலயப் பாட சாலை அணிகளுக்கு இடையேயான பெரு விளையாட்டுப் போட்டிகளுக்கான அணி ஒழுங்கு தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலையில் நடைபெறவுள்ளது.

பெரு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளில் பொறுப்பாசிரியர்களைத் தவறாது உரிய நேரத்துக்குச் சமூகம் கொடுக்கும் படி வடமராட்சி உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப2 மணிக்கு யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் அதிபர் தி.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் அ.கிளபோடாசியஸ் பிரதம விருந்தினராகவும், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர் எக்ஸ் நேசராஜா அடிகளார், யாழ்.அரச மரக் கூட்டுத் தாபனத்தின் பிரதேச முகாமையாளர் எஸ்.சிறிஸ்கந்தராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும், யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி எம்.சி.எம் நெல்சன் கௌர விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார்கள். (த-51)

✱ ✱ ✱

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (த-236)

✱ ✱ ✱

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய் கிழமை பி.ப2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நா.பஞ்சலிங்கம் தமைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தீவகவலயக் கல்விப்பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ண்ன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கு.சரவணபவனாந்தன், ஈ.பி.டி.பி கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர்கள் க.தர்மகுலசிங்கம், செல்வி.ம.சுப்பிரமணியம், வலய நிர்வாக உத்தியோகத்தர் க.தெய்வகுலரெட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளுவார்கள். (த-7)

✱ ✱ ✱

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ச.கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் வ.செல்லத்துரையும், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தனும், டயலொக் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் மு.இளையராஜீம், ஈ.பி.டி.பி பொறுப்பாளர் எஸ்.சிவராஜாவும் கலந்து கொள்ளுவார்கள். (த-7)

✱ ✱ ✱

வரணிமகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப1மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற உள்ளது. வித்தியாலய அதிபர் ந.நவரட்ணராசா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வுக்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். (த-122)

# ஒருநாள் கிரிக்கெட் தர வரிசைகள் வெளியீடு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்டத்தில் இந்திய வீரர் விராட் ஹோலி 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடியதால் விராட் ஹோலி 5 ஆவது இடத்திலிருந்து முன்னேறி இருக்கிறார்.

அவரும், தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸும் இணைந்து 784 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் உள்ளனர். மற்ற இந்திய வீரர்களில் அணித் தலைவர் தோனி 730 புள்ளிகள் பெற்று 5 ஆவது இடத்திலும், காம்பீர் 689 புள்ளிகள் பெற்று 9 ஆவது இடத்திலும் உள்ளனர். அதிரடி துடுப்பாட்ட வீரர் யூசுப்பதான் 47 ஆவது இடத்தில் இருந்து 34 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா முதலிடத்தில் உள்ளார். மைக் ஹஸ்சி (ஆஸ்திரேலியா) 4 ஆவது இடத்திலும், டில்சான் (இலங்கை) 6 ஆவது இடத்திலும், சங்ககார (இலங்கை) 7ஆவது இடத்திலும், கலிஸ் (தென்னாபிரிக்கா) 8 ஆவது இடத்திலும், கிரிஸ்கெய்ல் (மேற்கிந்தியதீவுகள்) 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணியின் தலைவர் விட்டோரி 713 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். இந்தியாவுக்கு எதிரான தொடரில் 12 விக்கெட்கைப்பற்றியதால் மோர்கல் 12 ஆவது இடத்தில் இருந்து 2 ஆவது இடத்துக்கு (704 புள்ளிகள்) முன்னேறியுள்ளார்.

அப்துல் ரசாக் (பங்களாதேஷ்) 675 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்தில் உள்ளார். ராய் பரைஸ் (சிம்பாவே) சஹிப் அல்ஹசன் (பங்களாதேஷ்), குலசேகரா (இலங்கை), சுவான் (இங்கிலாந்து), ஸ்டெயின் (தென்னாபிரிக்கா), டிராட் (இங்கிலாந்து) டிசோட் சோபே (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 10 ஆவது இடங்களில் உள்ளனர்.

நாடுகளின் தரவரிசையில் பட்டியலில் மேற்கிந்தியதீவுகள் அணி 8 ஆவது இடத்தில் இருந்து 9 ஆவது இடத்துக்கு பின்தங்கியது. இலங்கைக்கு எதிரான தொடரை அந்த அணி 0-2 என்ற கணக்கில் இழந்ததால் இந்த பரிதாபம் ஏற்பட்டது.

மேற்கிந்தியதீவுகள் அணியும் , பங்களாதேஷ் அணியும் தலா 66 புள்ளிகள் பெற்றுள்ளன. தச வித்தியாசத்தில் பங்களாதேஷ் 8 ஆவது இடத்தை பிடித்தது. முன்பு அந்த அணி 9 ஆவது இடத்தில் இருந்தது.

ஆஸ்திரேலியா 131 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியா 2 ஆவது இடத்தையும், இலங்கை 3 ஆவது இடத்தையும், தென்னாபிரிக்கா 4ஆவது இடத்தையும், இங்கிலாந்து 5 ஆவது இடத்தையும், பாகிஸ்தான் 6 ஆவது இடத்தையும், நியூசிலாந்து 7 ஆவது இடத்தையும் பிடித்தன.

அயர்லாந்து, சிம்பாவே, நெதர்லாந்து, கென்யா ஆகிய நாடுகள் முறையே 10 முதல் 13 ஆவது இடத்துக்கு பின்தங்கின. (15)

# ஸ்பெயின் வீரர் நடாலுக்கு உலக விளையாட்டு வீரர் விருது



ரெனிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு 2010 ஆம் ஆண்டின் உலக விளையாட்டு வீரர் விருது வழங்கப்பட்டது.

திங்கட்கிழமை உலக விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா அபுதாபியில் உள்ள லாரஸில் நடைபெற்றது. இதில் ரெனிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு இந்த ஆண்டுக்கான உலக விளையாட்டு வீரர் விருதும், பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஸ்டருக்கு உலக விளையாட்டு வீராங்கனை விருதும் வழங்கப்பட்டன.

இதே போல உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் கால்பந்து அணிக்கு இந்த ஆண்டுக்கான உலக விளையாட்டு அணி விருது வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் கால்பந்து வீரரும், ஜாம்பவானுமான ஜினாடின் ஜிடேனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டில் பிரான்ஸ் அணி, உலக கோப்பையைப் பெற சிறப்பாக விளையாடியவர் ஜிடேன் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# ஆக்ரோஷமான தோனி மீள வேண்டும் - கபில்தேவ்

உலகக் கோப்பை தொடரில் பழைய தோனியை பார்க்க விரும்புகிறேன். முன்பு மாதிரி அதிரடியாக துடுப்பெடுத்தாட வேண்டும். இது தவிர, ஆக்ரோஷமான அணித்தலைவராக செயல்பட வேண்டும் என, கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 1983 இல் இந்திய அணிக்கு உலகக் கோப்பை பெற்று தந்தவர் கபில் தேவ். எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கோப்பை தொடரில் தோனி தலைமையிலான இந்திய அணி சாதிக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது. இதற்கு, தோனியிடம் நிறைய மாற்றம் ஏற்பட வேண்டுமென கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கபில் தெரிவித்தவை வருமாறு:


சமீப காலமாக துடுப்பாட்டத்தில், தோனியின் அணுகுமுறை ஏமாற்றம் அளிக்கிறது. இவர், கிரிக்கெட்டில் நுழைந்த காலத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். கொஞ்சம் கூட கருணை காட்டாமல் எதிரணியின் பந்து வீச்சை அடித்து நொறுக்கினார். தற்போது பந்தை அங்கும் இங்கும் தட்டி விட்டு ரன் எடுக்கிறார். காலப் போக்கில் வீரர்களின் துடுப்பாட்ட ஸ்டைல் மாறும். ஆனாலும் படுவேகமாக ரன் எடுக்கும் முறையை தக்க வைக்க வேண்டும். எனவே, உலகக் கோப்பை தொடரின்போது தோனி அதிரடியாக ஆட வேண்டும்.

அணித்தலைவர் என்ற முறையில் தலைமைப் பண்புக்கு தேவையான அனைத்து விடயங்களும் தோனியிடம் உண்டு. மிகவும் துணிச்சலாக செயல்படுகிறார். இக்கட்டான தருணங்களை திறம்பட கையாள்கிறார். ஆனால் 'மிஸ்டர் கூல்' என்று இவரை அழைப்பதை விரும்பவில்லை. ஏனென்றால், அணித் தலைவர் என்பவர் இளம் வீரர்களுக்கு முன்னுதாரணமாக மிகுந்த மன வலிமையுடன் திகழவேண்டும். வீரர்களின் உடைமாற்றும் அறை மற்றும் களத்தில் தோனி மிகவும் ஆக்ரோஷமாக இருக்க வேண்டும்.

தற்போதைய உலக கோப்பை தொடரில் கூடுதலாக ஒரு விக்கெட் கீப்பர் இடம் பெறாதது கவலை அளிக்கிறது. தோனிக்கு காயம் ஏற்பட்டால் என்ன செய்வார்கள்? கடந்த 1983 இல் யஷ்பால் சர்மா மற்றும் சமீப காலமாக டிராவிட் பகுதிநேர கீப்பராக திறம்பட செயல்பட்டவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உலகக் கோப்பையில் ஆடிய அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர்கள் அணியில் இருப்பது நல்லது. இந்திய அணி கோப்பை வெல்லும் என்று என் இதயம் சொல்கிறது - என்றார் கபில். (15)

# பிரபல மோட்டார் கார் பந்தய வீரர் கியூபக்கா விபத்தில் சிக்கி படுகாயம்



போர்மியுலா வன் மோட்டார் கார் பந்தயப் போட்டிகளின் முன்னணி வீரர் ரொபர்ட் கியூபக்கா விபத்தில் சிக்கி படுகாயமடைந்துள்ளார். கியூபக்கா ரெனொல்ட் கழகத்தின் சார்பில் பந்தயங்களில் கலந்து கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கியூபக்காவிற்கு ஏழு மணித்தியாலங்கள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், தற்போது அவருக்கு நினைவு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 26 வயதான கியூபக்காவின் கால் மற்றும் கைகள் முறிவடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கியூபக்காவின் உடல் நிலை தேறி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கியூபக்காவுக்கு மேலும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு நாள்களின் பின்னரே, சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் கருத்து வெளியிட முடியும் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். (15)



9 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# கிரிக்கெட்டிலிருந்து முழுமையாக ஓய்வுபெறவில்லை - கங்குலி



கிரிக்கெட்டிலிருந்து முழுமையாக விலகவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து கங்குலி ஏற்கெனவே ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டார். இந்த நிலையில் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறப் போவதாக கங்குலி திங்கட்கிழமை அறிவித்தார். இந்த நிலையில் அதை கங்குலி மறுத்துள்ளார். கிரிக்கெட்டிலிருந்து இன்னும் முழுமையாக விலகவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: பத்திரிகைகளிடம் நான் அவ்வாறு கூறவே இல்லை. எப்படி இது வெளியானது என்றும் தெரியவில்லை. பத்திரிகைகளில் இதைப் பார்த்துவிட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். அப்போதுதான் நான் சொன்னதை, தவறாக அர்த்தம் புரிந்துகொண்டு செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதை அறிந்தேன்.

இந்த விடயம் தொடர்பாக எனது மறுப்பை தெரிவித்துள்ளேன். தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவேன். ஐ.பி.எல் போன்ற போட்டிகளில் எனது கவனத்தை செலுத்துவேன். 2003 ஆம் ஆண்டு அணி எப்படி வலுவானதாக இருந்ததோ அதே போன்ற அணி இப்போதும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எந்த அணியையும் எதிர்க்கும் வகையில் பயமில்லாத அணியாக இந்தியா உள்ளது.

இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் வலுவானதாக உள்ளன. பாகிஸ்தான், இலங்கை அணிகளும் அபாரமாக உள்ளன என்றார் அவர். (15)

## தையல் பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்.புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தையல் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்தவர்கள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல்.1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள தையல் பயிற்சி தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிக்குப் புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோரும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார்.(ற-313)


## உளம் கனிந்த பாராட்டும் வாழ்த்துக்கள்

### திரு.சோதிலிங்கம் இலட்சுமிகாந்தன் B.A.



ஆசிரியர் அவர்கள் அகில இலங்கை சமதான நீதிவானாக (07.02.2011) யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு.பிறேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். கல்விப் பணியுடன் மக்கள் பணி தொடர எல்லாம் வல்ல மண்டைதீவு முகப்பு வயல் முருகப்பெருமான் அருள் மழை பொழிய வேண்டுவதுடன் இவரது பணி மேன் மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சோதி சுந்தரலிங்கம் B.A. (கிராம அதிகாரி, சமாதான நீதிவான்) குடும்பம்.

2/2, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

# ACCA to your future in Finance& Accounting

## JTI- APPROVED TUITION PROVIDER

* ACCA- Association of chartered certified Accountants கற்கை நெறியில் CBE- Computer Based Education புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

### பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்டவர்கள்

* க.பொ.த (சா/த) 5பாடங்கள் சித்தியடைந்தவர்கள் or 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் ACCA கற்கை நெறியில் இணைய முடியும்.
* IC.BC பிரதிகள் நான்கு நிழற்படங்கள், கல்வித்தகைமை சான்றிதழ்களின் பிரதிகளினை சமர்ப்பித்து அனுமதி பெற முடியும்.
* Exemption உயர்கற்கை நிறுவனங்களின் வணிக வியல், முகாமையியல், நிதி, கணக்கீடு தொடர்பான பட்டதாரிகளுக்கு நான்கு பாடங்கள் விளக்கமளிக்கப் படும் (F1-F4) பரீசிலணை குழுவினால் இறுதி முடிவு எடுக்கப்படும்.
* ACCA (Skill modules) - SM விரிவுரைகள், PER பயிற்சிகள் (Audit Firm) 16.02.2011 முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. F5- F9 பாடத்திட்டத்தில் 3 பாடங்களை தெரிவு செய்யமுடியும். இந்த பரிவிற்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
* ACCA புலமைப் பரிசில் பரீட்சை (2010/2011) தோற்றி பதிவு செய்த மாணவர்களின் சான்றிழ், பரிசுப் பொதிகளை அதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் 19, 20ஆம் திகதிகளில் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ACCA மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு:
Coordinator
Jaffna Technical Institute (JTI)
இல.46, மணிக்கூட்டு வீதி,
(Beacon Tuition அருகில்),
யாழ்ப்பாணம்.

TP: 0779047039, 077111205, 0776258034, 0215670345.

E-mail: jtiedu@gmail.com

வலுவான ACCA கல்வியினை பெற்றிட இன்றே எம்முடன் இணையுங்கள்.


# யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பகுதித்தலைவர் செல்வி லீலாவதி அம்பலவாணர் அவர்களின்

# சேவை நயப்பும் பாராட்டும்

## செல்வி லீலாவதி அம்பலவாணர் (BSc.Dip.in Edu.S.L.T.S.I)



ஆரம்பக்கல்வி: யா/ நெடுந்தீவு சைவப்பிரகாசவித்தியாசாலை
இடை நிலைக்கல்வி: யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்
உயர்கல்வி: யா/பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தரப் பாடசாலை
பட்டதாரி: பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் படிப்பு: யாழ். பல்கலைக்கழகம்.

ஆசிரியர் சேவை

★ குரு/ஹிஸ்புல்லா முஸ்லீம் மகா வித்தியாலயம் 27.12.1988- 25.03.1993
★ யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் 26.03.1993- 02.10.1997
★ யா/சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை 03.10.1997- 14.09.1998
★ யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் 15.09.1998- இன்று வரை.

சேவை நலன் பாராட்டுவைபவம் நாளை பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

### உள்ளத்தால் உயர்ந்து நிற்பவர்

உறவுகள் உயர்பதவியாளர்கள் என்பதைவிட உண்மை உழைப்பை மகிழ்வோடு வழங்கும் உத்தமர்களை உயர்வாக மதித்து உள்ளத்தால் வாழ்த்துவது எனது பண்பாகும். இவ்வகையில் எனது உள்ளத்தால் உயர்வாக வாழ்த்தப்படும் உண்மைப் பணியாளரே ஆசிரியை செல்வி லீலாவதி அம்பலவாணர் அவர்கள். நான் துணுக்காய் கோட்டக் கல்விப் பணியாளராக சேவையாற்றிய காலத்தில் இவர் ஆசிரியப் பணியை முழு நிறைவாக ஆற்றி மாலை வேளையில் கோட்டக் கல்விப் பணிமனையின் மேம்பாட்டுக்காக அற்புதமாக சேவை செய்து, தன்னை மறவாத நிலையை ஏற்படுத்தியவர். யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று வரை ஓயாத மனம் நிறைந்த சேவையை வழங்கி சாதனை படைத்துள்ளார். அவர் வளமுடன் வாழ மனமார வாழ்த்துகிறேன்.

திருமதி அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### பணியால் உயர்ந்த பல்துறை ஆளுமைமிக்க பகுதித்தலைவர்

செல்வி லீலாவதி அம்பலவாணர் 23வருட ஆசிரிய சேவையில் 18 வருடங்கள் யா/கனகரத்தினம் ம.ம. வித்தியில் நல் ஆசிரியராக பகுதித்தலைவராக சேவை செய்து மாணவர்களது பெற்றோர்களது பாராட்டைப் பெற்றவர். கணிதம் கற்பித்தலில் தனக்கென தனியொரு இடத்தைப் பெற்ற இவர் மாணவர் குழாத்தினரின் மனதில் அழியாத ஓர் இடத்தினைப் பெற்றவர். கற்பித்தல் பணியுடன் நிர்வாகப்பணியையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் நலனோம்பு வேலைகளையும், அர்ப்பணிப்புடன் நிறைவாகச் செய்தவர். இவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

வி.மாணிக்கம் முன்னாள் அதிபர்,
உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

### துடிப்புறு சேவையாளர்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 18ஆண்டுகளுக்கு மேலாக நல்லாசிரியராய், நல்ல நிர்வாகியாய் எப்போதும் மகிழ்ச்சி கலந்த பூரிப்புடன், துடிப்போடு ஆசிரியை அவர்கள் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து பாராட்டுவதிலே பெருமகிழ்வெய்துகின்றேன். கல்லூரியின் வளர்ச்சிக்கு தோள் நின்ற பக்கபலமாக நின்று செயற்பட்டு கல்லூரி ஓங்கவும், சிறப்புடனவர் வாழ்வு துலங்கவும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சி.மாணிக்கராஜா, கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

### கணிதக் கருப்பொருளைக் கட்டுரைத்தவர்

அன்பு, கனிவு, பொறுமை, தன்னடக்கம், அருமை விருத்தியுடன் உயர் பண்புத் தேர்ச்சிகளால் உருவமைக்கப்பட்ட உன்னதமான பிறவியாகத் திகழ்ந்தவர் தான் செல்வி லீலாவதி அம்பலவாணர் அவர்கள் தன்னலமற்ற ஆசிரியப் பணியில் தன்னையே உருக்கி தியாக சிந்தனையுடன் நேரம் பாராது கல்விக்கான வறுமைப் பிணியைப் போக்கி கணிதக் கருப்பொருளைக் கட்டுரைத்து நின்ற கால நினைவுகள் இக்கல்லூரி மாதாவின் நெஞ்சில் நிலையூன்றிவிட்டன எனலாம். கற்பிப்பதிலும் கல்வி நிர்வாகத்திலும் முனைப்புடன் செயலாற்றிய பெருமையாளராகப் போற்றிப் புகழ்ந்து பாராட்டுவதில் பேருவகை அடைகிறேன். ஓய்வுக் காலம் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுப் பணிதொடர வாழ்வுச் சிறக்க பெருமையுடன் வாழ்த்துகின்றேன்.

திரு.வே.ஞானகாந்தன், அதிபர்.

### கல்லூரிச் சமூகத்தை நேசித்த ஆசிரியை

ஆசிரியப் பணியில் 23வருடங்கள் சிறப்புடன் சேவையாற்றி இன்று தமது 55ஆம் வயதில் ஓய்வு பெறும் எமது வித்தியாலய ஆசிரியை செல்வி லீலாவதி அம்பலவாணர் அவர்கள் நிலையான செல்வமாகி கல்விக்கென தம்மை முழுமையாக அர்ப்பணித்த ஒரு நல்லாசிரியை ஆவார். நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, அழுத்தமான கற்பித்தல் அழுக்காறற்ற மனம் தாராள சிந்தை, கருணையுடனான கண்டிப்பு என்பவற்றை தம்பிடத்தில் கொண்டவர். இவர் பிறந்த இந் நன்நாளிலே ஓய்வுக்காலத்தில் பலவகை நலன்களையும் பெற்று சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கனகரத்தினம் ம.ம.வி.


## தேவை

கணினி வேலை தெரிந்த பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

0750478711

## கார் விற்பனைக்கு

17-xxxx TOYOTA CORONA 14-xxxx TOYATA B11 மிகவும் நல்ல நிலையில் உள்ள A/C உடன் Aloy Wheel என்பவற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.0774528818

## தவறிவிட்டது

நாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியுடைய சுப்பிரமணியம் குமரநாதன் என்பவருடைய தே.அ.இல (752893160v) மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன நல்லூருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் நேற்று (09.02.2011) புதன் கிழமை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்பு -250, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.0777204167

## தவறிவிட்டது

47-9927 வாகன இலக்கம் கொண்ட லொறியின் முக்கிய ஆவணங்கள் கோண்டாவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0773456422, 077665323,0778996367

## தேவை

3பேர் கொண்ட குடும்பத்துக்கு யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வாடகைக்கு வீடு தேவை.

தொடர்பு: 0778742782.

## தவறிவிட்டது

No.24 மணிக்கூட்டு ஒழுங்கை யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய கனகரத்தினம் விஜயகுமார் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் தேசிய அடையாள அட்டை என்பன கந்தர்மடத்துக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் கிறீம்ஹவுஸில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 24, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0779985970.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உயர்திரு.
மாதன் தம்பித்துரை



மண்மகிழ
17.05.1939


மனம்நெகிழ
13.02.2008

மூன்றாண்டுகள் சென்றாலும்
முத்தான உம் நினைவுகள்
உம் முகம் பார்த்துக் காத்திருக்கும் உன்
வரவை
என்றும் உம் நினைவுகளுடன் நாம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### செல்லன் மாணிக்கம்

மட்டுவில் தெற்கைப், பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் மாணிக்கம் நேற்று (09.02.2011) புதன்கிழமை காலமானார்.அன்னார் பவளத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லன் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும், பார்த்தீபன் (ஆசிரியர்), மௌனகீதன், பரிமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சின்னத்தம்பி, பொன்னம்மா, பூமணி, பரமேஸ்வரி, மகேஸ்வரி (கனடா), செங்கமலம் ஆகியோரின் சகோதரனும், அன்பரசி, ரம்மியா, சிவகுமார் ஆகியோரின் மாமனாரும் சந்தோஸ், சஞ்சீவ், பிரவீன், பிரஸ்திகா, பிறின்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சின்னத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## இலங்கைக்கு நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக 51 மில்லியன் டொலர் நிதி உதவி கோரி ஐ.நா. வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால் 7.7 மில்லியன் டொலர் நிதியுதவியே கிடைத்துள்ளதாக மனிதார்ந்தபணிகளுக்கான ஐ.நா. செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்பார்த்த உதவி கிடைக்காத காரணத்தாலும் மக்கள் இரண்டாவது தடவையாகவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதனாலும், தனது கோரிக்கையை இந்த மாத இறுதியில் புதுப்பிக்கப் போவதாக ஐ.நா. அறிவித்துள்ளது. முதற்கட்ட வெள்ளப் பாதிப்பை ஈடுசெய்வதற்கே ஐ.நா. இந்த நிதியுதவியைக் கோரியிருந்தது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள இரண்டாவது கட்ட வெள்ளத்தினால் முன்னையதை விடவும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முதற்கட்ட வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டபோது அனைத்துலக உதவிகள் சில கிடைத்தன. எனினும் இரண்டாவது கட்ட வெள்ளப் பாதிப்புக்காக இதுவரை உதவிகள் எவையும் கிடைக்கப் பெறவில்லை. நட்பு நாடுகள் கூட இந்த வெள்ளப் பாதிப்பை கண்டும் காணாமல்விட்டு விட்டதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## தேர்தலைப் பிற்போட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்துள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது உசிதமல்ல என்றும் அதனால், தேர்தலைப் பிற்போடும்படியும் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசுக்குத் தேர்தலை பிற்போடும் எண்ணமில்லை. இருந்தும் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளருக்குத் தேவையானால் தேர்தலைப் பிற்போடமுடியும் என அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

ஐ.ம.சு.முன்னணியின் 38 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டும், நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டும் அரசு தேர்தலைப் பிற்போடலாமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஒரு சுயேச்சைக்குழு ஆகியன தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக அக்கட்சிகள் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை நாளை மீண்டும் விசாரணைக்கு வருகிறது. இந்த விசாரணையின் முடிவை அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. மனுக்கள் மீதான தீர்ப்பு, சம்பந்தப்பட்ட கட்சிகளுக்குப் பாதகமாக அமைந்தால் தேர்தல்கள் பிற்போடப்படும் என உறுதியாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-01)

## தூத்துக்குடி துறைமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயவிக்கிரம தலைமை தாங்கினார். துறைமுக அதிகார சபை, இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம், கடற்படை, சுங்கத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் குழுவில் அடங்கி இருந்தனர்.

தூத்துக்குடி துறைமுகத்தின் பயணிகள் நுழைவு மற்றும் வெளியேறல் பிரிவு மற்றும் கப்பல்களில் பயணிகளுக்கான இருக்கை வசதிகள் என்பவற்றை அதிகாரிகள் பரிசோதித்தனர். தூத்துக்குடி துறைமுக தலைவரும் உடன் இருந்தார்.

பிளாமிங்கோ ஒன்றியம் மற்றும் ரேடக்ஸ் கப்பல் நிறுவனம் என்பன கொழும்பு-தூத்துக்குடி இடையேயான கப்பல் சேவையை நடத்த உள்ளது. கப்பல்கள் மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தின் பாதுகாப்பு, பயணிகள் வசதிகள் என்பன குறித்து இலங்கை அதிகாரிகள் உடனடியாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதன் பின்னர் கப்பல் சேவையைத் தொடங்குவதற்கான திகதி தீர்மானிக்கப்படும். (உ)

## தோற்றுப் போனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தபோது வெற்றிகரமான அனுசரணையாளராகச் செயற்படுவதற்குத் தவறி இருந்தார்.

இனி ஒரு போதும் அவரைப் பயன்படுத்தும் எண்ணம் எமக்கு இல்லை. விடுதலைப் புலிகளுக்கு நிதி உட்பட புலம்பெயர் தமிழர்கள் வழங்கி வரும் உதவிகளை வெளிப்படுத்த இதுவரை சொல்ஹெய்ம் தவறி இருக்கிறார். தன்னுடைய சொந்த நலன்களுக்காகவே அவர் அனுசரணையாளராக முயற்சிக்கிறார். அதனை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். - என்றார் பிரதமர்.

எனினும் அமைதிப் பேச்சுக்களின் போது தான் பக்கச் சார்பாக நடந்து கொள்ளவில்லை என்பதை அண்மையில் வெளியான விக்கி லீக்ஸ் செய்திகள் நிரூபித்திருக்கின்றன என்று சொல்ஹெய்ம் தான் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். (உ)

## ஸ்ரீ மகாபோதி அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது. இந்தியாவிலிருந்து சங்கமித்தையால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக்கிளை அனுராதபுரத்தில் உள்ள ஸ்ரீ மகாபோதி தூபியில் நடப்பட்டது. ஸ்ரீ மகாபோதியிள்ள அந்த அரசமரத்தின் ஒரு கிளை அநுராதபுரத்திலிருந்து விமாணம் மூலம் பலாலிக்கு நேற்று காலை 10.30 மணியளவில் எடுத்துவரப்பட்டது.

பலாலியில் இந்தக் கிளையை சிரேஷ்ட பிரிகேடியர் பிராங்கிலின் றொட்றிக்கோ பெற்றுக்கொண்டார். விசேடமாக அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அந்த வெள்ளரசுக்கிளை வைக்கப்பட்டு பலாலி வீதியூடாக யாழ்.நகருக்கு எடுத்துவரப்பட்டது. பலாலி வீதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர்கள், இராணுவ வீரர்கள் மலர் தூவி வணக்கம் செலுத்தினர். யாழ். நாக விகாரையில் வைத்து மேஜர் ஜெனரல் ஜானக வல்கம வெள்ளரசுக் கிளையைப் பெற்றுக்கொண்டார். யாழ். நாக விகாரையில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்ட பின்னர் மாதகலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தியாவிலிருந்து சங்கமித்தை முதன்முதலாக இலங்கைக்கு வந்ததாக நம்பப்படும் மாதகலிலுள்ள தூபிக்கு வெள்ளரசுக்கிளை எடுத்துச் செல்லப்பட்டது. சங்கு பிரித் ஓதும் நிகழ்வுகள் இடம்பெற்றன. பின்னர் பிற்பகல் 4 மணியளவில் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் விமானம் மூலம் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நாளை முதல் வவுனியா மிகுந்தலை, இரத்தினபுரி, மாத்தறை, கொழும்புக்கும் அடுத்தது எடுத்துச்செல்லப்படும். இந்த மாதம் 16ஆம் திகதி கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு எடுத்துச்செல்லப்படும். 17 ஆம் திகதி இந்தியாவில் புத்தகயாவில் வெள்ளரசுக்கிளை நடப்படும்.

வெள்ளரசுக் கிளையை களனி பல்கலைக்கழக உபவேந்தரும், வித்தியாலங்கார பிரிவேனாபதி வணக்கத்துக்குரிய வலமத்தியாலே சல தம்ப தேரர், வடமாகாண பிரதான சங்கநாயக்கர் பல்லேசிறினிவாதுபல்லேகம ஸ்ரீனிவாச தேரர், தொடங்கொட தேவமகாநாயக்க ஆகியோர் எடுத்து வந்திருந்தனர்.

இவர்களுடன் 50 இற்கு மேற்பட்ட பிக்குகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் சரத் பெரேராவும் கலந்துகொண்டார். இந்த அலங்கார ஊர்தி பலாலி பவனி வந்த வேளையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. சில இடங்களில் வீதிகளைக் கடக்கவும், பயணிப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை. (ஒ-15)

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் வெலிக்கடை சிறைவரையில் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான ஐ.தே.க. ஆதரவாளர்கள் கலந்துகொண்டு பொன்சேகாவை விடுவிக்கும்படி கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ அரசைப் பதவியில் இருந்து அகற்றி ஐ.தே.க. ஆட்சியில் அமரும் வரை தமது போராட்டம் தொடரும் என்றார்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலும் மயிலும் கனகம்மா

அல்வாய் தெற்கு சின்னாலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலும் மயிலும் கனகம்மா (கனகம்மா ஆசிரியை முன்னாள் உப அதிபர் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி) நேற்று புதன் கிழமை (09.02.2011) காலமானார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:
கந்தசாமி ஜீவராணி(மகள்) செ.கந்தசாமி(மருமகன் - இத்தாலி)

### அம்புறோஸ் அருளானந்தம் புஸ்பராஜா

*(விஜிதா அரைக்கும் ஆலை உரிமையாளர், நீர்கொழும்பு)*

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அம்புறோஸ் அருளானந்தம் புஸ்பராஜா நேற்றுமுன்தினம் (08.02.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ் - அக்கினேசம்மாள் ஆகியோரின் அன்பு மகனும், ஞானசோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மேரி ராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெசி விஜித்தா, மேரி சுஜித்தா, யூட் ரஜித்தா (ஆசிரியை தூய பேதுரு கல்லூரி, கொழும்பு), யூலி அஜித்தா, றெசிக்காந், ஆன் சஜித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானராஜன், சஞ்சயன், அன்ரனி விஜின்ரன், சோபர் ஆகியோரின் அன்பு மாமனாரும் நித்தியானந்தராஜா, காலஞ்சென்ற ஞானபூபதி, மற்றும் அருட்சகோதரி, மாறி யூட்டித் (A.C) சத்தியசீலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகஜோதி காலஞ்சென்ற குலரத்தினம், காலஞ்சென்ற அருட்தந்தை கருணாரத்தினம் மற்றும் இரத்தினஜோதி, அரியரத்தினம், காலஞ்சென்ற யேசு இரத்தினம் மற்றும் ஜீவரத்தினம், அருட்தந்தை ஞானரெத்தினம், உதயசோதி ஆகியோரின் மைத்துனரும் ஜொனஸ்ரன், ஜீனா பற்றிமா, எய்மி, அபி, செரீனா, தேவபாலன், எடிங்ரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் W.S.பெர்னாண்டோ மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.02.2011) மாலை 4 மணிக்கு நீர்கொழும்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
*0314927198*
*0777732361*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## ஆன்மா சாந்தியடைக

எமது மன்றத்தின் ஆன்மீக சேவையாளரும்,
அங்கத்தவருமாகிய கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த
திரு.நா. நாவேந்தன் (ஆசிரியர், புனித திரேசா பெண்கள் கல்லூரி கிளிநொச்சி)
அவர்கள் தாயார்

### திருமதி நா.நாகேஸ்வரி

காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்:
வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம், வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய்

## மரண அறிவித்தல்

### திருவருட்செல்வி சபாநாதன்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கனடாவைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருவருட்செல்வி சபாநாதன் (09.02.2011) புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சபாநாதன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் முரளீதரனின் அன்புச் சகோதரியும் ஆரணியின் மைத்துனியும் டிலக்ஷன், பவீசனின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பன்னீர்ச் செல்வன் (G.S) - மாமனார்.
T.P No: 0213216338.

## மரண அறிவித்தல்

### கந்தையா நேசையா துரைரத்தினம்

*(இளைப்பாறிய ஆசிரியர், ஏழாலை மகா வித்தியாலயம்.)*



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட K.N.துரைரத்தினம் (08.02.2011) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R.V.கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மாக்றேட் நாச்சிப்பிள்ளை கந்தையா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் நல்லதம்பி, தவமணி நல்லதம்பி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற T.ஜெயரூபன், T.R ஜெயகரன் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி - வத்தளை), வண. N.T.ஜெயநேசன்(மதகுரு- தென்இந்தியத் திருச்சபை, உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் , சசிகலா(ஆசிரியை), பிறிசில்லா(ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிஸ், லக்ஷனா, காலஞ்சென்ற ஏஞ்சலின் ஹம்சத்வனி மற்றும் தமித்தா, ஆரபி, அபிஷா, பைரவி ஆகியோரின் அன்புப் பேரனும், திரு.K.E.விஜயசிங்கராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்),காலஞ்சென்ற K.D.சீவரத்தினம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்) மற்றும் திரு.V.K.S.நவரத்தினம்(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் பிரதேச செயலகம் தென்மராட்சி), திரு.-K.S.யோகரத்தினம் (நற்செய்திப் பணியாளர் கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற N.யோகரத்தினம், காலஞ்சென்ற திருமதி R.ரட்ணமலர், மற்றும் திரு.N.அரசரத்தினம், திருமதி J.கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று வியாழக்கிழமை (10.02.2011) மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை தெற்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலங்காடு,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
அருட்பணி. N.T.ஜெயநேசன்
T.P.No-0771727693

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர்
திரு.நாகமகேந்திரராசா அவர்களின்
பாசமிகு மாமனார்
அமரர்

## கணபதி மாணிக்கம்

அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குவதோடு
அமரரின் மறைவினால் துயருற்றி
ருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிசங்கம்
யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, நீர்வேலி.

# மரண அறிவித்தல்கள்

## சுகுணதேவி செல்லையா



மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் செட்டியார் மடம், அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுகுணதேவி செல்லையா நேற்று புதன்கிழமை (09.02.2011) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மாவின் கனிஷ்ட புத்திரியும், காலஞ் சென்ற மனோரஞ்சிதம் மற்றும் சச்சிதானந்தன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், குகராஜன்(செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை), தேவராஜன் (கனடா), யோகராஜன்(U.K), கோமதி(U.K), சாந்திமதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறியதாயும், சமித்தா(கனடா), சஞ்ஜீவா(அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் இல, 294/1 கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) அவரின் இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெறாமகன் ச.குகராஜன்(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை)

தொ.பே.:
0776428502

## மகேந்திரன் அன்ரன் லோகர்ஷன்



யாழ்ப்பாணம், மானிப்பாயை பிறப்பிடமாகவும், துபாயை வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் அன்ரன் லோகர்ஷன் நேற்று 09.02.2011 புதன்கிழமை துபாயில் அகால மரணமடைந்தார்.

அன்னார் மகேந்திரம் - பற்றிமாராணி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், யூட் சுதர்சன் ( CACM போதர்), சசிபமிலா (முன்னாள் ஆசிரியை யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற சோபியா ஜொய்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு.திருமதி மகேந்திரன்
13, கிரகரிஷ் வீதி,
தெஹிவளை, கொழும்பு.

T.p: 0773559944
0712716312
0777286010


விக்னா கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அரசறிவியல்-
திரு.இ.ஸ்ரீரங்கநாதன்B.A(Hons),PGDE,M.A.
A/L 2011துரித மீட்டல், மாதிரிப் பரீட்சைகள்
Sat,Sun-9-10am, Tue-3.30-5.30pm.
A/L 2012 தேசிய இயக்கம் Sat,Sun-8-9
A/L 2013அரசியல் அறிமுகம் Sat,Sun-10-11
★G.A.Q யாழ்., பேருதனை வகுப்புகள் நடைபெறுகின்றன.

வெளிவந்து
விற்பனையாகிறது
SLEAS
திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட
போட்டிப் பரீட்சைகளுக்கான
வழிகாட்டி நூல்
* நுண்ணறிவு
* கிரகித்தல்
* விடயாய்வு
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். T.P-0212226693
212,வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். T.P-0212221637

லண்டன் செல்லும் Student இற்கு
மிகக்குறைந்த விமானக் கட்டணங்
களில் பெற்றுக்கொள்ளலாம்.
COLOMBO - LONDON Rs.45500/-
தொடர்புகளுக்கு:
METRO TRAVELS & Tours (Pvt) Ltd.
62/33, Stanley Link Road, Jaffna.
Tel: 021 5673555, 5673666. Fax: 0212220404

IBM Computers for Sale
(கனடாவில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட மிகச்சிறந்த தரமானது)
Original IBM Think Center
(With Lock)



Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
நம்ப முடியாத விலையில் !!!
Internet Browsing Center களுக்கும்
அரச, தனியார் நிறுவனங்களுக்கும்
உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும்
மிகவும் உகந்தது !!!
IBM System Keyboard,mouse
Rs.22500/=
இன்றே முந்துங்கள் !!!
IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


# டுபாயில் பணிபுரிந்த மானிப்பாய் வாசி மாடிப்படியில் தவறி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், பெப்.10

தொழில் நிமிர்த்தம் டுபாயில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் தொழில் புரியும் இடத்தில் மாடிப் படிகளில் இருந்து வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த மகேந்திரன் அன்ரன் லோகர்ஷன் (வயது 33) என்பவரே மரணமாகியுள்ளார்.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:

பிரஸ்தாப இளைஞர் நேற்றைய தினம் தான் தொழில் புரியும் இடமான வங்கியொன்றின் மாடியில் அவசரமாக எறிய போது படியின் பின்புறமாக வீழ்ந்துள்ளார்.

இதனால் தலையின் பின்பகுதி பலமாக அடிபட்டதால் அவர் அவ்விடத்திலேயே மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தொழில் நிமிர்த்தம் கடந்த 2006ஆம் ஆண்டு டுபாய்க்குச் சென்று அங்கு வசித்து வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# புலிகள் இயக்கத்தை மீள இயக்குவதற்கு கப்பம் கோரியவர்கள் தடுப்புக் காவலில்

கொழும்பு, பெப். 10

கொழும்பு, கதிரேசன் வீதியைச் சேர்ந்த பீடி இலை இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவரிடம், புலிகள் இயக்கத்தை இயக்குவதற்கு 70 லட்சம் ரூபா கப்பம் கோரிய இருவர் கொழும்பு பிரதான நீதிவானின் அறிவுறுத்தலின்பேரில் கொழும்பு குற்றப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பம்பலப்பட்டியில் வசிக்கும் குறிப்பிட்ட வர்த்தகரிடம், இவர்கள் தொலைபேசி மூலம் பணத்தை கேட்டதுடன், இவ்வாறு செய்யா விடின் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கெடுதி விளைவிக்கப்படும் எனவும் மிரட்டியுள்ளனர். இது தொடர்பில் குறிப்பிட்ட வர்த்தகர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதன்படி, பணம் கொடுக்கும்போது கப்பம் கோருபவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க பம்பலப்பட்டிப் பொலிஸார் ஒழுங்கு செய்தனர்.

செட்டித்தெருவில் வைத்து, வர்த்தகர் பணத்தைக் கையளித்த போது இருவரும் கைது செய்யப்பட்டனர். மொஹமட் சலாகுதீன் மொஹமட் அஸ்லம் மற்றும் இந்தியப் பிரஜையான நூர் அமித் முகமட் அஷ்ரப் ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.


THE TRUTH SHALL MAKE YOU FREE · UDUVIL
உடுவில் மகளிர் கல்லூரி
2010ஆம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில் தோற்றிய
மாணவர்கள் கவனத்துக்கு
2011இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு
இரண்டாவது தடவையாகத் தோற்றும் மாணவிகள்
(A/L 2010 Batch) அனைவரும் இன்று
(10.02.2011) வியாழக்கிழமை பாடசாலைக்கு
சமுகமளிக்கவும்.
அதிபர்-
உடுவில் மகளிர் கல்லூரி.





புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு
அன்புடையீர்!..
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் தைமாதம் 27ஆம் நாள் இன்று (10.02.2011) வியாழக்கிழமை சித்த யோகமும் பரணி நட்சத்திரமும் கூடிய காலை 8.00- 9.30 மணி வரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற
தேவி கருமாரி நகைமாடம்
என்னும் தங்க வியாபார ஸ்தாபனத்தை இல.66, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய தேவி கருமாரி நகைமாடமும் இல.205/6, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய ஸ்ரீகருமாரி நகைமாடமும் இல.171, 173 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் மாற்றப்பட்டு புதுப் பொலிவுடன் ஆரம்பிக்க இறைவன் திருவருள் வழங்கியுள்ளார் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
* இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
உரிமையாளர்,
ச.கனகசபாபதி (சபா)
இல.171, 173, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P: 0212229508, 0774373786.

IDM
City Campus # 3
தேர்ச்சி, அனுபவமிக்க பேராசிரியர்கள், வளவாளர்கள்
இணைந்து நடாத்தும் மாபெரும் பயிற்சிபட்டறை
பதிவுகளுக்கு முந்துங்கள்
(கட்டணம்:-300/=)
இடம் :- நாவலர் மண்டபம்
காலம் :- சனிக்கிழமை
நேரம் :- 10.00am – 05.00pm
திகதி :- 12-02-2011
விடயம்:- சர்வதேசக் கல்வி, மொழி &
தொழில் வழிகாட்டல் பயிற்சிபட்டறை
அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்
edexcel advancing learning, changing lives
மேலதிக ஆலோசனையா...........!
தொடர்புக்கு(8.30am-5.00pm)
Tel :- 0212229901
0775449833
IDM Affiliated Campus
# 216, Navalar Road, Jaffna.
info@idmcc3.lk
www.idmcc3.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.